மே

மாதாந்த குடும்ப சஞ்சிகை

# ஒளி அரசி

நல்லதொரு குடும்பம்

ஒளி 05 இதழ் 05

மங்கையரின் தோழி

பக்கங்கள் : 80 (68+XII)

100/=

அரசியலோ ஆபாசமோ கலக்காத அற்புத படைப்பு



இசை எனும் தெய்வீகம்



இலக்கியம் தந்த இல்லறம்

☆ புத்தகம் ஓர் அறிவியல் ஆயுதம்



## அன்னை மீட்டும் அன்பு வீணை

+ அறிவுக்கொத்து
+ தரம் 5 திருத்தற்சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தம் புதிய வெளியீடுகள் வாங்கி விட்டீர்களா?







முன்பள்ளி சிறார்களுக்கானது

O/L மாணவர்ளுக்கானது

அனைத்து பத்திரிகை முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் இடங்களில் இருந்தவாறே பிரதிகளை பெற்றுக்கொள்ள 0714273035 /0776569617 / 0718628372 என்ற இலக்கத்திற்கு அழையுங்கள்

**கல்விக்கூடங்களுக்கு விசேட கழிவு உண்டு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY



06 வாழ்வோடு போராடுங்கள்



19 தாய்மையில் பெண்மை



08 வற்றாத கங்கை நதியாய்



54 தலைமைத்துவம்



57 வெள்ளித்திரை



12 உறவென்பது சுவாசமானது



16 விழி தேடிய வழி



59 பார்ப்பவைதான் பாடமாகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாந்த குடும்ப சஞ்சிகை

# ஒளிஅரசி

மங்கையரின் தோழி

**வெளியீட்டாளர்** மாஸ்மீடியா சேவிஸ்
இல. 70, டேவிட்சன் றோட், கொழும்பு - 04

**ஆசிரியர்கள்**

பிரதம ஆசிரியர் : திருமதி யசோதை சரவணபவன்
ஆசிரியர் : திரு. இ. ஜனதன்
இணை ஆசிரியர் : திருமதி பா. ஜயிலா

**எழுத்தாளர் குழு**

| | |
|---|---|
| திரு. ச. லலீசன் | அச்சுவேலி |
| நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் | கொழும்பு |
| திருமதி தேவா மாதவன் | கொழும்பு |
| இரா. நிசாந்தன் | வட்டக்கச்சி |
| ஸகீட். எச். சப்றின் | மருதமுனை |
| கவிஞர் பிறேம்ராஜ் | கொழும்பு |
| திருமதி சூர்யா சிவரூபன் | வட்டுக்கோட்டை |
| எஸ். எல். மன்சூர் | அட்டாளைச்சேனை |
| செல்வி பாலாஜினி | பளை |
| திருமதி சுமித்ரா ராகவன் | கிளிநொச்சி |
| து.திலக் (கிரி) | சுவிஸ் |
| வே. முல்லைத்தீபன் | ஒட்டுசுட்டான் |
| காரை. எம். பி. அருளானந்தம் | யாழ்ப்பாணம் |
| இ.அன்ரன் இருதயகுமாரன் | நெல்லியடி |

**ஆலோசகர்கள்**

திருமதி. கோகிலா மகேந்திரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், பிரபல எழுத்தாளர்)
திரு. த. ஜெயசீலன் (கவிஞர், மாநகர சபை ஆணையாளர்)
திரு. எஸ். செல்வராஜா (ஓய்வுநிலை மாகாண கல்விப்பணிப்பாளர்)
திரு. எஸ். மகேஸ் (ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி)
திருமதி சிவமலர் சுந்தரபாரதி (அதிபர்)
மைமூனா அகமட் (ஓய்வுபெற்ற நீதியரசர்)
திரு. சி. நற்குணலிங்கம் (ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி)
திருமதி ஆனந்தராணி நாகேந்திரன் (சங்கீதபாட ஆசிரிய ஆலோசகர்)
திரு. ஏ. ஜெயக்குமார் (ஓய்வுபெற்ற அதிபர்)
திரு. எஸ்.சரவணபாவானந்தன் (கோட்டக்கல்வி அதிகாரி )
திரு. ஏ.ஜே.ஞானேந்திரன் (சிரேஸ்ட எழுத்தாளர் - சுவிஸ்)
நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் (ஊடகவியலாளர்)

**சட்டஆலோசகர் :** திரு. ரட்ணம் ரகுராஜா

**தபால் முகவரி**

ஆசிரியர், 'ஒளிஅரசி' இல. 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

**தொடர்புகளுக்கு :**

தொலைபேசி : 0114320695
துரித அழைப்பு : 0718628369,0714273035
தொலைநகல் : 0112506610
E-mail : oliarazi33@gmail.com
Viber - 0714273035


**இதழ் வடிவமைப்பு**

எஸ்.மகாவிஷ்ணு
எம்.ஜீவநீதன்


பிரதம ஆசிரியரின் உள்ளத்திலிருந்து

# வாழ்வோடு போராடுங்கள்

வாசகர்கள் அனைவருக்கும் அன்பு கனிந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்த்தால் பல அவமானங்கள், தோல்விகள் இவற்றுக்கப்பால் வாசகர்களாகிய உங்கள் பாராட்டுகளும் ஒத்துழைப்புமே கண்முன்னே தெரிகின்றது.



ஒளிஅரசியின் வெற்றிப்பாதைக்காக உழைக்கும் நேசம் மிக்க பணியாளர்களுக்கும் எம்மோடு பயணிக்கும் வாசக நெஞ்சங்களிற்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிப்பூக்களைச் சமர்ப்பிக்கின்றோம். மனதை வருத்தும் ஒரு விடயம் பற்றிய பார்வையோடு இம்மாத இதழில் உங்களோடு.

இன்று அதிகளவில் நாம் காணும் கேட்கும் பாரிய விடயமாக உள்ளது தற்கொலை என்ற கொடிய விடயமே. எமது வாழ்க்கையில் ஏற்படுகின்ற தோல்விகளுக்கெல்லாம் தற்கொலை தான் தீர்வு என்றால் எப்போதோ அழிந்து போயிருக்கும் இந்த உலகம்.

இந்த உலகில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வித கடமையுடனும் பொறுப்புடனுமே கடவுளால் படைக்கப்பட்டுள்ளது. ஐந்து விரல்களும் ஒரே மாதிரியானவை அல்ல, அதனை எண்ணி விரல்கள் கவலையடைய முடியாது. கடலில் கலந்துவிட்ட நீருக்காக கங்கை நதி அழமுடியாது. மரத்திலிருந்து இலை விழுகிறதே என மரம் துக்கம் கொண்டாட முடியாது, நதி நீரைப்போல நாம் பயன்படவில்லையே என கடல் கவலைகொள்ள




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. படகைச் சுமக்கவில்லையே என நதியும் துக்கமடைய இயலாது. ஒவ்வொன்றும் ஒவ்வொருவித கடமைக்கானது, மாட்டுத் தொழுவில் பிறக்கவேண்டும் என்பது மீட்பர் இயேசுவின் பணி. பாரதப்போரில் சாரதியாய் இருக்கவேண்டும் என்பது கண்ணனின் பணி. அதில் போர்புரிய வேண்டும் என்பது அர்ச்சுனன் பணி. ஆனால் கண்ணன் உரைத்தவைகளே கீதையானது என்பது உலகில் யாவரும் அறிந்ததே.

ஒரு கூட்டத்தில் அறிஞர் ஒருவர் உரையாற்றிக் கொண்டிருந்தார், மனித மனங்களின் மகத்துவம் பற்றி. அவர் ஆயிரம் ரூபாய் தாளை எடுத்து பார்வையாளர்களைப் பார்த்துக் கேட்டார், இது என்ன?

அனைவரும் கோரசாக 'ஆயிரம் ரூபா' என்றனர். அவர் அத்தாளை எடுத்து கைகளினால் நன்றாக கசக்கிவிட்டு மீண்டும் கேட்டார் இது என்ன? அப்போதும் அனைவரும் 'ஆயிரம் ரூபா' என்றனர் கோரசாக. மீண்டும் அத்தாளை கால்களின் கீழே போட்டு கசக்கிவிட்டு இப்போது இது என்ன எனக் கேட்டார். அனைவரும் ஆயிரம் ரூபாய் என்றனர். அவர் அத்தாளை தனது கைகளில் எடுத்து விட்டு வெறுமனே காகிதத்தில் அச்சடிக்கப்பட்ட தாள் எவ்வளவு கசக்கினாலும் தனது பெறுமதியை இழக்கவில்லை. மனிதமனம் சிறிய துன்பத்தை கண்டதும் தனது பெறுமதியை உணராமல் தன்னைத்தானே அழித்துக்கொள்கிறதே இது என்ன நியாயம் என்றார்.

அன்பான உறவுகளே! வாழ்க்கை என்பது பல போராட்டங்களும் பலதரப்பட்ட சோதனைகளும் நிரம்பியதே. துன்பத்தைக் கண்டு துவண்டுவிட்டால் உயிரை மாய்த்துவிட்டால் போராட்டம் என்பதன் பொருள் புரியாது. கடவுளின் படைப்பில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கடமைக்கானதே. போராடாமல் கிடைத்தால் வெற்றிகள் கூட சுகிக்காது. புரிந்து கொள்வோம். உணர்ந்து நடப்போம். வெற்றிக் கனிகளைப் பறிப்போம்.

பிரதம ஆசிரியர்

**எடுத்துக்காட்டு**

**பொதுமறையில் இருந்து.**

**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.**

**இம்மாத சிந்தனைக்கு:**

எதிலும் விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை மனத்தால் எப்போதும் நினைப்பவருக்கு எவ்விடத்திலும் துன்பம் நேராது.


## ஒளிஅரசி சந்தா விபரம்

### அன்பு வாசகர்களே!

ஒளிஅரசியை உங்கள் வீட்டிலிருந்தவாறே பெற்றுக்கொள்ள வேண்டுமா? கீழுள்ள வங்கி கணக்கிலக்கத்திற்கு பணத்தை வைப்பிட்டு வைப்புத்துண்டு, தொலைபேசி இல, தபால் முகவரி என்பவற்றை தெளிவாக எழுதி ஒளிஅரசியின் கடிததொடர்பு முகவரிக்கோ அல்லது 071 4273035 என்ற வைபர் இலக்கத்திற்கோ அனுப்பவும்.

| | |
|---|---|
| கட்டணத்தொகை | உள்நாடு - ரூ. (85X12=1020) + (30X12=360) =1380 |
| வங்கியின் பெயர் | ஹற்றன் நஷனல் வங்கி. |
| வைப்பிடவேண்டிய பெயர் | mass media services |
| வங்கி கணக்கு இலக்கம் | 009010383405 |
| வெளிநாடு | 50$ |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் விமர்சனம்

# "இனிவரும் நாட்களெல்லாம்"




## இனித்திடும் பாக்கள் எல்லாம் ஓர் பார்வை

நிகழ்கால மற்றும் கடந்தகால தோற்றத்தில் மனிதனின் நிறமும் வடிவமும் இல்லாது வெறும் கற்பனைச் சுவரில் ஏந்தி நிற்கும் சித்திரம் போல் கவிதைகள் உருபெறுவதில்லை. இலக்கியத்தின் பாடுபொருள், வாழ்க்கையின் அனுபவம் சார்ந்தே வெளிப்படுகிறது. அனுபவிக்காத எந்த ஒரு விடயத்தையும் எந்த கவிதையிலும் காணமுடியாது.

ஒரே வரியில் சில நேரங்களில் வாசகனின் உள்ளத்தில் பளிச்சிட வைக்கும் வகையில் பொருளையோ அல்லது காட்சியையோ படைத்துக்காட்டும் பண்பு சங்க கால இலக்கியங்களில் காணலாம். அந்த வகையில் கவிஞர் நஜ்முல் ஹுசைனின் கவிதைகளில் ஒற்றை வரியில் மனதை கவரக் கூடிய பல கவிதைகள் இருந்த்து. இனிவரும் நாட்களெல்லாம் நூலில் பல கவிதைகளை நான் மீண்டும் மீண்டும் வாசித்தேன். அதன் வார்த்தைக் கையாடல் மிக நுட்பமாக ஒரு எழுத்தில் எப்படி வித்தியசப் படுத்துவது என்பதை இவரின் கவிதைகளில் காணக்கூடியதாக இருந்தது. உதாரணமாக ''மக்கம் பக்கம் வைக்கிறது சொர்க்கம்'' இவ்வாறான வரிகள் வாசித்த பின் மறப்பதும் இல்லை.பதிந்து விடுகிறது. இதுவே ஒரு கவிஞனின் வெற்றி.

நகர்புற வாழ்க்கையை படம் பிடித்து காட்டிய போதும் கவிதை சந்தங்களில் அழகாய் இசைக்கிறது. இவ்வாறான கவிதை நூல்களை வாசிக்கும் போது புதிய தலைமுறையினர் நிறைய இதில் இருந்து கற்றுக் கொள்ளலாம்.

''இஸ்லாம் எங்கள் வழி இன்பத் தமிழ் எங்கள் மொழி ''எனும் கவிதையில்

பல விடயங்களை உள்ளடக்கி இருக்கின்றார் கவிஞர். கவிக்கோ அப்துல் ரஹ்மான் போன்ற ஆளுமைகள் உட்பட சாஹிரா கல்லூரியையும் ஹிரா குகையையும் தனது வார்த்தைகளால் கச்சிதமாய் சொற்களில் கோர்த்து இருக்கிறார்.

அது ஒரு தொடர் போல நகர்வது வித்தியாசம் .

**''அவள் எப்போதும்**
**ஒரு மூச்சாய்**
**எழுதுவதில்லை**
**குடும்பத்தினருக்காகவும்**
**இடை இடையே**
**பெருமூச்சு விட்டுத்தான் எழுதுகிறாள்''** ஒரு சில வரிகளில் இலக்கிய துறையில் இருக்கும் பெண்களை அப்படியே அகத்துறிஞ்சி இருக்கின்றார். மொத்த துன்பமும் இந்த வரிகளில் சொல்லி இருப்பது அவரின் புலமையை உறுதிசெய்கிறது.

''இனிவரும் நாட்களெல்லாம்'' கவிதை தொகுதியில் வாழ்வியல், மார்க்கம் என எல்லா வகையான கவிதைகளும் அடங்கியுள்ளன. வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சித்தரிகப்பட்டும் கற்பனைகளில் கத்தரிக்க முடியாத உண்மைகளை உவமைகளுடன் சுமந்திருக்கும் இந்த கவிதை தொகுதி ''இனிவரும் நாட்களெல்லாம் இனித்திடும் பாக்கள் எல்லாம்''

சிமாரா அலி ''ஊதாப்பூ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

# எங்க அம்மா ராணி (U)



எம் கே பிலிம்ஸ் சார்பில் சி.முத்து கிருஷ்ணன் தயாரிக்க, சாய் தன்ஷிகா, வர்ணிகா, வர்ஷா, சங்கர் ஸ்ரீ ஹரி ஆகியோர் நடிக்க, எஸ். பாணி எழுதி இயக்கி உள்ள படம் எங்கம்மா ராணி.

காதலை குடும்பம் ஒத்துக் கொள்ளாத நிலையில் மலேசியா சென்ற காதலனை பின் தொடர்ந்து சென்று திருமணம் செய்து கொள்கிறாள் துளசி (சாய் தன்ஷிகா). அவர்களுக்கு மீரா (வர்ணிகா) தாரா (வர்ஷா) என்ற ஒரே உருவத் தோற்றம் கொண்ட இரட்டைக் குழந்தைகள் பிறந்து வளர்கின்றன. பிள்ளைகள் சிறுமிகளாக இருக்கும் நிலையில், கம்போடியா சென்ற கணவன் காணாமல் போகிறான். கணவனைத் தேடியபடியே மலேசியாவில் வேலை செய்து பிள்ளைகளை துளசி காப்பாற்றும் நிலையில், ஒரு நாள் மயங்கி விழுந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறுமி தாரா (வர்ஷா) திடீரென இறந்து போகிறாள். ஆனால் முன்பே இருந்த நோய்தான் தாராவின் மரணத்துக்குக் காரணம் என்று கண்டு பிடிக்கும் முரளி, அதே நோய் மீராவுக்கும் (வர்ணிகா) இருப்பதையும் மீராவும் இறக்கப் போகிறாள் என்பதையும் கண்டு பிடிக்கிறான்.

கணவனும் இல்லாத நிலையில் இரண்டாவது குழந்தையும் மரணிக்கும் என்பதை துளசியால் தாங்க முடியாத சூழல். இந்த நிலையில், மீராவை வேறொரு சிறுமியின் ஆவி பிடிக்கிறது. அநியாயமாக கொல்லப்பட்ட அந்த சிறுமி மீராவின் உடலில் இருந்தபடி தன்னைக் கொன்ற ஒருவனை கொல்கிறது. இன்னொருவனைக் கொல்ல முயல்கிறது. இதனால் தனக்கும் மீராவுக்கும் வரவிருக்கும் பிரச்சினைகள் குறித்து அஞ்சுகிறாள் துளசி.



ஆனால் மீரா உடலில் ஆவி இருக்கும்போது மீராவுக்கு நோய் இல்லாமல் போகிறது . அதாவது மீராவின் உடலில் ஏதாவது ஆவி தொடர்ந்து இருந்தால், அவளுக்கு நோய் வரவே வராது

அதே நேரம் புதிதாக வந்த குழந்தை ஆவிக்கும் துளசிக்கும் பாசம் வருகிறது. அதே போல, குழந்தையின் ஆவி இன்னொருவனையும் கொன்று விட்டால் அந்த குழந்தையின் ஆவி மீராவை விட்டுப் போய்விடும். மீராவுக்கு மீண்டும் நோய் வந்து விடும். அதனால் துளசி தயங்க, துளசியை பிரிய குழந்தையின் ஆவியும் தயங்க, இதையும் மீறி கொலைகாரன் கொல்லப் படுகிறான். மீராவை விட்டு குழந்தையின் ஆவி சோகத்தோடு போய் விடுகிறது. மீராவுக்கும் மீண்டும் நோய் வருகிறது. இந்த நிலையில் துளசி என்ன செய்தாள் என்பதே எங்கம்மா ராணி. வித்தியாசமான கதை. மலேசியாவில் படமாக்கப்பட்டுள்ள படம். மலேசிய தமிழர்கள் பலர் நடித்துள்ளனர். மலேசிய தமிழ் அருமை

இளையராஜா இசையில் வா வா மகளே பாடல் மனம் கனக்க வைக்கிறது. பின்னணி இசையிலும் ஆங்காங்கே ராஜா வாசம்

எனினும் ஆவிக்குழந்தை, அதன் பாசம், ஆவி இருந்தாலும் பிரச்சினை இல்லாவிட்டாலும் பிரச்சினை என்று சில நுணுக்கமான முடிச்சுகளை போட்டதில் கவனிக்க வைக்கிறது எங்கம்மா ராணி. ஒரு தாயின் ஆழமான அபரிமிதமான அன்பை அள்ளி அள்ளி கொட்டியிருக்கிறது எங்கம்மா ராணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிகாலைப் பொழுது மெல்ல உதயமானது. சூரியன் தன் பொற்கிரணங்களை அள்ளி இறைத்துக்கொண்டிருந்தான். வாசல் ஓரமாய் கிடந்த கதிரையில் ஒய்ந்து அமர்ந்திருந்தேன். ஆயிரம் போராட்டம் மனதிற்குள். நேற்றைய நினைவுகள் உள்ளத்தை அறுத்தெடுத்தன, அந்த மனப்போராட்டத்தோடு அப்படியே உறங்கிவிட்டிருந்தேன், நடுஇரவில் அம்மா வந்து எழும்பி ''உள்ள வந்து படு'' என்று சொன்னது நினைவில் இருந்தது, ஆனால் நான் அப்படியே உறங்கிவிட்டிருந்தேன், உள்ளத்தை களில் இருந்து விடுபட்டு ''என்ன?'' என்றேன்.

''என்ன யோசிக்கிறாய்?'' என்றாள்,

''ஒன்றுமில்லை'' அவசரமாய் சொன்ன போதும் உள்ளம் இடிக்க ''அது-----'' என இழுத்தபடி நடந்த அத்தனையையும் அவளிடம் கொட்டிவிட்டேன்,

என்னை நிமிர்ந்து பார்த்த அவளின் பார்வையில் நான் பொசுங்காமல் போனது ஆச்சரியமே. என்னைப் பார்க்கவே பிடிக்காதவள் போல பார 'வையைத் தாழ்த்திக்கொண்டாள். என்னால் அவளின் உதாசீனத்தை தாங்க முடியவில்லை. எப்போதும் நேர்மையாய் இருக்கும் கானகியின் அந்தப் பார்வையே நான் மாபெரும் தவறு

கோபிகை

# வற்றாத கங்கை நதியாய்



## அன்னையர் தின சிறப்பு சிறுகதை

அரித்த எண்ணங்களை தூக்கிப்போட முடியாது தவித்துக் கொண்டிருந்தேன். அம்மாவிடம் கேட்டுவிட்டதென்னவோ சரிதான் என உள்ளம் வாதாடினாலும், பாதி மனம் ஏதோ தவறு செய்துவிட்டதாய் தவித்துக் கொண்டிருந்தது.

அவசரமாய் வெளியே வந்த அம்மா, ''எல்லாம் எடுத்து வைச்சிட்டன், சாப்பிடு'' என்றபடி நடந்துவிட்டார். அப்போதுதான் பார்த்தேன், அம்மாவின் கையில் பயணப்பை ஒன்றை. என்ன ஏதெனக் கேட்பதற்குள் விரைந்து நடந்துவிட்டார். மனக் குழப்பத்துடன் அப்படியே அமர்ந்துவிட்டேன்.

''ஆது ----ஆது'' உலுக்கிய ஒலியில் விழித்துக்கொண்டேன், அருகில் கானகி. இரவின் வழிப்பில் மீண்டும் அப்படியே உறங்கிவிட்டிருந்தேன். கானகி என்னோடு கூடப்படிப்பவள், என் காதலியும் கூட. பல்கலைக்கழக படிப்பு முடிந்ததும் திருமணம் என இரு வீட்டிலும் பச்சைக்கொடி காட்டியிருந்தனர். எல்லாம் சிறப்பாக இருந்த இவ்வேளையில் தான் அப்பாவின் அந்த இழப்பு, விபத்து ஒன்று அவரைப் பலி கொண்டிருந்தது.

''ஆதவன்'' ஓங்கி கூப்பிட்ட கானகியின் சத்தத்தில் அவசரமாய் நினைவு

செய்துவிட்டேன் என்பதை எனக்கு உணர்த்தியது.

''அம்மா எங்கே இப்போ?'' என்றாள்,

''தெரியல காலையிலயே போய்ட்டா என்றேன்.

''வா -------அம்மாவிடம் போய் மன்னிப்பு கேட்கலாம்,'' என்றாள்.

''ஏன்? மனம் முரண்டியது,

''அம்மா இன்னும் என்னிடம் விளக்கம் சொல்லவில்லை'' என்றேன்.

''என்ன விளக்கம்?'' என்றாள் ஒரு வித தோரணையாய்.

''அப்பா இறந்த பிறகு தினமும் காலையில் போய் இருட்டினதுக்குப் பிறகுதான் வீட்டுக்கு வர்றாவாம், எங்க போறீங்கன்னு கேட்டேன், மழுப்பலா பதில் சொன்னா, நேற்றைக்கு முதல் நாள் ராத்திரி வீட்டுக்கு வரவே இல்லையாம், எங்க போனீங்கன்னு கேட்டேன், பதில் சொல்லல, உனக்கெதுக்கு அதெல்லாம், படிக்கிற வேலையைப்பாரு என்றா, சின்ன வயசில இருந்து என்னை விடுதியில விட்டுத்தான் படிக்கவைச்சா, அப்பா இறந்த பிறகு, அம்மாகூட இருக்கலாம்னு நினைச்சா, என்னை வலுக்கட்டாயமா அங்கயே அறை எடுத்து தங்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிட்டா, நான் வேணாம்னு எவ்வளவு சொல்லியும் கேட்கல, நான் டொக்ரர் ஆகணும் கிறதில தீவிரமா இருக்கிறதாலதான் 'இப்படி பண்றான்னு நினைச்சேன், ஆனா எதிர்வீட்டு அங்கிள் சொல்றதைப்பாத்தா ------

''ஆதவன் ---- கானகி ரௌத்ரமாய் கத்தினாள், அதிர்ந்து நிமிர்ந்தேன், ''வார்த்தையை கவனமா பேசு, அவ உன்னோட அம்மா'' என்றாள்.

''கானகி, மத்தவங்க சொல்லும் போது எனக்கு எப்படி வலிக்குது தெரியுமா?'' என்றேன்.

''அந்த விளக்கம் எனக்குத் தெரியும், அம்மா சொன்னா'' என்றவள், ''எதிர்வீட்டு அங்கிள் உன் அப்பாவோட நண்பா' என்றது மட்டும் தான் உனக்குத் தெரியும், அவரோட மோசமான இன்னொரு பக்கம் தெரியாதில்லை, உன் அப்பா இறந்ததுக்கு பிறகு மட்டும் அம்மாவுக்கு கஸ்டம் இல்ல, இருக்கும் போதும் கஸ்டம் தான், அவருக்கு மது, மாது ரெண்டிலுமே அதிகமா ஈடுபாடு, ஒத்தைப் பிள்ளையான நீ அத தெரிஞ்சு கொள்ளவோ அதனால் உன் அப்பாவை வெறுக்கவோ கூடாதுன்னு நினைச்சுத்தான் அம்மா உன்னை விடுதியில விட்டு படிக்க வைச்சா. அப்பவே உன் அப்பாவின் நடத்தையை தெரிஞ்சுகொண்ட அவர் நண்பர் உன் அம்மாவிடம் எப்போதும் ஒருவித காமப் பார்வையைத் தான் வீசியிருக்கிறார். எப்பவுமே தன்னைக் காத்துக்கொள்ள உன் அம்மா பெரும்பாடு பட்டிருக்கிறாங்க. பாதுகாப்பா நம்பிக்கையா உணரவைக்க வேண்டிய கணவனே இன்னனொருத்தன் கேவலமா பார'க்கிறதுக்கு வழி வகுத்த கொடுமையை உன் அம்மா யாரிடம் சொல்வாங்க?



சமீபத்தில உன் அப்பா இறந்தது அந்த ஆளுக்கு வசதியாப்போச்சு. அடிக்கடி அவங்களை தொந்தரவு பண்ணத் தொடங்கிவிட்டார். இந்த வயசில இதை வெளிய சொல்ல முடியுமா? அதவிட உன் அம்மா தினமும் காலையில் போய் மாலையில் வந்தது வீட்டு வேலை செய்யிறதுக்காக. அன்றய தினம் இரவு வராததுக்கு காரணம் அவங்க வீட்டில புது வீட்டு பூஜை நடந்திட்டிருந்தது. முடியிறதுக்கு அதிகாலை ஆகிட்டுது, எங்கே இதையெல்லாம் தெரிஞ்சு நீ கவலைப்படுவியோ என்றதோட, அந்தாளுடைய சேட்டைப ''பிடிச்சு உலுக்கிடுவியோ என்றதனாலயும் உன் படிப்பு எந்த விதத்திலயும் குழம்பிவிடக் கூடாது என்றதுக்காகவும்தான் உன் அம்மா அப்படி நடந்து கொண்டா. நீ நினைத்தது போல அம்மா நடந்திருந்தால் கூட தப்பில்லையே, ஒரு கணவனிடம் இருந்து கிடைக்கவேண்டிய அன்பு, அக்கறை, பாதுகாப்பு, நம்பிக்கை எதையுமே உன் அப்பா உன் அம்மாவுக்கு கொடுக்கவில்லையே என்றவள் உன் அம்மா அப்படியானவர் அல்ல, ஆனால் நீ இப்படி நடந்து கொண்டிருக்கிறாய், முதலில் அம்மாவிடம் மன்னிப்பு கேள். நீ நடந்து கொண்டதை நினைத்தால் எனக்கே கோபம் வருகிறது, உன்னை நம்பி எப்படிக் கல்யாணம் செய்வது?'' என்றாள்.

கானகியின் வார'த்தைகள் சாட்டையால் தாக்கியது போல இருந்தன. உடனே அம்மாவைப் பார'க்கவேண்டும் போல இருந்தது. அம்மா வரும்வரை காத்திருக்கலாம் என எண்ணியபடி தொப்பென கதிரையில் விழுந்தேன். மாலை மயங்கும் வரை என் கூட இருந்துவிட்டு கானகியும் வீட்டிற்குச் சென்றுவிடதனிமையும் வெறுமையும் ஒன்றாய் தாக்கியது. இத்தனை நாள் அம்மா இந்தக் கொடுமையைத்தானே அனுபவித்திருக்கிறார் என எண்ணியதும் தாங்கமுடியாத துயரம் உள்ளத்தை அழுத்தியது.

இரவு நெடுநேரமாகியும் அம்மா வரவில்லை. உடலும் உள்ளமும் உதறத்தொடங்கியது, அம்மா தப்பான முடிவை எடுத்திருப்பாரோ என நினைத்ததும் உள்ளக்கூடு சில்லிட்டுப்போனது. கானகிக்கு அலைபேசியில் விசயத்தை சொன்னதும் மௌனமாக இருந்தவள் ''யோசிக்காதை, நாளைக்கு அம்மா வந்திடுவா,'' என்றாள்.

''ம் ம்'' என்றேன்.

''இத்தனை வருடம் தைரியமாக வாழ்ந்த அம்மா தப்பான எந்த முடிவையும் எடுத்திட மாட்டா'' என்றாள்.

என் எண்ணஓட்டம் எப்படித்தான் அவளுக்குப் புரிந்ததோ, ''சரி'' என்றேன் தேறுதலாக.

இருபத்திநான்கு வருடங்களில் வராத அம்மா மீதான ஏக்கம் இதயத்தில் பீறிட்டது, அழுகை அழையாவிருந்தாளியாய் வந்துநின்றது. எப்போது உறங்கினேனோ அதிகாலையில் கதவு தட்டப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தத்தில் எழுந்துசென்று கத வைத்திறந்தேன்.

கானகி தான். அவசரமாய் குளித்து உடை மாற்றிப்புறப் பட்டேன். அம்மாவைப் பார்க்க வேண்டும் என்ற வேகம் உள்ளத்தை நிறைத்துக் கிடந்தது. அம்மா வேலை செய்யும் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். கசங்கிய புட வையும் கைகளில் சவா'க்காரமுமாக நின்ற அம்மா என்னைக் கண்டதும் விழியில் நிறைந்த நீரோடு உள்ளே சென்றுவிட வீட்டுக்கார அம்மா தான் அமரச்செய்தார'. ''இரு வர்றன்'' எனக்கூறி உள்ளே சென்ற கானகி, உள்ளே சென்று திரும்பிவந்தாள். சற்று நேரத்தில் என் னருகில் வந்த அம்மா ஆதவா, நீ நல்லா படிக் கணும், அதனாலதாண்டா நான் உனக்கு எது வும் தெரியவேண்டாம்னு நினைச்சேன், ஆனா



நீயே என்னை ----சொல்லமுடியாமல் குலுங்கி அழுத அம்மாவை ஆதரவாக அணைத்துக் கொண்டேன்.

''ஆதவா, சாமி அறையில உள்ள அலு மாரில பாங்க் புத்தகம் வைச்சிருக்கன், ஒரு தொகைப் பணத்தை பாங்க்ல போட்டு வைச்சி ருக்கன், உன் படிப்பு செலவுக்காக, உங்கப்பா வீட்டை அடைவு வச்சிருந்தார், உனக்காக நான் கொடுக்கவைச்சிருந்த ஒரே சொத்து அது, உன் பிள்ளைகள், அவங்க பிள்ளைகள்ன்னு அந்த வீட்ல சந்தோசமா வாழணும், அதுக் காக என் நகை எல்லாம் வித்திட்டு வீட்டை மீட்டுட்டன், மீதிப் பணத்தைத்தான் உனக்காக பாங்க்ல போட்டிருக்கன், குழந்தையிடம் கதை சொல்வது போல சொல்லிக்கொண்டே சென்ற அம்மாவை இடைமறித்தேன், ''ஏம்மா இதெல் லாம் சொல்றாய், எனக்கு பயமா இருக்கும்மா, அழுதேன்''

ஆறுதலாய் என்னை வருடியவள், ''நீ ஏண்டா அழுறாய், என் ராஜா, என்றவள், நான் வீட்டுக்கு வரலடா,'' என்றாள்.

''என்னம்மா சொல்றாய்?'' பதறிப் போய் கேட்டேன், ''நான் உன்னோட இருந்தா நீ என்னைப் பாக்கும் போதெல்லாம் உனக்கு மனசில குற்றஉணர்ச்சியா இருக்கும், அதனாலதான் உன்னைப்பாத்ததும் நா உள்ள போயிட்டன், வேணாம்டா'' என்றாள்.

''எப்படி அம்மா உன்னால் இப்படிப் பேசமுடிகிறது, என்னை விட்டுட்டு நீ எங் கம்மா போவே?''

''இந்த வீட்டுக்கார அம்மா ஒரு முதியோர' இல்லம் நடத்திருங்க, பக்கத்திலதாண்டா, நான் அங்கயே தங்கிக்கிறேன், பகல்ல இங்க வந்து வேலை செஞ்சு குடுத்தா அந்தக் காசையும் மாசாமாசம் உனக்கு அனுப்பிடுவன்,'' என்ற அம்மாவை ஆதுரமாகப் பார்த்தேன். ''நான் இப்படி ஒரு கேவலத்தை சுமத்தியும் என்மேல கோபம் வரலயா, என்னை மன்னித்துக்கொள் ளுங்க அம்மா'' என்றதும் ''நீ என் பிள்ளைடா,'' என்றுள் பெருமிதமாய்.

உனக்குத்தான் என் மீது எவ்வளவு பாசம்? எண்ணிக்கொண்டே அம் மாவின் தலையை வருடி னேன்.

அந்தப் பாசத்திற்கா கவே ஏங்கியவள் போல எனது இரண்டு கைக ளையும் கொத்தாகப் பற்றி யப்படி குலுங்கிக்குலுங்கி அழுதாள். என்னாலும் என்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை, நானும் அழுதேன்.

சற்று நேரம் அழுதபடி திடீரென நெஞ்சைப் பிடித்துக்கொண்டு ''ஆஆஆஆஆ'' என அலறிய அம்மாவை ''என்னம்மா? என்னம்மா?'' என்ற தும் என்னிடம் ஏதும் சொல்லாமலே மயங்கிச் சரிந்தார்.

மூன்று நாட்கள் அவசர சிகிச்சைப்பிரிவில் இருந்த அம்மா ஒரே ஒருமுறை கண்விழித்து என்னையும் கானகியையும் பார்த்து கண் களாலேயே ஏதோ சொல்லிவிட்டு நிரந்தரமாய் கண்களை மூடிக்கொண்டார்.

அம்மா உன்னைப் புரிந்துகொள்ளாமல் நான் பண்ணின தப்புக்கு இவ்வளவு பெரிய தண்ட னையா? உன்னை ராணி மாதிரி வைத்து அன்பு காட்டி சந்தோசத்தை மட்டுமே தரநினைத்த எனக்கு நீ தந்த தண்டனை நியாயமேயில்லை'' கதறினேன், துடித்தேன்.

அம்மா நீ தந்த இந்த வெறுமை எப்போதுமே என் மனதில் வெறுமையாகவே இருக்கப்போகி றது, என் குரலால், திரண்டிருந்த மக்கள் கூட் டமே அழுதது, என் அம்மா மட்டும் அமைதி யாகவே உறங்குகிறுள்.

முற்றும். ★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனிதர்களின் நலன் எப்படி முக்கியமானதென நாம் கருதுகிறோமோ அவ்வாறே விலங்குகளின் நலனும் முக்கியம் என்ற ஒரு சிந்தனையையும் செயற்பாட்டையும் முன்வைத்தவர்தான் ரூத்ஹாரிசன்.**



# ஜீவகாருண்யம் காட்டிய மங்கை

குறுகிய காலத்தில் ஒரு பிராணியை வளர்த்து கொழுக்கவைக்க நினைப்பது அதன் வாழ்வுரிமையை பறிப்பதற்கு ஈடானது என்பதே இவரின் கருத்து. செயற்கை வேதி உரங்களால் பயிர்கள் அதிவேகமாக வளர்க்கப்படுவது போல கா பைட் போன்றவற்றை உபயோகித்து பழங்களைப் பழுக்கச் செய்வதைப்போல செயற்கையாக மேற்கொள்ளப்படும் கால்நடைப் பண்ணைகள் வெளிநாடுகளில் பிரபலம். அதனைத் தொழிற்சாலைப் பண்ணை என்று கூறுகின்றார்கள், (factory farming) என்று கூறுகின்றார்கள். சகல உயிர்களையும் சமமாகப் பாவிக்கின்ற குவாக்கர் என்னும் நம்பிக்கையைத் தனது கல்லூரி நாட்களிலேயே பின்பற்றியவர் ரூத்ஹாரிசன்.

1920ம் ஆண்டு ஜூன் 24ம் திகதி லண்டனில் பிறந்தவர் ரூத் ஹாரிசன். இவரது தந்தை ஸ்டீபன் வின்ஸ்டென். தனது நண்பரும் இலக்கிய மேதையுமான ஜார்ஜ் பெர்னாட்ஷாவின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர். அவருடைய தாய் கிளேர் வின்ஸ்டென், பெர்ணாட்ஷாவின் மைடியர் டொரத்தியா என்னும் புத்தகத்திற்கு ஓவியம் வரைந்தவர்.

இப்படி இலக்கியமும் கலையும் வளர்ந்த ஒரு குடும்பத்தில் பிறந்த ரூத் ஹாரிசனும் இதே பாதையிலேயே சென்றார். 1961 ஆம் ஆண்டு அனைத்து விலங்குகள் மீதான கொடுமைக்கு எதிரான யுத்தம் என்னும் விலங்கு நல உரிமைக்குழுவின் துண்டறிக்கை ஒன்று அவர் கைகளில் கிடைத்தது. அவர் இரண்டாம் உலகப் போருக்கு எதிரானவராக இருந்தார். அந்தப் பிரிவில் முதலுதவிப் பிரிவில் சேவையாற்றினார். அவர் கைகளில் கிடைத்த துண்டறிக்கையில் தொழிற்சாலைப்பண்ணை விலங்குகள் மீதான கொடுமைகள் குறித்துச்சொல்லப்பட்டிருந்தது. அதைப்படித்து மனமுடைந்த ரூத் அந்த விலங்குகளின் நலனுக்காக ஏதாவது செய்ய வேண்டுமெனத் துடித்தார். சைவ உணவுப் பழக்கம் கொண்டவராக இருந்த இவர் விலங்குகளின் நலன் மீது பொறுப்பு கொண்டவராக இருந்தார். விலங்குகளுக்காக போராடவும் தொடங்கினார்.

இப்போராட்டத்தின் ஒரு பகுதியாக அன்று பிரிட்டனில் இருந்த பல தொழிற்சாலைப் பண்ணைகளுக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டார். இதன் விளைவாக 1964 ஆம் ஆண்டு அனிமல் மெஷின்ஸ் (Animal machines) புத்தகத்தை எழுதினார். விலங்குகள் இயந்திரங்களா? என்று கேள்வி எழுப்பிய இந்தப் புத்தகத்திற்கு சூழியல் பெண்ணியத்தின் மூலவர் என்று போற்றப்படும் ரேச்சல் கார்சன் முன்னுரை எழுதினார். கார்சனின் மௌன வசந்தம் வெளியான பிறகு எப்படி பூச்சிகொல்லிகள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட்டதோ அதே போல அனிமல் மெஷின்ஸ் வெளிவந்த பிறகு தொழிற்சாலைப் பண்ணையில் விலங்குகளுக்கு நேரும் துன்பங்கள் பற்றி மக்களுக்குத் தெரியவந்தது. அந்தப் பண்ணைகளில் விலங்குகளின் வால்கள் வெட்டப்படுவது அலகுகள் நறுக்கப்படுவது, விதைப்பைகள் சிதைக்கப்படுவது, கொம்புகள் நீக்கப்படுவது, உள்ளிட்ட பல கொடுமைகள் நிகழ்வதை ஹாரிசனின் புத்தகம் மூலம் அறிந்த மக்கள் கொதித்துப்போயினர். இதனைத் தொடர்ந்து எழுந்த போராட்டங்களின் விளைவாக 1968ம் ஆண்டு பிரிட்டனில் தொழிற்சாலைப்பண்ணை விலங்குகளின் நலன் தொடர்பாக புதியசட்டம் இயற்றப்பட்டது. வனவிலங்குகள் நலனை முன்னிறுத்தி 1964 முதல் 1998ம் ஆண்டு வரை இந்தியா உட்பட பல நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார் ரூத். இவரது சாதனைகளைப் பாராட்டி பிரிட்டிஷ் அரசு இவருக்கு ஆர்டர் ஆவ் த பிரிட்டிஷ் எம்பெயார் எனும் பதக்கத்தை வழங்கி சிறப்பித்தது. இப்படிப்பட்ட ஆளுமையாக விளங்கிய ரூத் புற்றுநோயால் 2000ம் ஆண்டு ஜூன் 13ம் திகதி இவ்வுலகைவிட்டு மறைந்தார். ஆனாலும் அவர் மேற்கொண்ட பணிகள் இன்றும் அவரது ஆதரவாளர்களால் தொடரப்பட்டு வருகிறது.

திருமதி தேவா மாதவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவென்பது சுவாரசமானது

திருமதி சந்தியா சந்தோஷ்






மறக்க தெரியவில்லை எனது காதலை
மறக்கும் உருவம் இல்லை எனது தேவதை
சிறகுகள் முளைக்கும் முன்பே
விலங்கினை பூட்டிக்கொண்டேன் என் தேவியே

காதல் மலர்ச்செண்டு நான் கொண்டு வந்தேன்
உன்னைச் சேராமல் உயிர் வாடி நின்றேன்
உனக்காகப் பாட இசை கொண்டு வந்தேன்
மௌனங்கள் பரிசாகத் தந்தேன்
சொந்தம் ஆகாது சொல்லாத நேசம்
இதயம் சேராது இல்லாத பாசம்

உன்னை நினையாமல் ஒரு நாளும் இல்லை
உன்னை மறந்தாலே உயிர் சொந்தமில்லை

கடல் நீலம் கூட கரைந்தோடிப் போகும்
என் அன்பில் நிறம் மாற்றம் இல்லை

தேகம் தீயோடு வேகும்போதும்
தாகம் என் தாகம் தீர்வதில்லை
ஆசை அழியாதடி -------

மணவாழ்க்கை என்பது கணவனும் மனைவியும் இன்பதுன்பங்களில் ஒன்றாய் இணைந்து ஏற்றத்தாழ்வுகளை சமனாய் பகிர்ந்து உறவாடி வாழ்தல் ஆகும். சகல பந்தங்களும் ஒரு எல்லை வரையே கூடவரும். ஆனால் திருமண பந்தம் என்பது எல்லை இல்லாத அன்பினைக் கொண்டது. இன்றைய காலத்தில் 90 சதவீதமான இல்லறபந்தம் என்பது பல்வேறுபட்ட காரணங்களினால் தோல்வியால் மரித்துப்போனதாகவே உள்ளது. காலமும் இதற்கு ஒரு காரணமாகும்.

திருமணமானதும் பெண்களிடம் புகுந்த வீட்டில் எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டும், எந்தளவிற்கு அனுசரிக்கவேண்டும் எனக்கற்றுத்தரும் இந்த சமூகம், ஆண்களிடம் மட்டும் மனைவியின் வீட்டாரிடம் எப்படியெல்லாம் நடந்துகொள்ளவேண்டும் என்பதை சொல்லிக்கொடுப்பதேயில்லை. சிலர் மனைவி என்பவள் தன்னில் சரிபாதியானவள், என்பதை உணர்ந்து மனைவியின் பெற்றோருக்கு மருமகனாக அல்லாது மறுமகனாக வாழ்ந்து அவர்களையும் மகிழ்வித்து தமது இல்லறத்திலும் இன்பத்தை அறுவடை செய்கின்றனர். வேறு சிலர் மனைவியின் பெற்றோரிடம் வேண்டாத விவாதங்களை வளர்த்து விரோதிகளாய் மாறிவிடுகின்றனர். அத்தகைய இல்லறங்கள் பூச்சியமாகி உடைந்து விடுகின்றன.

அப்படி உடைந்துபோன ஒரு இல்லறத்தின் உரிமைக்காரர்கள் தான் மாதங்கனும் தரங்கிணியும். தரங்கிணியின் குடும்பம் பெரியது. பெரியண்ணா, சின்னண்ணா, அண்ணிமார், அக்கா, அத்தான் என ஒரு கூட்டுக்குடும்பத்தின் வாரிசு அவள். அவளது சிறுவயதிலிருந்தே கணவனின் குடும்பத்தை எப்படித்தாங்கவேண்டும் என்பது சொல்லிக்கொடுக்கப்பட்டு வளர்க்கப் பட்டவள். திருமணமாகி வந்ததில் இருந்து கணவனின் அவனது உறவுகளின் என ஒவ்வொருத் தருக்கானதையும் பார்த்துப் பார்த்துச் செய்தாள்.

ஆனால் மாதங்கனோ, அவளது வீட்டினருடன் ஏற்பட்ட சிறிய மனஸ்தாபத்தினை மனதிலேயே வைத்துக்கொண்டான். ஆரம்பத்தில் அவளது உறவினர் யாராவது வந்தால் அவளிடம் எரிந்துஎரிந்து விழுந்தான். காரணம் புரியாத தரங்கிணி முதலில் சிறுகுழந்தை போல தேம்பி அழுதாள். கணவனிடம் குறைகாண அவளது பேதை மனம் இடம்தரவில்லை. அலுவலகத்தில் ஏற்பட்ட மனக்குழப்பம் ஏதோ ஒன்று தான் கணவனின் கோபத்தின் காரணம் என எண்ணினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைச் சமாதானப்படுத்துவதற்குள் அவளுக்கு போதும் போதும் என்றாகிவிடும். மாதங்கன் கோபமாகவோ யோசனையாகவோ இருந்தால் மாமியார் அவளைத்தான் குறை சொல்வார். அவளால் தான் அப்படியாகி விட்டது போல வறுத்தெடுத்துவிடுவார். இதனை கணவனிடம் சொன்னபோதும் கூட அவன் புரிந்துகொள்வதாகவே இல்லை.

ஒருநாள், 'அம்மா அப்பாவைப் பார்க்க வேண்டும் போல உள்ளது,' 'எனக்கூறினாள் தரங்கிணி.'



'என்ன உளறல் தரங்கிணி' என்ற கணவனை ஆச்சரியமாய் பார்த்தவள், 'ரொம்ப ஆசையா இருக்கு அதனால் தான்' என்றாள்.

'எனக்கு உன்னோட வீட்டுக்காரங்களை கண்டாலே பிடிக்கல, நீ என்னடான்னா அங்க போகணும்னு கேக்கிறாய்,' என்றான் நக்கலாக.

அதிர்ந்து போனாள் தரங்கிணி. இருபத்தைந்து வயதைக்கடந்துவிட்ட அவளுக்கு மருமகனுக்கு மாமியார் வீடு விரோதமானால் அந்தப்பெண்ணில் நிலை என்னவென்பது புரியாததல்லவே.

'ஏன்? என்ன ஆச்சு?' பதற்றமாய் கேட்டவளிடம் மௌனம் காத்தான். 'சொல்லுங்களன்,' பேசாமல் எழுந்துசென்றுவிட்டான். அன்றைய தினமே யாருமற்ற ஒரு தனிமைப் பொழுதில் எனது வீட்டுக்காரர் செய்த தவறு என்னவென்று எனக்குத்தெரியாது, ஆனால் என்ன செய்திருந்தாலும் அதற்காக நான் மன்னிப்பு கேட்கின்றேன், தயவுசெய்து மன்னித்துவிடுங்கள் என்றாள். ம்ம் என்றதைத்தவிர வேறெதுவும் சொல்லவில்லை அவன்.

கணவனின் மௌனமும் தனது வீட்டாருடனான அவனது விலகலும் தரங்கிணியை அதிகமாய் யோசிக்கவைத்தது. அந்த எண்ணமே அவளமு மனதை புளுவாக அரித்தது. ஒருமுறை அவளைப் பார்ப்பதற்காய் தாயும் தந்தையும் வந்திருந்தபோதே அவளிடம் மிகக்கடுமையாக நடந்துகொண்டான். ஏற்கனவே சோர்ந்திருந்த மகளின் வதனம் சட்டெனச் சுருங்கியதைக்கண்ட பெற்றோர் செய்வதறியாது நின்றனர். அவ்வேளை அங்கு நிலவிய மௌனம் கூட நரகத்தின் வாயில் தானோ என எண்ணிக்கொண்டாள் தரங்கிணி.

புறப்படும் போது மருமகனின் கரம் பற்றிக்கொண்ட மாமனார், தரங்கிணி எங்கள் வீட்டின் கடைக்குட்டி. அவளுக்கு அதிர்ந்து பேசிறது கூட தெரியாது. அப்படியே வளர்ந்திட்டா. தயவுசெய்து அவளிட்ட கொஞ்சம் அமைதியா நடந்துகொள்ளுங்க என்றார் கரங்களைக் கூப்பியபடியே.

அப்போதும் எதுவும் பேசவில்லை மாதங்கன். நாட்களின் நகர்வில் இதுவே மாதங்கன் - தரங்கிணிக்கிடையில் பெரிய விரிசலை உண்டு பண்ணியது. மனதில் ஆழத்தில் இருந்த இவ்விடயம் தரங்கிணியை கணவனுடன் முழு மனதுடன் ஒன்றமுடியாமல் செய்தது. அதனால் ஏற்பட்ட கோபம் மாதங்கனின் வார்த்தைகளை கொடூரமாக்கியது. ஒரு கட்டத்தில் அவனுடன் வாழமுடியாது பிறந்த வீட்டில் தஞ்சமடைந்தாள் தரங்கிணி.

மனைவியின் பிரிவு மாதங்கனை வாட்டி எடுத்தது. அதுவே பல உண்மைகளையும் அவனுக்குப் புரியவைத்தது. அன்று தரங்கிணியின் பிறந்தநாள், உயிர்ப்பே இல்லாது அதிகாலையில் எழுந்து வெளியே வந்தவள் மலர்க்கொத்தும் மஞ்சள் வண்ணப் புடவையுமாய் நின்ற கணவனைக் கண்டதும் மலர்ந்தாள் ஒரு பூவாக.

அப்போதுதான் வெளியே வந்த அவளது தந்தை அவசரமாய் மருமகனை வரவேற்று உள்ளே அழைத்தார். எல்லோரிடமும் மன்னிப்பை வேண்டியவன் மனைவியிடம் திரும்பி, 'நாம தனியா போகலாம், என்னோட வந்திடு' என்றான். அவனை ஆழமாய்ப் பார்த்தவள், 'ஏன் தனியா, உங்கட வீட்டிலயே இருக்கலாம், நீங்க அன்பா இருந்தா எனக்கு அது மட்டும் போதும், மற்ற எல்லாத்தையும் நான் சமாளிச்சிடுவன்' என்றாள்.

'அப்பாடா, என்ன சொல்லுவியோ என்று தவிச்சிட்டன்' என்ற தாயை அன்போடு அணைத்துக்கொண்டாள். அவள் உறவுகளின் முகங்களில் கோடி பிரகாசம்.

மனவியையும் அழைத்துக்கொண்டு வீடு வந்துவிட்டான், மாதங்கன். அன்றுதொட்டு சின்னச்சின்ன சண்டைகளுடன் கூடிய அழகான ஒரு இல்லறம் பிரகாசித்தது அவர்கள் இருவருக்குள்ளும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறைக்கப்படும் உண்மைகள்

கனவுகளை பிடித்து கொண்டு
வாழத்தான் நினைத்தோம்
காலத்தின் கோலம் வந்து
இருளில் தள்ளியது ஏன்!
இருண்ட வானத்தில் நடந்த
கந்தக போர்வைக்குள்
அகப்பட்டோம்
அஞ்சி அஞ்சி அவயங்களை
ஒன்றொன்றாய் இழந்தோம் .
இந்த நாட்களில் தப்பி வந்து
செப்பிட முடியா வேதனையில்
சோர்ந்து போய் வாழும் நிலை தான்
அகப்பட்டோம்.
வந்தோம் வாழ்வோம்
என்றுதானே வாழ்கின்றோம்
உயிரற்று உடல்மட்டும்
ஊசலாடும் தேசத்தில்
தாய் பசி இழந்து வெகுநாட்கள்
என்பேரில் யார் யாரோ சுகம் தேடிட
அதை அறிந்து கவலை பட
எழுந்து பேசமுடியாமல்
விழ்ந்து பாவபட்டேன்.
இந்த பாவியர்களின் வஞ்சக உலகில்.
என் கால்கள் நடக்க
என்று வருந்தவில்லை
அந்த நாட்களில் நரகர்களாகிய
இந்த மனிதர்களையா
கட்டி காத்தோம்
என்று புலம்புகின்றேன்.
யார் சொல்லியும் கேக்கார்
இவர் நரம்பில்லா வீணர்கள்.
அப்பாவி எம் மீது
தப்பாமல் பழிபோடும்
நாசக்காரர்கள்.
பாவம் எங்களை விட்டு விடுங்கள்
அந்த நாட்களின் நிம்மதியை
இந்த நாட்களில் தேடுகின்றோம்.
மறைக்கப்படும் உண்மைகளாகவே
இருந்து விட்டு போகிறோம்.



தே.பிரியன்

# பேரன்பு

உறங்கு நிலைப்பனியின்
தழுவல்கள்
கலகம் தீர்த்த பெருமூச்சு

இன்னும் இறுகியிருக்கிறது
இரத்தக்குழல்
கடுகின் காந்தலாய்

சவரம் செய்து பனிக்கிறது
நீல வானம்
பின்னழகில் உடைந்து கிடக்கிறது
பிறைச்சந்திரன்

நிலம் கீறி உடைகிறது
நகத்துகள்கள்
சடைகலைத்து திருடுகிறது
பெருவிரல்கள்

ஆரப்பரிப்பில் சிக்காத ஞானமாய்
சிரிக்கிறது பேரன்பு



நெடுந்தீவு
க.யோகேஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியொரு கவி செய்வேன்

இனியொரு கவி செய்வேன்
கனியதை ருசித்தும்
காயதை ரசித்தும்
பனியதில் நனைந்தும்
வெயிலதில் காய்ந்தும்
மலரதை முகர்ந்தும்
முள்ளதில் படர்ந்தும்
சுமையதை மறந்தும்
சுகமதை நினைந்தும்
தீயதை இகழ்ந்தும்
நல்லதை புகழ்ந்தும்
ஆபாசம் தவிர்த்தும்
அர்த்தங்கள் விதைத்தும்
விதைகளை புதைத்தும்
விழுதுகளில் துளிர்த்தும்
சறுகாய் பறந்தும்
மெழுகாய் உருவிழந்து
நீரில் மிதந்தும்
பாரில் தவழ்ந்தும்
மொட்டை அவிழ்த்தும்
மெட்டை அழைத்தும்
மெல்லினம் படித்தும்
வல்லினம் பிடித்தும்
இடையினம் பார்த்தும்
இடைவெளி விடுத்தும்
காதலை தொடுத்தும்
காமம் தடுத்தும்
இப்படியே இனியொரு
இனியொரு கவி செய்வேன்
இறுதியாய் உங்கள்
விமர்சனங்களை விலங்கிட
மூன்றாம் செவி செய்வேன்.





குலேந்திரன்
மயிலந்தனை துபாயிலிருந்து...




உன் பார்வைபட்டு
சபிக்கப்பட்டவர்களுள்
ஒருவனாகி
மூச்சடங்கி
முழிபிதுங்கி
உயிர்துறக்க
உடன்படுகிறேன்
எனக்குள்.
எத்தனை
ஆண்டுகளுக்கு
உன் சாபம் தொடருமோ
யாரறிவர்?
பார்வை பார்த்துச்
சென்றது நீதான்.
அது வெறும் பார்வையல்ல.
உன் பார்வைகளால்
வதைக்கப்படுகின்ற
சபிப்பிற்கான பார்வை.
உன் பார்வைபட்டு
சபிக்கப்பட்டவர்களுள்
ஒருவனாகி
மூச்சடங்கி
முழிபிதுங்கி
உயிர்துறக்க
உடன்படுகிறேன்
நான்.



வல்வை கமல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழி தேடிய வழி

காவலூர் அகிலன்.
கிளிநொச்சி.

மெல்லிய காற்று, மாசிப்பனி, ஆலயமணிகளின் அலாரம் பேட்டுக்கோழிகளைக்கண்டு இறக்கையடித்துக்கூவும் சேவல்களின் ஓசை என அந்த காலைப்பொழுது இனிமையாக விடிந்துகொண்டிருந்தது. இவற்றையெல்லாம் அனுமானித்துக் கொண்டிருந்த துளசி தன் தொலைபேசியில் வைக்கப்பட்ட ஐந்து மணி அலாரச் சத்தத்துக்காய் காத்துக்கொண்டிருந்தாள் படுக்கையில்.

அவள் கண்களும் கைகளும் இயங்கிய படியே இருந்தது. இடையிடையே ஏதோ தகவல் வந்துசேர்ந்ததற்கான அறிவிப்பையும் அவள் தொலைபேசி வழங்கிக்கொண்டிருந்தது.

துளசியின் தொலைபேசி ஐந்து மணிக்கான ஓசையை வழங்கியது.




போர்வையை விலக்கியபடி மெல்ல எழுந்து தன் படுக்கையை மடித்து ஒருபுறமாய் வைத்துவிட்டு கிணற்றடியை நோக்கி நடந்தாள் துளசி.

துளசி ஆரம்பப்பாடசாலை ஒன்றில் ஆசிரியராகப் பணி புரிகின்றாள், அவளது சொந்த ஊரான யாழ்ப்பாணத்தில் இருந்து அவளது பாடசாலை எண்பது கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. புதிதாக ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டதால் பலருக்கு வெவ்வேறு மாவட்டங்களிலே வேலை வழங்கப்பட்டது.

யாழில் இருந்து வந்து தமக்கு வழங்கப்பட்ட பாடசாலைக்கு அருகில் தமக்கான தங்குமிடவசதியை ஏற்படுத்திக்கொண்டார்கள் அனேகமானவர்கள். அவ்வாறே துளசியும் மதியும் தமக்கான தங்குமிடவசதியையும் சரிசெய்து கொண்டனர்.

திங்கட்கிழமை காலை வீட்டைவிட்டு வெளிக்கிட்டால் வெள்ளிக்கிழமை பின்னேரம் வீட்டை நோக்கி மீண்டும் பயணிக்கலாம். இதுவே அநேகமான ஆசிரியர்களின் நிலைப்பாடாக இருக்கின்றது

அன்று திங்கட்கிழமை காலை, ஆகையால்தான் துளசி அதிகாலை எழுந்து தன் பயணத்துக்கு ஆயத்தமானாள். சரியாக ஆறு மணியளவில் பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்து புறப்படும்போது

துளசியும் மதியும் பேருந்தில் ஏறி இருக்கையில் அமர்ந்துகொண்டனர். மதி துளசியின் தோழி. இருவரும் ஒரே பாடசாலையின் ஆசிரியர்கள் மட்டுமல்ல, ஒரே வீட்டில் தங்கி வாழ்பவர்கள்.

நடத்துனர் பயணிகளுக்கான பயணப்பற்றுச்சீட்டை வழங்கியபடி இடையிடையே பயணிகளையும் ஏற்றிக்கொண்டார்

பேருந்தின் சாரதி பேருந்தில் இருந்த வானொலிப்பெட்டியை இயக்கி விட அருமையான பாடல்கள் ஒலிக்கத்தொடங்கின. அந்த இனிமையான பாடல்களைக் கேட்டவாறே பேருந்தின் யன்னல் பக்க இருக்கையில் சாய்ந்து கண்களை மூடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாள் துளசி. அவளின் அந்த மெல்லிய உறக்கத்தில் கடந்ததகால நினைவுகள் வட்டமடித்தன. எதை மறக்க வேண்டுமென நினைத்துக்கொண்டிருக்கின்றாளோ அதுவே அவளின் நினைவில் வந்து வந்து போனது.


அது 2007 ஆம் ஆண்டின் ஆரம்ப காலப் பகுதி, அப்போது விடுதலைப் போராட்டம் பெரியளவில் நடந்துகொண்டிருந்தது. அது ஒருபுறமிருக்க விடுதலைப் போராட்டத்திற்கான ஆட்சேர்ப்பும் வீட்டுக்கொருவர் என நடந்துகொண்டிருந்தது.

அந்தக் காலப்பகுதியில்தான் துளசிக்கான திருமணத்தை அவசர அவசரமாக துளசியின் குடும்பத்தார் செய்து வைத்தனர். பதினெட்டு வயதுடைய துளசிக்கு அது நரகவாழ்க்கையென்றே அப்போதும் தோன்றியது. மண் மீதும் மக்கள் மீதும் தீராத காதலைக்கொண்ட துளசியை ஏதோ ஒரு மூலையில் கட்டிப் போட முடிவெடுத்த பெற்றோர்கள் அது எப்படி எங்கு போய்முடியுமென சிந்திக்க மறந்துவிட்டனர் போலும்.

ஓர் ஆண்டுகாலம் மறைவிடம் தேடி வாழ்ந்துகொண்டனர். 2008 ஆம் ஆண்டின் இறுதிக்காலப்பகுதியில் துளசியின் கணவன் வருண் விடுதலைப் புலிகளால் போராட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டான். தீவிர பயிற்சிகளின் பின் களமுனைக்காய் வருண் அனுப்பப்படுகின்றான். காதல் தோற்றம்பெறாத போதிலும்கூட அவன்தான் இனி உலகம் என எண்ணிக்கொண்ட துளசி அவன் மீண்டு வரப்போவதில்லை என்பதை அறியவில்லை. ஏனெனில் ஈழப் போராட்டத்தின் இறுதிக்காலமே அதுதான். நொடிக்கு நொடி ஒவ்வொரு பிரதேசமும் கைநழுவிப்போனது. நிமிடத்துக்கு நிமிடம் போராளிகளின் வித்துடல்கள் வந்துகொண்டிருந்தன. வருண் நெத்தலி ஆறு களமுனையில் களமாடிக்கொண்டிருந்த சமயம் அவன் நெஞ்சை எதிரியின் ரவை ஒன்று கிழித்துச் சென்றது. அம்மா என கத்தியவாறே பதுங்கு குழிக்குள் விழுந்தான். இரத்தப்போக்கு அதிகமாக அவன் உயிரும் உடலைவிட்டுப் பிரிந்தது. களமுனையில் இருந்து வருணின் உடல் பின்னோக்கி அனுப்பப் படுகிறது.

மறுநாள் காலை புலிகளின் குரல் வானொலியில் வீர வணக்க அறிவித்தலில் வருணின் பெயரும் அறிவிக்கப்படுகிறது.

வருணின் உறவுகள் கதறி அழுதிட அவனின் வித்துடல் தாங்கிய வாகனம் வந்தடைகிறது, துளசியின் மனதில் எத்தனையோ ஆதங்கங்கள், கேள்விகள், அத்தனையும் அவள் மௌனமான விம்மலுக்குள் அடங்கிப்போகிறது. எதை வேண்டாமென நினைத்தாளோ அதை




விரும்பியபோது அவளிடத்தே இறைவன் கொடுக்க மறுத்துவிட்டான் என நினைத்து புலம்பினாள்.

வேகமாகப் பயணித்துக்கொண்டிருந்த பேருந்து சற்று நிறுத்தப்பட்டது, நடத்துநரின் குரல் பெரிதாக கேட்க அந்தச் சத்தத்தில் எழுந்துகொண்டாள் துளசி. பேருந்தின் சில் ஒன்றை நடத்துனரும் சாரதியுமாக மாற்றிக் கொண்டிருந்தனர். பயணிகளோடு பயணிகளாக அவர்களும் இறங்கிக்கொண்டனர்.

பேருந்து சரி செய்யப்பட்டு மீண்டும் தன் பயணத்தை தொடர்ந்தது, எல்லோரும் ஏறித் தத்தமது இருக்கைகளில் அமர்ந்துகொண்டனர். பேருந்து பயணிக்கத்தொடங்கி 35 நிமிடங்களில் பாடசாலை வாயிலை அடைந்தது. துளசியும் மதியும் இறங்கி நடக்கத் தொடங்கினர். தொடுகையின் மூலம் வரவை உறுதி செய்துகொண்டு காலைக்கூட்டத்துக்குச் சென்று அதன்பின் வகுப்பறைக்குச் சென்றாள் துளசி.

மணி அடிக்க பாடவேளை ஆரம்பிக்கப் படுகிறது, துளசி தன் கடமையைச் சரிவரச் செய்து விட்டு மதி வருவதற்கு நேரமாகும் என்றதால் வீட்டை நோக்கி நடந்தாள். அவ்வேளை,

துளசி துளசி என்றபடியே பின்னால் ஒரு குரல் ஒலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று திரும்பிப் பார்த்தாள் , அது ஆசிரியர் மதனின் குரல்.


ஓம் சொல்லுங்கோ மதன், ஏதும் அலுவலோ ..?

இல்ல, துளசி ஒரு விடயம் கதைக்கணும், அதுதான் கூப்பிட்டன்

ஓ..அப்படியா சொல்லுங்கோ மதன்

அதில்ல துளசி, உங்கள நான் மனப்பூர்வமாக காதலிக்கிறன், உங்கள கல்யாணம் செய்யலாம் என நினைக்கிறன், நீங்க இப்ப உடன சொல்லணும் என்டு அவசரமில்ல, ஆறுதலா முடிவு சொன்னால் போதும் எனக் கூறி முடித்தான் மதன்.

எதுவும் கூறாமல் வேகமாக நடந்தாள்



துளசி,

தன் தோழியான மதியிடம் நடந்தவற்றைக் கூறினாள், , அடி லூசு, இப்படி ஒரு சந்தர்ப்பம் இனி வராது, மதனை நீ ஏற்றுக் கொள்ளுடி, அவரும் எங்களை மாதிரி படிப்பிக்கிறார், அதவிட நல்ல குணமும் என்றாள் மதி.

துளசி, அதில்லடி நான் ஏற்கனவே இன்னொருவனோட வாழ்ந்தனான், அதச் சொல்லாமல் மதனுக்கு ஒகே எனச் சொல்வது எனக்கு நல்லதா படலடி

மதி ..ஓ அதுவா பிரச்சனை, அப்படியென்றால் ஒண்டு செய்வம், நாளைக்கு அவரை இங்க வரச் சொல்லி ஆறுதலாக உண்மையச் சொல்லலாம், ஏற்றுக்கொண்டால் சந்தோசமா அவர் கூடவே வாழ்ந்து கொள் இல்லையோ விட்டுவிடட்டும் என்று சொல்லி முடித்தாள்.

துளசி..சரிடி அப்படியே செய்வம் என்று கூறி முடித்தாள்.

மறுநாள் பாடசாலை சென்ற துளசி, காலைப் பிரார்த்தனைக் கூட்டத்தைத் தொடர்ந்து வகுப்பறைக்குச்

சென்று கற்பித்துக்கொண்டிருந்தாள். மதனும் வகுப்புக்களை முடித்துக்கொண்டு பாடசாலை வாயிலில் காத்து நின்றான் துளசியின் வருகைக்காக.

துளசி மெதுமெதுவாக நடந்து நுழைவாயிலை அடைந்தாள்.

மதன்.. என்ன துளசி ஏதுமே சொல்லாமல் போறீங்கள் பிடிக்கலயா..?

துளசி..இல்ல மதன் உங்களோட பேசணும், கொஞ்சம் எங்க வீடு வரை வரமுடியுமா என்றாள்.

ஆ சரி சரி என்றவாறே துளசியின் பின்னால் நடந்தான் மதன்.

வீட்டிற்குச் சென்றதும் முற்றத்தில் கதிரையை எடுத்துப் போட்டு மதியும் துளசியும் மதன் முன்னால் அமர்ந்து கொண்டனர்.

நடந்த பிரச்சனைகளை விரிவாக எடுத்துக் கூறினாள் துளசி.

மதன் எதுவும் கூறிடாமலே எழுந்து நடக்கத் தொடங்கினான்.

துளசி, என்ன மதன் எதுவுமே சொல்லாமல் போறீங்கள்? என்றாள்.

மதன் திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் ஏதும் கூறாமல் நடக்கத்தொடங்கினான்.

மதி, துளசி கவலைப்படாதடி, இந்தக்காலத்தில உண்மையை சொல்லி வாழ்ந்தால் அத யாருமே ஏற்கமாட்டார்கள், விதவையை மறுமணம் செய்ய எந்த இளைஞனுமே தயாரில்லை, அது நம்ம சமூகத்தோட பழக்கமாவே போச்சு எனக் கூறி துளசியைச் சமாதானம் செய்தாள்.

நாட்கள் உருண்டோடின, துளசி பாடசாலை, தங்குமிடம் என தன் பொழுதைக் கழித்துக்கொண்டாள்.

அன்று வெள்ளிக் கிழமை, பாடவேளைகளை முடித்துக்கொண்டு துளசி வீடு செல்வதற்குத் தயாரானாள்.

தூரத்தில் இருந்து துளசியை பார்த்த மதன் அருகில் வந்தான்,

வீட்டில சம்மதம், வாங்க கொஞ்சம் நாளாகிட்டுது, நீங்க ஒரு விதவையா இருப்பீங்க எண்டு நான் எதிர்பாக்கல, துளசி என்னை மன்னிச்சிடுங்கோ, ஆனால் ஒண்டுங்க, வாழ்ந்தால் அது உங்களோட மட்டும் தான் என்று நான் எப்பவோ முடிவுசெய்திட்டன், எனச் சொல்லி துளசியின் முகத்தை புன்னகையில் மலரச்செய்தான்.

(முற்றும்)

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மையில் பெண்மை

பெண் என்பவள் பேரின்பம் தருகிறவள். குழந்தையாய், குமரியாய், மனைவியாய், தாயாய் என ஒவ்வொருவித பாத்திரங்களின் போது ஒவ்வொருவித இன்பம் தருபவள். ஒவ்வொருவித அழகுடன் ஜொலிப்பவள். பெண்ணைப் பாடாத கவிஞனும் இல்லை, பெண்ணைப் பாடிய வரிகள் தோற்றதும் இல்லை.


**"ஆவதும் பெண்ணாலே, மனுசன் அழிவதும் பெண்ணாலே"** என்று சும்மாவா சொன்னார்கள். ஒன்றை ஆக்கவும் அழிக்கவும் சக்தி பெற்றவள் பெண். பெண்ணின் அன்பானது சாதனைகளையும் சோதனைகளையும் உண்டாக்கவல்லது. ஒரு ஆண் பெண்ணிடம் நூறு மடங்கு அன்பு காட்டினால் அவள் அவனுக்கு ஆயிரம் மடங்காக திருப்பிகொடுப்பாள். அதுதான் பெண்ணின் நியதி.



குழந்தையாய் மடி தவழ்ந்து குமரியாகி பட்டாம் பூச்சியாய் பறக்கின்றவள் திருமணம் என்ற பந்தத்தில் தனக்கான கடமைகள், பொறுப்புக்களை சட்டென புரிந்து நடப்பதும் பின்னர் தாயாகி குழந்தையைச் சுமக்கும் போது பார்த்துப்பார்த்து பக்குவமாய் தன்னைக்காப்பதும் என அவளது வாழ்வில் எத்தனை எத்தனை மாற்றங்கள்.

ஒரு பெண் எவ்வளவு தான் சுதந்திர உணர்வுள்ளவளாக இருந்தாலும் திருமணம் அவளது செயல்களைத் தலைகீழாக்கிவிடும். அதாவது அவள் தானே மாறிவிடுவாள்.

தாய்மையின் பின்னான பெண்ணின் நிலையானது உலக அதிசயத்திற்குச் சமனானதாகும்.




அடி பெண்ணே
நீயும் ஓர் நாள்
தாயாக மாறும்போது
உன்னுள்ளே தோன்றும்
அனுபவம்
அதுதானே உலகின்
அதிசயம்

என கவிஞர்களால் உரைக்கப்பட்டுள்ளது.

பெண் தாயாவதென்பது இயற்கையின் உன்னத வரம் என்றால் தாய்மையின் பின்னான பெண்களின் மனமாற்றம் தான் அதிசயங்களின் உச்சமானதாகும்.

திருமணமானதும், ஆண்கள் தம்மை மாற்றிக் கொள்வதைக்காட்டிலும் பெண்களின் மாற்றமே அருமையானதும் அழகானதுமாகும். குறித்த நேரத்திற்கு சற்றும் மாறாது தூங்கும் பெண்கள் கூட தன் பிள்ளைக்கு சிறு வலியென்றதும் விழித்திருந்து கண்மணி போல பாதுகாக்கும் நிலையே தாய்மையின் உச்சவரம் எனலாம். மனதாலும் உடலாலும் வேகமாக மாற்றங்களைச் சந்திப்பவர்கள் பெண்கள். மாற்றங்களை ஏற்றுக்கொள்ளவும் அதற்கேற்ப தன்னை சடுதியாய் மாற்றிக்கொள்ளவும் பெண்களால் மட்டுமே முடிகிறது.

அடக்கம், தியாகம், பொறுமை, இரக்கம், அன்பு, அழகு, ஆற்றல் தொண்டு, ஒப்புரவு முதலிய இயல்புகள் சேர்ந்த கலவையே பெண்மை எனப்படும். பூவையர் தனை பூப்போல் காப்போம். பெண்ணவள் தரும் புதுசுகம் ஏற்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கம்பரும்

தமிழ் வளர்த்த புலவர்கள் பலர் உள்ளனர். சில சமயங்களில் அவர்களுக்குள் போட்டி மனப்பாங்கும் காணப்பட்டுள்ளது. கம்பர் ஔவையார், ஒட்டக்கூத்தர் புகழேந்தி, கம்பர் ஒட்டக்கூத்தர் என அவற்றை காணலாம். ஆகவே கம்பர் மற்றும் ஔவையாரின் கவிப் போட்டியை இங்கு கண்ணுறலாம்.

சோழ நாட்டில் ஒரு ஊரில் சிலம்பி எனும் பெண் வாழ்ந்து வந்தார். அக் காலத்தில் புலவர்களால் பாடப்படுவதென்பது பெருமைக்குரிய விடயம். அப்படி ஒரு நாள் தன் இருப்பிடம் வந்த கம்பரிடம் தன்னைப் புகழ்ந்து ஒரு பாடல் பாடும் படி வேண்டினாள். ஆனால் கம்பரோ ஒரு பாடல் முழுமையாக பாடி முடிப்பதற்கு ஆயிரம் பொற்காசுகள் தர வேண்டும் எனக் கூறினார். ஆனால் சிலம்பியிடமோ அப்போது ஐநூறு பொற்காசுகள் மட்டுமே இருந்தன. ஆயினும் கம்பரின் வாயினால் தான் பாடப்பட வேண்டும் என விரும்பிய சிலம்பியோ தன்னிடம் இருந்த ஐநூறு பொற்காசுகளையும் கொடுத்து பாடல் பாட வேண்டினார். கம்பரும் சிலம்பி கொடுத்த பொற்காசுகளுக்கு ஏற்றவாறே இரண்டு வரிகள் கொண்ட அரைப் பாடலைப் பாடினார்.

**தண்ணீரும் காவியே தார்**
**வேந்தன் சோழனே**
**மண்ணாவதும் சோழ மண்டலமே..**

இதுவே கம்பர் பாடிய பாடலாகும். ஆனால் பாடலில் சிலம்பியின் பெயர் இடம்பெறவில்லை. இதனாலும், தன்னிடம் இருந்த ஐநூறு பொற்காசுகளையும் இழந்தமையாலும் கவலையடைந்த சிலம்பியோ அதன் பின் வறுமைக்கு தள்ளப்பட்டாள்.



இப்படி இருக்கும் போது மற்றொரு சமயம் அந்த ஊருக்கு வந்த ஔவையார் தன் களைப்பினைப் போக்கிக் கொள்ள சிலம்பியின் வீட்டுத்திண்ணையில் அமர்ந்து கொண்டார். அப்போது தன் தாகத்திற்கு நீர் தரும் படி சிலம்பியிடம் கேட்கவே சிலம்பியும் தான் குடிப்பதற்கென்று வைத்திருந்த சிறிதளவு கூழையும் ஔவையாருக்கு கொடுத்தாள். கூழைக் குடித்த ஔவையார் வீட்டுச் சுவரில் எழுதியிருந்த பாடல் பற்றி வினவினார். சிலம்பியும் நடந்தவற்றை ஔவையாரிடம் எடுத்துரைத்தாள். அது கேட்ட ஔவையார் சிலம்பியின் மீது பரிதாபம் கொண்டு அவளை செல்வந்தியாக மாற்றும் பொருட்டு கம்பர் எழுதிய பாடலின் கீழ் தானும் இருவரிகளை எழுதி பாடலை நிறைவு செய்தார்.

**பெண்ணாவாள் அம் பொற்**
**சிலம்பி அரவிந்தத்**
**தாளணியும் செம் பொற்**
**சிலம்பே சிலம்பு..**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையாரும்

இவையே ஔவையார் எழுதிய பாட லடிகள். சிலம்பியின் விருப்பப்படி அவள் பெயரையும் பாடலில் சேர்ந்து பாடி முடித் தார் ஔவையார். அதன் படி,

**தண்ணீரும் காவியே தார்**
**வேந்தன் சோழனே**
**மண்ணாவதும் சோழ**
**மண்டலமே பெண்ணாவாள்**
**அம் பொற் சிலம்பி அரவிந்தத்**
**தாளணியும்**
**செம் பொற் சிலம்பே சிலம்பு ..**

எனும் முழுமையான பாடல் பிறந்தது. இவ்வாறு ஔவையாரால் பாடப்பட் டமையால் வறுமையில் வாடிய சிலம்பி பெரும் செல் வந்தியாக மாறி விட்டாள்.

இதனை கம்பர் அறிந்து கொண்டார். தான் பாடல் பாடி வறுமையாக்கிய சிலம் பியை ஔவையார் பாடல் பாடி செல்வந்தியாக மாற்றி யமை கண்டு ஔவையார் மீது வெறுப்பும், கோபமும் கொண்டார். ஔவையாரை பழிவாங்கும் சந்தர்ப்பம் நோக்கிக் காத்திருந்தார் கம் பர். ஒருவாறு மீண்டும் ஔவையை சந்தித்தார் கம்பர். உடன் அவரை ஆரைக் கீரை யுடன் ஒப்பிட்டு



**ஒரு காலடி நாலிலைப் பந்தலடி**

என சிலேடையில் விளித்து ஒரு வினா வினைத் தொடுத்தார். அதன் பொருளை உணர்ந்து கொண்ட ஔவையார் கம்பர் தன்னை அடி என இழிவாக பேசியதை யும் கண்டு கொண்டார். உடன் கம்பரை விளித்து ஓர் பாடல் பாடினார்.

**எட்டுக்கால் லட்சணமே எமனேறும்**
**பரியே மட்டில் பெரியம்மை வாகனமே முட்ட**
**மேல் கூரையில்லா குட்டிச் சுவரே குலரா**
**மன் தூதுவனே ஆரையடா சொன்னாயடா**

அதாவது, எட்டுக்கால் என்பது எட்டு எனவும், கால் எனவும் பொருள்படும். தமி ழில் எட்டைக் குறிப்பது அ எனும் எழுத்தாகும். கால் என்பது வ எழுத்தைக் குறிப்பதாகும். ஆக அவலட் சணமே என முதல் அடி கொடுத்தார் ஔவையார். அடுத்து எமனேறும் பரி என் பது எருமையைக் குறிப்பது, ஆக எருமை யயே என்றார் ஔவையார். அடுத்ததாக மட்டில் பெரியம்மை என்பது மூதேவி. மூதேவியின் வாகனம் கழுதை. கழுதையே என்றார் ஔவை கம்பரை. அடுத்து குட்டிச் சுவரே என்கின்றார். அடுத்து குலராமன் தூது வன் அனுமன். அனுமன் வானர (குரங்கு) இனத்தை சேர்ந்தவன். ஆக குரங்கே என் றாள்ஔவை. இறுதியில் ஆரையடா இப்ப டிச் சொன்னாய் என வினவினார் கம்பரிடம் ஔவையார். இவ்வாறு தன்னை அடி என் றதுக்கு அடா எனும் பதில் சொல் மூலம் கம்பரை இகழ்ந்துரைத்தார் ஔவையார்.

கட்டுரையாளர்
இரா. நிஷாந்தன் (இராமநாதபுரம்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# இலக்கியம் தந்த இல்லறம்

இலங்கை இலக்கிய பரப்பிலே தனக்கென தனி முத்திரை பதித்துக் கொண்டவர். இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்களைப்பற்றி பேசும் பேசும் 'பேராதனை ஷர்புன்னிசா என்ற பெயரை யாராலும் மறக்க முடியாது. 'பேராதனை ஷர்புன்னிசா 'பேசாமடந்தை' ஆகிய புனைப்பெயர்களில் சுமார் ஐந்து தசாப்தங்களாக எழுதி வரும் மூத்த முன்னணி முஸ்லிம் பெண் எழுத்தாளரான பேராதனை ஷர்புன்னிசாவின் இயற்பெயர் சித்தி ஸர்தாபீ என்பதாகும்.. 'கிராமிய மணம்' என்ற நூலை தந்து ஈழத்து இலக்கியத்தை மணக்கச்செய்தவர். இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்களில் வயதிலும் அனுபவத்திலும் மூத்தவராக முன்னோடி எழுத்தாளராக திகழும் இவருக்கு தற்போது வயது 85.

நேர் காணல்:-
கலாபூசணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



எமது ஒளிஅரசி சஞ்சிகைக்காக கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த ஹீரஸ்ஸகல்ல என்ற இடத்தில் வசிக்கும் பேராதனை ஷர்புன்னி சாவை நாடி இவர் இல்லம் தேடி நாம் சென்ற போது வீதியின் ஒரு மருங்கில் கைத்தடியுடன் எமது வருகைக்காக காத்திருந்தார் இந்த பெண் ஆளுமையின் வாழ்க்கைத்துணைவரான கலா பூசணம் எஸ்.எம்.ஏ.ஹஸன். அவர்களும் ஒரு புகழ்பூத்த படைப்பிலக்கியவாதி. இருவருமே இன்முகத்துடன் எம்மை வரவேற்று பசரித்த னர். தனது இலக்கிய நினைவுகளை இனிதே எம்மோடு பகிர்ந்துகொண்டனர்.

தள்ளாத வயதிலும் அன்னாரிடம் காணப் பட்ட தாளாத அன்பை கண்டு மெச்சினோம். இனி பேராதனை ஷர்புன்னிசாவின் அனு பவப் பகிர்வினை ஒளிஅரசி வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்துகொள்கிறோம்.

**உங்களைப்பற்றி எமது வாசகர்களுக்காக கொஞ்சம் சொல்லுங்களேன்?**

திருகோணமலையைச்சேர்ந்த மொஹிதீன் பாவா அனுராதபுரத்தைச் சேர்ந்த சுலைஹா உம்மா ஆகியோரின் மகளாக 1933.04.13 ஆம் திகதி ஹட்டனில் தான் நான் பிறந்தேன். எனது தந்தை பொலிஸ் சார்ஜன்ட்டாக கடமை புரிந்தார். எனவே அவர் அடிக்கடி பல பகுதிக ளுக்கும் இடம்மாற்றம் பெற்று செல்ல நேரிட் டதால் என்னையும் அந்ததந்த பகுதி பாட சாலைக்குச் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தம். எனவே முறையாக படிப்பை மேற்கொள்ள முடியாத ஒரு துரதிஷ்ட நிலைக்கு ஆளானேன்.

**உங்களின் எழுத்துலக பிரவேசம் எப்படி ஆரம்பமானது?**

வாசிப்பில் எனக்கு அதிக நேசிப்பு உண்டு. இந்த வாசிப்பின் பயனாக எழுத்துலகில் எனக்கு இயல்பாகவே நாட்டம் ஏற்பட்டது. 1948 ஆம் ஆண்டு முதல் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதை கள் கவிதைகள் கட்டுரைகள் போன்றவற்றை எழுதியுள்ளேன். எனது ஆக்கங்கள் தினகரன் வீரகேசரி தினபதி சிந்தாமணி சுதந்திரன் லங்கா முரசு புதுமைக்குரல் போன்ற இலங் கைப் பத்திரிகைகளிலும் இஸ்லாமிய தாரகை மணிவிளக்கு ஷாஜஹான் மணிச்சுடர் ஆகிய இந்திய இதழ்களிலும் பிரசுரமாகியுள்ளன.

எனது தந்தை வழியாக கிழக்கு மாகாணத் தைச் சேர்ந்த நான் கிழக்கிலங்கை கிராமிய பாடல்களில் கவரப்பட் டேன். அவற்றையெல்லாம் சேகரிப்பதில் அதிக அக்கறை காட்டினேன். எனது இலக்கிய படைப்புகளிலே நாட்டாரியல் என்ற கிராமிய இலக்கியம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இதில் கிராமிய இலக் கிய பாடல்கள் கதைகள் நொடிகள் பழமொழி கள் என்பன உள்ளடங்குகின்றன. அத்தோடு நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள், பழக்கவ ழக்கங்கள், சடங்கு, சம்பிரதாயங்கள் போன்ற வற்றை உள்ளடக்கிய ஓர் ஆய்வுத்துறையைக் கொண்டதாகவும் எனது படைப்புகள் காணப் படுகின்ற ன.

நாட்டார் இலக்கியத்தை ஏட்டிலக்கிய மாக்கும் நோக்கத்துடன் நாட்டார் பாடல் களைத் தழுவி நான் எழுதிய முதலாவது நூல் தான் 'கிராமிய மணம்' என்ற பெயரில் 1996.11.10 அன்று வெளிவந்தது.

இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர் களின் முன்னோடி எழுத்தாளராக திகழ்ந்த நான் தினபதி சிந்தாமணி பத்திரிகைகளின் உடுநுவர தொகுதி செய்தியாளராகவும் கட மையாற்றியுள்ளேன்.

கிராமப்புற முஸ்லிம் பெண்கள் மார்க்கக் கல்வி கற்பதையும் உயர் கல்வி கற்பதையும் தடுத்து நிறுத்திய அந்த கால கட்டதில் 'முஸ் லிம் பெண்களின் கல்வி' 'முஸ்லிம் பெண் களும் சமூக சேவையும்' 'முஸ்லிம் பெண் களும் அரசியலும்' போன்ற தலைப்புகளில் வீரகேசரி வனிதா மண்டலம் பகுதியில் பல தொடர்கட்டுரைகளையும் எழுதி வந்தேன். இதனால் நான் பலரின் விமர்சனங்களுக்கும் உள்ளானேன்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஏற் பாடு செய்யும் கூட்டங்களில் எல்லாம் சொற்பொழிவாற்ற கணவருடன் சேர்த்து என்னையும் அழைப்பார்கள். எனவே என் கணவரும் அவர் செல்லும் கூட்டங்களுக்கு என்னையும் அழைத்துச்செல்வது வழக்கம். எல்லா மேடைகளிலிலும் பெண்களின் விழிப்புணர்வுக்காகவே உரையாற்றியுள் ளேன். எனது பேச்சில் முற்போக்கு சிந்தனை களே தொனிக்கும்.

**முற்போக்கு சிந்தனையோடு உரை யாற்றும் போது உங்களுக்கு எதிர்ப் புகள் ஏதும் வந்ததில்லையா?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்புகள் பலவற்றை எதிர்நோக்கியுள்ளேன். எனினும் நான் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்தேன். பெண்கள் குறிப்பாக முஸ்லிம் பெண்கள் கல்வியில் மட்டுமன்றி எல்லா துறைகளிலிலும் முன்னேற வேண்டும் என்று நான் அக்கரைப்பற்றில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் ஆக்ரோஷமாக உரையாற்றினேன். அப்போது எனது பேச்சை சகிக்காத ஒருசிலர் என் மீது தக்காளிப் பழங்களை வீசி தாக்கினார்கள். ஆனால் நான் அதனை பொருட்படுத்தவில்லை. ஆனால் அதே கிழக்கு மாகாணத்தின் நிந்தவூரில் தான் இன்று முதல் முஸ்லிம் பெண் அதிபர் என்ற பெருமையையும் இலங்கையிலேயே முதல் முஸ்லிம் பெண் பண்டிதர் என்ற பெருமையும் பெற்ற மைமூனா செய்னுலாப்தீன் இருக்கிறார் என்று அறியும் போது எனக்கு பெருமையாக இருக்கிறது. இந்த சிறப்புகளை பெண்கள் பெற வழிவகுத்ததே நான் தான் என்பதில் மன ஆறுதலடைகிறேன். முன்னாள் கல்வி அமைச்சராக இருந்த காலஞ்சென்ற பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் கூட அன்னாரின் கூட்டங்களில் என்னையும் அழைத்து பெண்களின் கல்வி விழிப்புணர்ச்சிகாக உரையாற்றுமாறு கூறுவார். நானும் அன்னாரின் பல மேடைகளில் பெண்களுக்காக குரல் கொடுத்துள்ளேன்.' என்று என்னிடம் கூறி தனது கடந்த கால ஆதங்கத்தையும் அனுபவத்தையும் என்னோடு பகிர்ந்த கொண்டார் இந்த இலக்கிய மாதரசி.

**உங்களின் இயற்பெயர் சித்தி ஸர்தாபி. அப்படியானால் பேராதனை ஷர்புன்னிசா என்ற பெயர் உங்களுக்கு எவ்வாறு வந்தது?**

இந்தியாவைச்சேர்ந்த பிரபல பத்திரிகை அதிபர் திருச்சி றஸூல் என்பவர் ஒரு பத்திரிகையை வெளியிட்டார். அவர் இலங்கைக்கும் அடிக்கடி வருவார். நான் அவரின் பத்திரிகைக்கும் அடிக்கடி ஆக்கங்களை எழுதியனுப்புவேன். அவர்தான் என்னை அழைத்து 'சகோதரியே நீங்கள் பேராதனை நகரில் தானே இருக்கிறீர்கள். எனவே சித்தி ஸர்தாபி என்ற உங்கள் பெயரை பேராதனை ஷர்புன்னிசா என்று மாற்றிக்கொள்ளுங்களேன்' என்றார். அதற்கிணங்கவே நான் சித்தி ஸர்தாபி என்ற என்ற எனது பெயருக்குப்பதிலாக பேராதனை ஷர்புன்னிசா என்ற பெயரில் எழுத ஆரம்பித்தேன்.

**உங்கள் கணவரான கலாபூசணம் எஸ்.எம்.ஏ.ஹஸன் அவர்களும் ஒரு புகழ் பூத்த படைப்பிலக்கியவாதி .எனவே அன்னாரைப்பற்றியும் நாம் தெரிந்துக்கொள்ளலாமா?**

ஆமாம்! கலாபூசணம் எஸ்.எம்.ஏ.ஹஸன் என்ற எனது கணவரும் ஒரு படைப்பிலக்கியவாதி தான். இலக்கியம் தான் எம்மிருவரையும் இல்லற வாழ்க்கையிலும் ஒன்றிணைத்தது. நாமிருவரும் இலக்கிய தம்பதிகளாக இனிதே வாழ்கிறோம். இவர் இலக்கிய உலகிற்கு சுமார் 12 நூல்களை தந்த பன்னூலாசிரியர். பாடசாலை ஆசிரியராக ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் விரிவுரையாளராக கல்வி அதிகாரியாக என பல பதவிகளை வகித்து தற்சமயம் ஓய்வு பெற்றவர். நாடறிந்த எழுத்தாளர். அன்னாரும் ஒரு சிறந்த படைப்பிலக்கியவாதி தான். அவரது இலக்கிய ஆளுமைக்காக கலாசார அமைச்சு அவருக்கும் 'கலாபூசணம்' விருது வழங்கி கௌரவித்தது. ஆமாம் அன்னாரை எனது வாழ்க்கைத் துணைவராக ஏற்ற எனக்கு ஜெமிலுன் இம்ராணி என்ற பெயரில் ஒரு மகளும் முஹம்மது றூமி முஹம்மது ரிஸ்மி என்ற பெயர்களில் இரு புதல்வர்களும் உள்ளனர். இவர்கள் மூலம் எனக்கு பேத்தி பேரன்மாரும் உள்ளனர். எனது மகள் ஆசிரியராக கடமை புரிந்து தற்சமயம் ஓய்வு பெற்றுள்ளார். எனது மூத்த மகன் ரூமி ஹசன் ஹோட்டல் கூட்டுத்தாபனத்தில் கடமை புரிகிறார். இளைய மகன் முஹம்மத் ரிஸ்மி ஆங்கில ஆசிரியர். ஓமானில் சிறிது காலம் பணி புரிந்தார். தற்சமயம் நமது நாட்டில் கடமையாற்றுகிறார்.

**உங்களது இலக்கியப் பங்களிப்புக்காக கிடைத்த கௌரவங்கள் பற்றி...?**

எனது இலக்கிய சேவையை அங்கீகரித்து கலாசார அமைச்சினால் 'கலாபூஷணம்' அரச விருது வழங்கப்பட்டது. அவ்வாறே இந்து கலாசார அமைச்சினால் 'தமிழ் ஒளி' என்ற சிறப்புப்பட்டமும் விருதும் மலையக கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார பேரவையினால் 'இரத்தின தீபம்' விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டேன்.

**உங்களது இலக்கிய வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வுகள் பற்றி சற்று கூறுங்களேன்?**

இந்திய இலக்கிய ஆளுமைகள் எல்லோரும் எனது கணவரின் நல்ல நண்பரகள். இலங்கைக்கு விஜயம் செய்தால் கண்டிக்கு கண்டிப்பாக வருவார்கள் எமது வீட்டில் தங்கிவிட்டுத்தான் செல்வார்கள். இறையருட் கவிமணி பேராசிரியர் அப்துல் கபூர் அவர்கள் ஒரு வார காலம் எமது வீட்டில் தங்கியிருந்தார்.

அவ்வாறே அ.ச.அப்துஸ் சமது போன்றோரும் வீட்டுக்கு வருவார்கள். இலக்கியம் பேசுவார்கள். நானும் சுமார் பத்துமுறை இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளேன. திப்புசுல்தானின் மாளிகை உட்பட எல்லாம் கண்டு களித்துள்ளேன். எனது இலக்கிய வாழ்வில் இவை என்றும் பசுமை நினைவுகளே.

**ஒரு பெண் மூத்த எழுத்தாளர் என்ற வகையில் எமது 'ஒளி அரசி' சஞ்சிகை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

இந்தியாவிலிருந்து வரும் 'கல்கி'யை விட மிகவும் தரமான சஞ்சிகையாக அழகாக இருக்கிறது. அட்டைப்படமே தூக்கலாக இருக்கிறது. கையில் எடுத்ததும் கடுகதியில் படித்து முடித்திட வேண்டும் என்ற ஆவல் மேலிடுகின்றது என்றார் மலர்ச்சியுடன்.

இவ்வாறு எமது 'ஒளி அரசி' சஞ்சிகைக்கு புகழாரம் சூட்டிய ஆளுமைமிக்க இந்த மாதுசிரோன்மணியை நாமும் இம்மாத நட்சத்திர இல்லத்தரசியாக மகுடம் சூட்டி மகிழ்கிறோம். அத்தோடு நம்மிடையே வாழும் இந்த இலக்கிய ஆளுமைமிக்க தம்பதிகள் இருவரும் இன்னும் பல்லாண்டு காலம் நோய்நொடிகளின்றி வாழ வேண்டும் இலங்கை இலக்கிய உலகிற்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டும் என வாழ்த்தி விடைபெற்றோம்.

PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

## கொஞ்சம் சிரிக்க

ஆசிரியர் அமிலம் காரம் பற்றி பாடம் நடத்திக்கொண்டிருந்தார். விளங்கப்படுத்தி முடிந்ததும் ஏதாவது சந்தேகம் இருந்தால் கேட்கலாம் என்றார் மாணவர்களிடம். அவசரமாய் எழுந்தான் நம்ம பால்பாண்டி.

பால்பாண்டி: சேர் எனக்கொரு டவுட்

ஆசிரியர் : கேளு பால் பாண்டி, எதைப்பத்தி டவுட்?

பால்பாண்டி: காரம் பற்றி சேர்.

ஆசிரியர் : சரி கேளு

பால்பாண்டி : ஒவ்வொரு சவர்க்காரம் ஒவ்வொரு நிறமா இருக்கு, பின்ன ஏன் சவர்க்கார நுரை எல்லாமே வெள்ளையாய் வருது, சேர்?

ஆசிரியர் : ?????????

குறும்புக்கார மகனுக்கும் அம்மாவுக்குமான உரையாடல்

மகன்: அம்மா எனக்கு நிலாவைப் பிடிக்கணும்னு ரொம்ப நாளா ஆசை.

தாய்: அதுக்கு நிறையப்படிக்கணும், இங்கிலீஸ் பேசணும், நாசாவுக்குப்போகணும்.

மகன்: என்னம்மா சொல்றாய், பக்கத்துவீட்டு சோமு மாமாவோட பொண்ணு நிலாவைப் கல்யாணம் கட்டிக்கிறதுக்கு எதுக்கு நாசாவுக்கு?

தாய்: டேடய் -----உன்னை ------

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கவி சொல்லும் கதை

# தள்ளிப் போனவை

முற்றத்து நிலவினிலே
கூட்டாஞ்சோற்றுடன்,
கறுப்பு வெள்ளை
படம் பார்த்த நாட்கள்.. .
பாட்டியின் இடுப்பிலே
சொருகிய சில்லறை
தும்பு முட்டாசுடன்..
செலவாகியது! ம்..


இல்லை இல்லை
என்று சொல்லி அம்மா
ஐந்து ரூபாய் கொடுத்ததை..
தம்பி தங்கையுடன்
லட்சுமி தியட்டரில்..!
நடுச்சாமத்தில் செலவுசெய்ததை
தோழர், தோழியுடன்..
ஐஸ்போலும், கிட்டிப்புள்ளும்,
கொக்கான், கிளித்தட்டு,
கல்லுக்குத்தியுடன்,
நாயும் இறைச்சியும்..
அண்ணனிடம் கற்ற சிலம்பாட்டம்,
குத்துச்சண்டையும்.,
மாட்டு வண்டிப் பயணமும்,..
தள்ளிப்போனவையோ!!!

ஆச்சி தந்த ஒடியற் கூழும்,
பசளிக் கீரைப்புட்டும்..
சுட்ட பனங்காயுடன்
கரைத்த புளியும்..
பக்குவமாய் வறுத்தெடுத்த
குரக்கன் மா புட்டும்..
கையுருண்டை பழஞ்சோறும்..
அம்மன் கோயில் மரத்தடியில்
சிலம்பு திருடிய கதையோடு
உண்ட அன்ன தானமும்..
அக்காவின் சங்கிலி
நாம் படுத்திருந்த மரத்தடியில்
காணப்பட்டதும்..!!!
தள்ளிப் போனவையோ!

சாணித்தரையில் படுத்திருந்த
நாட்கள் எங்கே!
விடிய லை! விடிய வைத்த
சேவல் எங்கே!
வீட்டோர துளசிச் செடி.. எங்கே!
எங்கே தான் போன வை!
நான் பார்த்து வாழ்ந்த
சாய்ந்து உறங்கிய மாமரம்..
வாடைக்காற்றுடன் போய்விட்டதா..
இல்லை தள்ளித்தான் போய்விட்டதா,,
இப்படியா, என் வீட்டு கண்ணாடி
என் முகத்தைக்காட்ட வில்லை..
சிறு பிள்ளை வடிவம் கொண்டேனே
பறந்திருந்தேனே.. இப்போது
இறக்கை சிறகடிக்கிறேன்
முயற்சிக்கிறேன்.
தள்ளிப் போனவைக்காக..!!

இது தான் வாழ்க்கையா!!
இது தான் நியதியா!..
இது தான் உலகமா..
கடல் மீது தத்தளிப்பவர்கள்
தத்தளியுங்கள்,
கனியை ரசிப்பவர்கள்
உண்ணுங்கள்.
போக வழியின்றி நிற்பவர்கள்
நில்லுங்கள்..
இது தான் தள்ளிப்
போனவையிலிருந்து பிறப்பித்தவை!
இது தான் வாழ்க்கை
அறியாத மானிடர்க்கு
அக்கரையில் இச்சை.
கல் தரையில்
கைபோட்டு நீந்துபவர்.
காலமிட்ட கட்டளையை
மாத்துவது தான் எளிதா!
இட்ட கணக்கை
தீர்த்து வைக்கத்தான் முடியுமா,.
நாட்டிலுள்ள விசத்தையெல்லாம்
நான் குடிக்க!
இறுதியில் வந்ததை
வரவில் வைத்து
செல்வதை செலவில் வைக்கும்
மானுடராய்..!
நானும் தள்ளிப் போகிறேனோ!..

பு. ராஜ்குமார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயம்

காலத்தால் மறக்கப்பட்ட விடயங்கள் எம்மத்தியில் ஏராளம் உள்ளன. அவை தொலைந்து போன நினைவுகளாகவும் அருகிவிட்ட ஆரோக்கியமாகவும் போயிற்று. தொழிநுட்பம் தீன்று தீர்த்த அவற்றை அசைபோடும் எமது முயற்சியில் உருவான ஒன்றே பார்வைகள் புதிது என்னும் இப்பகுதி. அருகிவிட்ட விளையாட்டுக்கள் பற்றிய பார்வையாகவே மிளிர்கின்றது இப்பகுதி.

இம்மாத பார்வைகள் புதிது பகுதியில் தாயம் விளையாடுதல் தொடர்பாக பார்க்கவுள்ளோம். இது பெரும்பாலும் பெண்கள் விளையாடும் அகவிளையாட்டே ஆகும். இதன் தோற்றமானது போரில் வீரர்களை நகர்த்திச்செல்வது போன்றே அமைகின்றது. கட்டவிளையாட்டின் பண்புகள் தாயவிளையாட்டிலும் காணப்படுகின்றன. இவ்விளையாட்டிலிருந்தே பகடை, செஸ் போன்ற விளையாட்டுகள் தோன்றியிருப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது. ஆகக்குறைந்தது இரண்டு பேர்கள் விளையாடும் விளையாட்டு இது.

தாயம் என்ற சொல்லுக்கு உரிமை என்று பொருள் உண்டு. உறவுக்காரர்களை தாயத்தார் என்று கூறுவதுண்டு. தொல்காப்பியத்தில் இதைப்பற்றிய குறிப்புகளைக் காணலாம். இவ்விளையாட்டில் கலந்து கொள்பவர்கள் பந்தயம் கட்டுவார்கள். பந்தயப்பொருள் தன்னை வந்தடைய வேண்டும் என்ற எண்ணத்தில் உரிமை அடிப்படையில் இப்பெயர் சூட்டப்பட்டிருக்கலாம். சோழிகளைக் குலுக்கிப் போடும் போது ஒன்று விழுந்தால் தாயம் எனக்கொள்ளப்படும். சோழிக்குப்பதிலாக புளியம் விதையினை இரண்டாக்கிப் பயன்படுத்துவதுண்டு.

எந்த ஒரு தொழிலைத் தொடங்கும் போதும் இலாபம் என்று கூறுகின்றனர். அது போலவே இவ்விளையாட்டிலும் தாயம் என்ற சொல்லும் வெற்றி பெறுவதைக் குறிப்பதாக ஆரம்பிக்கப்படலாம்.

முதலில் தாயம் போட்டால்தான் விளையாட்டை ஆரம்பிக்கமுடியும். சோழிகளில் விழும் எண்களுக்கேற்ப வலப்புறமாக காய்களை நகர்த்தவேண்டும். சில கட்டங்களில் குறியீடு இடப்பட்டிருக்கும். ஒருவர் காய் இருக்கும் கட்டத்தில் இன்னொருவர் காய்வைக்க அதனை நேர்ந்தால் வெட்டுதல் என்பர். வெட்டினால் தான் காயை உள்கட்டத்திற்கு கொண்டுசெல்லமுடியும். குறியிடப்பட்ட கட்டம் யாருக்கும் சொந்தமானது அல்ல. யாருடைய காயும் குறியீட்டு கட்டத்தில் தங்கலாம். நான்கு அல்லது ஆறு காய்களை யார் முதலில் பழமாக்குகின்றனரோ அவர் வெற்றிபெற்றவராவார். ஒவ்வொரு வகை தாய வரைபடங்களுக்கேற்ப விதிமுறைகள் மாறுபடும்.

தமிழக கிராமப்புறங்களில் தாயவிளையாட்டை பல பெயர்களில் குறிப்பிடுவர்.

புளியம் விதைகளில் ஒன்று மட்டும் நிமிர்ந்து காணப்பட்டால் தான் தாயம் என்பர்.

நான்கும் நிமிர்ந்திருந்தால் 4 என்பர்.

நான்கும் கவிழ்ந்திருந்தால் 8 என்பர்.

தாயம், எட்டு, நான்கு என்பன விழுந்தால் மீண்டும் ஆட வாய்ப்புண்டு.

இவ்விளையாட்டின் மூலம் பல அறிவுத்திறன் வாய்ந்த செயற்பாடுகள் அதிகரிக்கின்றன. காய்களை சிறப்பாக நகர்த்துவதற்கு நுண்ணிய அறிவுத்திறன் தேவைப்படுகின்றது. எதிரியின் காய்களை வெட்டுவதற்கு சிந்தனைத்திறனை கூர்மையாக வைத்திருப்பது அவசியம். தாய விளையாட்டின் மூலம் கணிதஅறிவு மேம்படுகின்றது.

தமிழரசி

நன்றி வலைத்தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை மீட்டும் அன்பு வீணை

இந்த உலகை படைத்த இறைவன் அனைத்து இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருக்க முடியாது என்பதால், ஒவ்வொரு மனித உயிருக்கும் தனது உருவாக தாயைக் கொடுத்தார். அன்னையும், ஆண்டவனும் தனித்தனி வடிவங்கள் இல்லை என்பதை உலகிற்கு இந்த தத்துவம் மூலம் இறைவன் உணர்த்தியிருக்கிறான். இறைவனின் படைப்பில் தன்னலம் கருதாத படைப்பு ஒன்று உண்டு என்றால் அது அன்னை மட்டுமே என்றால் மிகையாகாது.



அம்மா என்ற சொல்லை தமிழ் மொழியைத் தவிர வேறு எந்த மொழியிலும் சிறப்பாக எடுத்து இயம்ப முடியாது என்பது உலகறிந்த தமிழ்அறிஞர்கள் கருத்தாகும்.

அம்மா எனும் வார்த்தையின் அ முதல் எழுத்து உயிர் எழுத்து. கருவில் உயிருக்கு உயிர் கொடுக்கிறாள் என்பதை விளக்குகிறது. கருவில் உருவான உயிர் உருவாக்கம் பெருவதற்கு, தாய் உடல்(மெய்) கொடுக்கிறாள் என்பதை குறிக்கவே ம் எனும் மெய் எழுத்து அமைந்தது. தான் உருவாக்கிய குழந்தையை பத்து மாதங்கள் சுமந்து, பெற்று, உலகின் வெளிச்சத்தை காண வழிகாட்டுகிறாள் என்பதையே கடைசி எழுத்தான உயிர் மெய் எழுத்தான மா, குறிக்கிறது. இந்த தத்துவத்தை உலகிற்கு உணர்த்தவே உயிர், மெய், உயிர்மெய் என மூன்று எழுத்துக்கள் சேர்ந்து அம்மா என்ற சொல் உருவாக்கம் பெற்றது.

தாயானவள்தன்வாழ்வுமுழுமையையும் தன் பிள்ளைகளுக்காகவே அர்ப்பணிப்பவள். தனக்கான சுகங்களைக்கூட தன் பிள்ளைகளுக்காக ஒதுக்கிவிடும் இயல்பு அன்னையையன்றி யாருக்கு உண்டு?

இதுபோல், அன்னையின்பெருமை குறித்து அறியாதவர்கள், பேசாதவர்கள் இந்த உலகில் யாருமே இருக்க முடியாது. வணங்க வேண்டிய அன்பின் வடிவமான அன்னையை வருத்தப்பட வைக்கக்கூடாது என்பது ஒவ்வொருவரினதும் மனதில் உள்ளதே. அன்னையர் தினத்தினை முன்னிட்டு அகம் திறந்த பிள்ளைகளின் பதிவுகள்.

**தவராசா செல்வா**

அது தொண்ணூறுக்கும் 2004க்கு இடைப் பட்ட காலப் பகுதி என நினைக்கிறேன். யுத்த காலப்பகுதியில் தந்தையைப் பிரிந்து அம்மாவுடன் இடம் பெயர்ந்து வடக்குப் பிரதேசத்தின்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேசிய ரீதியான திருத்தல் சேவையுடன் தரம் -05 மாணவர்களின் (2018) பரீட்சைப் பெறுபேற்று அடைவை அறிந்துகொள்வதற்கு ஒளிஅரசி நடத்தும் தனித்துவப் பரீட்சை செயற்றிட்டம்

# சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாள் - 2018

கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல சிங்கள பத்திரிகையில் வெளிவந்த வினாத்தாள் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு எமது ஆசிரியர் குழுவால் மேற்பார்வை செய்யப்பட்டு இங்கு வெளியிடப்படுகின்றது.

இவ்வினாத்தாளை நேரம் கணித்து சுயமாக எழுதச்செய்து இல 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி என்ற முகவரிக்கு அனுப்பினால் எமது பரீட்சைக் குழுவினரால் அவ்வினாத் தாள் திருத்தப்பட்டு புள்ளியிடப்பட்டு மீண்டும் உங்கள் முகவரிக்கு 10 நாட்களுக்குள் தபாலிடப்படும். (முகவரி எழுதப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட மேலதிக கடித உறை ஒன்றையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

## ஒளிஅரசி பரீட்சைத் தொடர் - 08(மே)

நல்லதொரு குடும்பம்

மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2018

தரம் 5

## தபால் மூல பரீட்சை செயற்றிட்டம்

முழுப்பெயர்: - ..............................................................................

பாடசாலை: - ..............................................................................

வீட்டின் சரியான தபால் முகவரி - ..............................................................

..............................................................

தொ.பே. இல. .................................... பிறந்த திகதி. ....................................

வினாத்தாள் -I
புள்ளிப் பதிவு

வினாத்தாள் -II
புள்ளிப் பதிவு

மொத்தப்புள்ளிகள்

### முக்கிய குறிப்பு

கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் புள்ளி விபரமும், விடைகளும் அடுத்த ஒளி அரசியில் வெளிவரும்.

பிரதம ஆசிரியர்


மே-2018





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


★ கீழே தரப்பட்டுள்ள உருவங்களிலே உள்ள உயிரினங்களை / பொருட்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கமுடியும். அவ்வாறாக பிரிக்கப்பட்ட சரியான விடையைத் தெரிவு செய்க.


(01)



A


B


C



D



E



F

1) AB CF DE 2) AE BD CF 3) AC BD EF

(02)


A


B


C






D



E


F

1) AB CF DE 2) AE BF CD 3) AC BD EF

(03) அடுத்ததாக வரவேண்டிய உருவைத் தெரிவுசெய்க.








1)


2)


3)

(04) புள்ளிக் கோடு


முறிகோடு

உருவில் காணப்படும் செவ்வக வடிவ தாளை முறிந்த கோடு வழியே இரண்டாக மடித்து இரு பக்கங்களையும் சேர்த்து புள்ளிக்கோடுகள்வழியே வெட்டிய பின்னர் கிடைக்கும் முக்கோணிகளின் எண்ணிக்கையையும் நால்பக்கங்களின் எண்ணிக் கையையும் முறையே ,

1. 6 உம் , 1 உம் 2. 5 உம் , 2 உம் 3. 8 உம் , 3 உம்

(05) பாடசாலை ஆரம்பமாவது நாளை மறுநாளாகும். நாளை மறுநாள் ஜனவரி 2ஆம் திகதி திங்கட்கிழமை எனின், நேற்றைய தினம் யாது?

1) டிசெம்பர் 30 வெள்ளிக்கிழமை 2) டிசெம்பர் 31 வெள்ளிக்கிழமை
3) டிசெம்பர் 29 வெள்ளிக்கிழமை

(06) சனுலி கணிதத்தில் பெற்ற புள்ளி ரம்யா பெற்ற புள்ளிகளில் 1/3 ஆகும். ரம்யாவை விட துஷாரி 10 புள்ளிகள் அதிகமாக பெற்றாள். துஷாரி பெற்ற புள்ளிகள் 85 எனின், சனுலி பெற்ற புள்ளிகள் எத்தனை?


1) 25 2) 60 3) 75

(07) பண்ணை ஒன்றிலுள்ள ஆடுகளின் எண்ணிக்கை, கோழிகளின் எண்ணிக்கையின் 10 மடங்காகும். கோழிகளின் எண்ணிக்கை 10 எனின், அங்குள்ள முழு உயிரினங் களினதும் கால்களின் எண்ணிக்கை யாது?

1) 410 2) 380 3) 420




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(08) 

இவ்வுருவில் காணப்படத்தக்க செங்கோணங்கள் எத்தனை?

1) 8 2) 9 3) 12

(09) முதலில் தரப்பட்டுள்ள உருவை A யிலிருந்து நோக்கும்போது புலப்படும் விதத்தை தெரிவுசெய்க.



A


1) 

2) 

3) 

(10) பண்ணை ஒன்றிலுள்ள ஆடுகளின் எண்ணிக்கை, கோழிகளின் எண்ணிக்கையின் 10 மடங்காகும். கோழிகளின் எண்ணிக்கை 10 எனின், அங்குள்ள முழு உயிரினங் களினதும் கால்களின் எண்ணிக்கை யாது?


1) 410 2) 380 3) 420

(11) 


பின்வரும் தாயக்கட்டையின் இரு நிலைகளை அவதானித்து 5 இலக்கத்திற்கு எதிராக காணப்படும் முகத்தில் உள்ள இலக்கம் யாது?

..............................................................

★ **கீழே தரப்பட்டுள்ள பலகையால் செய்யப்பட்ட கனவுருக்களை கீறிடப்பட்டுள்ள பகுதியை வெட்டி வேறாக்கும்போது கிடைக்கப்பெறும் முகத்தோற்றத்தைக் குறிக்கும் விடைக்குரிய எண்ணை வட்டமிடுக.**

(12) 


1) முக்கோணம் 2) செவ்வகம் 3) சதுரம்

(13) 


1) வட்டம் 2) சதுரம் 3) முக்கோணி

★ **கீழே தரப்பட்டுள்ள உருவங்களின் ஒழுங்கு முறையை சரியாகக் காட்டும் விடையின் கீழ் கோடிடுக.**


(14)




A



B



C



D



1) A, B, D, C 2) B, D, A, C 3) A, D, B, C


(15) 40 மாணவர்களைக் கொண்ட வகுப்பு ஒன்றில் 16 மாணவர்கள் ஆங்கிலப் பாடத்திலும், 18 மாணவர்கள் கணிதப்பாடத்திலும், 10 மாணவர்கள் இரு பாடத்திலும் சித்தியடைய வில்லை என்றால் இரு பாடங்களிலும் சித்தியடைந்தவர்கள் எத்தனைபேர்?

1. 16பேர் 2) 24 பேர் 3) 4 பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(16) 
A

B

C

D

1) A, C, D, B 2) A, B, C, D 3) A, D, C, B

(17) குரங்கு ஒன்று மரத்தில் முதலாவது நிமிடத்தில் 13 மீற்றர் ஏறுகின்றது. அதன் அடுத்த நிமிடத்தில் 6 மீற்றர் சறுக்குகின்றது. எனில் 62 மீற்றர் உயரமான மரத்தை அடைய எவ்வளவு நேரம் எடுக்கும்?

1) 4 நிமிடங்கள் 2) 14 நிமிடங்கள் 3) 15 நிமிடங்கள்

(18) கணித பாட பரீட்சையில் 10 வினாக்கள் காணப்பட்டன. சரியான விடைக்கு 3 புள்ளி வழங்கப்பட்டு பிழையான விடைக்கு 2 புள்ளிகள் வீதமும் கழிக்கப்படட்டன. எனில் ஒருவர் 15 புள்ளிகள் பெற்றார் என்றால் அவர் எத்தனை கேள்விகளுக்கு சரியான பதில் அளித்திருப்பார்?

1) 5 2) 7 3) 6

(19) கூடையொன்றில் இருந்த மரக்கறி வகைகளுள் பல இருந்தன. அவற்றுள் மூன்று தவிர்ந்த மிகுதி புடலங்காய்களாகும். மூன்று தவிர்ந்த ஏனையவை பீர்க்கங்காய்களாகும். மூன்று தவிர்ந்த ஏனையவை பாகற்காய்களாகும். மூன்று தவிர்ந்த ஏனையவை போஞ்சிகள் எனின், கூடையில் இருந்த மரக்கறிகள் எத்தனை?

1) 3 2) 4 3) 5

(20) போட்டி ஒன்றில் பல கார்களும் ,மோட்டார் சைக்கிள்களும் போட்டியிட்டன. கலந்து கொண்ட வாகனங்களின் சில்லுகளின் எண்ணிக்கை 84. மற்றும் சாரதிகள் எண்ணிக்கை 26 என்றால் அப்போட்டியில் பங்குபற்றிய மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை யாது?

1. 10 2. 16 3. 18

★ **கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்க.**

சுமன் மற்றும் விமல் இருவருக்கும் பேனா பரிசாகக் கிடைத்தது. பதுமன் மற்றும் விமல் இருவருக்கும் புத்தகம் பரிசாகக் கிடைத்தது. சுமனுக்குப் பென்சில் பரிசாகக் கிடைக்கவில்லை. ஆனால், மற்ற பிள்ளைகளுக்குக் கிடைத்தது.


(21) புத்தகம், பேனா, பென்சில் ஆகிய மூன்று பரிசுகளையும் பெற்றுக்கொண்ட மாணவன்

1) சுமன் 2) விமல் 3) பதுமன்

(22) இந்த மூன்று மாணவர்களிடையேயும் வழங்கப்பட்ட பேனா, புத்தகம், பென்சில் ஆகிய மூன்று பரிசுகளினதும் எண்ணிக்கை யாது?

1) 06 2) 07 3) 09

(23) இவ்வுருவை விட அடுத்த அளவில் பெரியதாக சதுர வடிவமாக பூரணப்படுத்து வதற்கு மேலும் தேவைப்படும் சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?



1) 16 2) 7 3) 2

(24) ஒரு பெட்டியில் சரிசமனான 3 சிவப்பு பொத்தான்களும், 5 பச்சைப் பொத்தான்களும், 7 வெள்ளைப் பொத்தான்களும் உள்ளன. பொத்தான்களைப் பார்க்கமால் பெட்டியிலிருந்து பொத்தான்களை எடுக்கும்போது இவற்றிடையே ஒரு பச்சைப் பொத்தான் கட்டாயம் இருப்பதற்கு பெட்டியிலிருந்து வெளியே எடுக்க வேண்டிய பொத்தான்களின் குறைந்த பட்ச எண்ணிக்கை யாது?

1. 5 2) 10 3) 11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(25) மனிதனுக்கு ⟶ சப்பாத்து எனின்,
குதிரைக்கு ⟶ ................. இடைவெளிக்குப் பொருத்தமான விடை எது?
1) கூர் 2) கால் 3) லாடம்

(26) நட்சத்திரம் ⟶ வெளிச்சம் எனின்,
............... ⟶ சப்தம். இடைவெளிக்குப் பொருத்தமான விடை எது?
1) ஒலி 2) குழல் 3) கோஷம்

(27) இடைவெளிக்குப் பொருத்தமான இலக்கங்களைக்கொண்ட கூடுகள் உள்ள விடையைத் தெரிவுசெய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 4 | 7 |
| 4 | | 7 | 10 |
| 6 | | | 12 |
| 7 | 8 | | 13 |




(28) சம்பத் முற்றத்தில் வட்டம் ஒன்று வரைந்து பின்வரும் ஒழுங்கு முறையில் பாய்ந்து விளையாடினான்.




1 ⟶ 6 ⟶ 3 ⟶ 8


எனின், சம்பத் அடுத்ததாக பாயவேண்டிய எண் யாது?
1) 05 2) 02 3) 07


(29) விளையாட்டு ஆரம்பித்த இடத்திலிருந்து மீண்டும் 1ஆம் எண்ணுக்கு பாய்வதற்கு அவன் பாயவேண்டிய தடவைகள் எத்தனை?
1) 05 2) 03 3) 09


(30) சுரேசின் இரு புதல்விகளின் வயதைப் பெருக்கினால் 221 விடையாக வரும் அவர்களின் வயதுகளைக்கூட்டினால் 30 விடையாக வரும் என்றால், அப் புதல்விகளில் இளையவரின் வயது என்ன?
1) 17 வயது 2) 15 வயது 3) 13 வயது

(31) 10 பிள்ளைகளைக் கொண்ட பாலர் பாடசாலை ஒன்றில் மாணவர்களில் சிலர் தொப்பியையும் சிலர் குடையையும் சிலர் இரண்டையும் வைத்திருப்பவர்களாக காணப்பட்டனர். அவர்களில் 8 பேர் தொப்பியையும் 6 பேர் குடையையும் வைத் திருந்தனர். எனின் எத்தனை பேர் குடையை மட்டும் வைத்திருந்தனர்.?
1) 4 பேர் 2) 14 பேர் 3) 2 பேர்


(32) வடக்குப் பக்கமாக 10 m பயணம் செய்த சமிந்து, தனது வலது கைப்பக்கமாக மீண்டும் மீண்டும் 3 முறை திரும்பி 10 m தூரம் வீதம் பயணம் செய்தான் எனின், சமிந்து பயணம் செய்த பாதையை மிகச் சரியாக குறிப்பது?

1) 


2) 


3) 


(33) ஒரு சங்கத்தில் 10 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் மாதத்திற்கு ஒரு தடவை ஒழுங்குமுறையில் ஒவ்வொரு உறுப்பினர் வீட்டில் கூடுவார். திரு. சோமபால வீட்டில் சென்ற ஏப்ரல் மாதம் கூட்டம் நடைபெற்றது. திரு. சோமபால வீட்டில் அடுத்த கூட்டம் எந்த மாதத்தில் நடைபெறும்?
1. ஜனவரி 2) பெப்ரவரி 3) நவம்பர்


(34) 

கீழே காட்டப்படுவது முக்கோணிகளாகவும், நால்பக்கங்களாகவும் வேறு படுத்தப்பட்ட பெரிய முக்கோணியாகும். இங்கே உள்ளடக்கப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை மற்றும் நாற்பக்கங்களின் எண்ணிக்கை முறையே? 1) 10, 9 2) 10, 11 3) 10, 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **கீழ்வரும் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு விடை தருக.**

கீழே தரப்பட்டுள்ளது விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட மாணவர்கள் தொடர்பான விபரங்களாகும்.




(35) கிரிக்கெட் விளையாட்டில் பங்குகொள்ளும் மாணவர்களை குறிக்கும் சரியான விடை.
1) F, B, H, G, E 2) H, B, G, E, K 3) G, B, F, H, B

(36 ஒரு விளையாட்டில் மட்டும் பங்குகொள்ளும் மாணவர்கள்
1) E, F, K, L, M, I, J 2) E, F, H, K, L, M, B 3) I, J, K, L, M, H, F

(37) இரண்டு விளையாட்டு வீதம் பங்குகொள்ளும் மாணவர்கள்
1) C, D, B, G 2) G, C, H, B 3) H, G, C, D

★ **நகர்சேர் புகையிரதங்கள் இரண்டின் நேர அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**


| புகையிரதம் | பயணம் ஆரம்பமாகும் நேரம் | எடுக்கும் நேரம் | பயணம் முடிவடையும் நேரம் |
|---|---|---|---|
| சமுத்திரதேவி | 6 மணி 45 நிமிடம் | ........................... | 13.45 |
| ரஜரட்ட ரஜின | 7 மணி 50 நிமிடம் | 5 மணி 45 நிமிடம் | ..................... |

(38) சமுத்திரதேவி பிரயாணம் செய்ய எடுக்கும் காலம் எவ்வளவு?
1. 7 மணித்தியாலங்கள் 2. 5 மணித்தியாலம் 45 நிமிடங்கள்
3. 6 மணித்தியாலம் 15 நிமிடங்கள்


(39) ரஜரட்ட ரஜினாவின் பயணம் முடிவடையும் நேரம் சமுத்திரதேவியின் பயணம் முடிவடையும் நேரத்திற்கு எவ்வளவு நேரம் முன்பாகும்.
1) 10 நிமிடங்கள் 2) 30 நிமிடங்கள் 3) 1 மணி 20 நிமிடம்

(40) கீழே உருவில் காட்டப்படுவது நீருள்ள பாத்திரமொன்றில் மெழுகுதிரி ஒன்றை கொளுத்தி வைத்து கண்ணாடிக் குவளை ஒன்றால் மூடும்போது காணப்படும் விளைவாகும். 2ஆவது சந்தர்ப்பத்தில் குவளைக்குள் நீர்மட்டம் மேலே வருவதற்கு காரணமாவது,

**1ஆவது சந்தர்ப்பம்**



**2ஆவது சந்தர்ப்பம்**



1) மெழுகுதிரி அணைதல்.
2) நீர் அதிகமாக காணல்.
3) குவளைக்குள் காற்று முடிவடைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாள் - 2018

## பகுதி - II

தரம் 5

நேரம் - 1 மணி 15 நிமிடங்கள்

**(01)** கீழுள்ள பாடலை வாசிக்க.

உண்ண உணவு தந்திடும்
உழவர் வாழ்க, வாழ்கவே
மண்ணை உழுது பயிர்களை
வளர்க்கும் உழவர் வாழ்கவே

ஒன்றை நூறு நெற்களாய்
உண்டுபண்ணித் தருபவர்;
நன்கு உழுது வியர்வையால்
நனைந்து போக உழைப்பவர்

கண்ணைப்போல பயிர்களை
காத்து உயிர்கள் காப்பவர்
உண்ண உணவு இன்றியே
உடல் வருந்தல் நீதியோ?

பாடு பட்டு உழுபவர்,
பலனும் கண்டு தருபவ,
நாடு வளர வாழ்பவர்,
நன்கு வாழ்க, வாழ்கவே!

★ பாடலை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. நாடு வளர வாழ்பவர் யார் ........................................

2. இப்பாடலை பாடியவர் யார்? ........................................

3. இப்பாடலுக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று எழுதுக. ........................................

4. உயர்திணை பெயர்ச்சொல் ஒன்று தருக? ........................................

5. இப்பாடலில் வரும் உவமானம் ஒன்றை எழுதுக. ........................................

6. ஒத்த பதம் தருக.

   1. ஆகாரம் - ........................................  2. விவசாயி - ........................................

   3. நேத்திரம் - ........................................  4. தேசம் - ........................................

7. இடப்பெயர் ஒன்று தருக. ........................................

8. கடுமையாக உழைப்பவர் என்பதை உணர்த்தும் அடிகளை எழுதுக.

........................................

9. வறுமையால் வாடுதல் என்பதை உணர்த்தும் சொற்றொடர் யாது?

........................................

10. வினையெச்சச்சொல் ஒன்று எழுதுக. ........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(02) அர்த்தமுள்ள வாக்கியமாக சொற்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

i) சாலையில் / தனபாலன் / தொலைபேசியில்/ வந்தார் / கதைத்துக்கொண்டு

........................................................................................................................

ii) வீதியின் / சிறிய / ஓரமாகச் / உயிரினங்கள் / சென்றன / வரிசையாக

........................................................................................................................

**(03) கீழே தரப்பட்டுள்ளவற்றின் பொருளை ஒரு சொல்லில் குறிப்பிடுக.**

i) இரண்டு நாக்கு மனிதன். ..................................................

ii) ஒட்டுக்கேட்டல் ..................................................

**(04)** பின்வரும் தொடர்மொழிக்குரிய தனிச்சொல்லை எழுதுக .

1. குற்றம் புரிந்தவர்களை தங்க வைக்கும் இடம் : ..................................

2. தேர்தலில் போட்டியிடுபவன் : ..................................................

**(05) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்தில் எழுதுக.**

i) சமையலறை : ............................ ii) சதுரம் : ........................

**(06) பொருளைத் தமிழில் எழுதுக.**

i) You have done well : ..................................................

ii) Draw a rectangle : ..................................................

iii) I want to buy firewood : ..................................................

**(07) பின்வரும் தமிழ் வாக்கியங்களின் பொருளை சிங்களத்தில் எழுதுக.**

i) கைகளை மேலே உயர்த்துங்கள்

........................................................................................................................

ii) எனக்கு பால் கொஞ்சம் தாருங்கள்.

........................................................................................................................

**(08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களிலே தடித்த சொற்களால் குறிப்பிடப்படும் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து கோடிடுக.**

i) விமல் **பதினொராவது மணித்தியாலத்தில்** படிக்க ஆரம்பித்ததால் அவனால் பரீட்சையில் சித்தியடைய முடியவில்லை.
(நடு இரவில், பதினொராவது மாதத்தில், கடைசி நேரத்தில்)

ii) தாத்தாவின் நோய்க்காக **முழு கையிருப்புமே** போய்விட்டது என அம்மா மாமியிடம் கூறினாள்.
( முழு சக்தி, கண்ணீர், முழுச் சொத்துகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(09)** பின்வரும் பாடலை இடைவெளியை நிரப்பி பூர்த்தி செய்க .

1. ஈசன் நாமத்தை - .................................... ஏத்திப் புகழவேண்டும்

.................................- பணிந்து தருமம் காக்க வேண்டும்

2. மா அரைத்து ........................................ மனம் நிறைந்த செல்வன்.

மறைந்தும் ஒரு ............................................ மற்றவர்க்குச் செய்யான் .

**(10)** **'நாம் நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்போம்' என்னும் தலைப்பின் கீழ் 3 வாக்கியங்கள் எழுதுக.**


(ஒவ்வொரு வாக்கியங்களிலும் குறைந்தது 5 சொற்கள் இடம்பெறவேண்டும் என்பதோடு, இலக்கண மற்றும் எழுத்துப் பிழைகளின்றி எழுதப்பட வேண்டும்)

i) ..............................................................................................................

ii) ..............................................................................................................

iii) ..............................................................................................................

**(11) தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடை பகருக.**





இவ்வுருவில் அடையாளமிடப்பட்ட இடங்களில் தூண்கள் இடப்பட்டு முழுவதுமே கம்பிவேலி இடப்பட்டுள்ளது. A என்னும் இடத்தில் தனது பயணத்தை ஆரம்பிக்கும் அணில் ஒன்று இந்த இடம் முழுமையையும் வேலி வழியாக சுற்றி வருமாயின், அந்த அணில் பிரயாணம் செய்த தூரம் எவ்வளவு?

......................................................................

(12) 1/8க்கு சம பாதியை எழுதுக. ......................................................................

(13)



இவ்வுருவின் 0.7 பகுதியை நிறந்தீட்டுக.

(14) பப்பாசிப்பழங்கள் இரண்டு வாங்குவதற்கு மின்சதி, 5 ரூபா நாணயங்கள் 4 உம், 2 ரூபா நாணயங்கள் 1உம், ஒரு ரூபா நாணயங்கள் 2உம் வியாபாரியிடம் கொடுத்தாள். அவன் மின்சதியிடம் மேலும் 10 ரூபா கேட்டு வாங்கினான். எனின், பப்பாசிப்பழம் ஒன்றின் விலை யாது?

......................................................................

(15) ஒரு லீற்றர் குளிர்பானத்தில் 50 குவளைகள் நிரப்ப முடியும். ஒரு லீற்றரின் விலை 260 ரூபாவாகும். 200 குவளைகள் நிரப்புவதற்கு செலவாகும் பணம் எவ்வளவு?

......................................................................

(16) காலை 7.30க்கு களுத்துறையிலிருந்து புறப்பட்ட பஸ் அடுத்தநாள் மாலை 3.30க்கு யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. பஸ் யாழ்ப்பாணத்தை வந்தடைந்த நேரத்தை 24 மணிநேரத்தில் எழுதுக


......................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(17) ஒரு வேலையைச் செய்து முடிப்பதற்கு 8 பேருக்கு 24 மணித்தியாலங்கள் எடுத்தன. அவ்வேலையை 12 பேர் செய்து முடிப்பதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு?

.............................................................

(18) 

இவ்வுருவில் உள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?

.............................................................

(19) ஒருநாளில் மணிக்கூடு ஒன்றில் மணி மற்றும் நிமிடக் கம்பிகள் செங்கோணமாக காணப்படும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை யாது?

.............................................................

(20) 12 kg 300 g அளவுள்ள பருப்பில் எத்தனை 150 g அளவுள்ள பைக்கற்றுகள் தயாரிக்க முடியும்?

.............................................................

(21) உரோம இலக்கத்தில் எழுதுக.

i) 29 ..................... ii) 49 .....................

(22) முன்னுள்ள மற்றும் பின்னுள்ள இலக்கங்களை எழுதுக.

.................. 39 999 ..................


(23) அடுத்து வரவேண்டிய எண்ணை எழுதுக.

893, 886, 877, 870, ..................

(24) மோட்டார் கார்கள் மற்றும் ஓட்டோக்களின் சக்கரங்களின் எண்ணிக்கை 133 ஆகும். எனின்,

i) ஓட்டோக்கள் எத்தனை? ......................................

ii) மோட்டார் கார்களின் எண்ணிக்கை எத்தனை? ......................................

(25) 



C சதுரத்தின் ஒரு பக்கத்தின் இரு மடங்கு அளவான நீளமுள்ள B சதுரமும், B சதுரத்தின் ஒரு பக்கத்தின் இரு மடங்கு அளவான நீளமுள்ள A சதுரமும் அமைந்துள்ளன. C இன் பரப்பளவு 9 $cm^2$ எனின் A சதுரத்தின் பரப்பளவு யாது?

.............................................................

★ **விடை தருக. (பிரச்சினைகளை தெளிவுபடுத்துக)**

(26) 22260 m அளவை km மற்றும் m களில் காட்டுக.

.............................................................

(27) 



இந்த எண் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள எண் யாது?

.............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(28) தரப்பட்ட பென்சிலின் நீளம் யாது?




.......................................

★ **வினா இல. 29 முதல் 57 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்க.**

(29) உணவு கிடைக்கும்போது அதனை கடித்து மெல்லாது விழுங்கும் உயிரினம்
i) நாய் ii) மாடு iii) பன்றி iv) மீன்

(30) சல்வீனியா என்பது
i) பசளை ii) நீர்த்தாவரம் iii) மிருகம் iv) வாத்தியம்

(31) 
இங்கு காணப்படுகின்ற குறியீட்டின் மூலம் குறிப்பிடப்படுவது
i) சுடலை அருகில் என
ii) மரணதண்டனை விதிக்கப்படும் என
iii) கொடிய விஷ வகை என
iv) கடற்கொள்ளைக்காரர் என

(32) இவற்றுள் விதைகளை உரலிலிட்டு மாவாக்கி உணவு தயாரிக்கக்கூடியது எது?
i) எள் விதை ii) இலுப்பை விதை iii) மடுப்பனை விதை iv) ஆவாரம்விதை

(33) சுடுநீர் கொட்டி ஏற்படும் காயங்களுக்கு முதலில் செய்யவேண்டியது
i) எண்ணெய் பூசவேண்டும் ii) உப்பு நீர் இடுதல்
iii) குளிர் நீரால் நனைத்தல் iv) துணியால் துடைத்தல்

(34) சுவையான பானம் தயாரிப்பதற்குரிய விதை வகை
i) தூரியன் ii) கொக்கோ iii) கித்துல் iv) சவ்வரிசி

(35) கொழுப்புச்சத்து அதிகம் உள்ள உணவு
i). பலாக்காய் ii). நிலக்கடலை iii). மரக்கறி iv). முட்டை

(36) உள்ளக விளையாட்டு அல்லாதது
i) கிரிக்கெற் ii) கரம்
iii) டாம் iv) செஸ்

(37) 15ஆவது போயா தினத்துக்குப் பின்னர் வரும் போயா தினம்
i) அமாவாசை ii) அபரபக்க அட்டமி
iii) பூர்வபக்க அட்டமி iv) துருது (ஜனவரி) போயா

(38) மலைநாட்டுப் பிரதேசங்களில் மனித நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய இடர்
i) வெள்ளப்பெருக்கு ii) மண்சரிவு
iii) ஆற்றுப்பெருக்கு iv) எரிமலை வெடித்தல்

(39) மண்ணை செழிப்புள்ளதாக்குவதற்கு தேயிலைத் தோட்டங்களில் பயிரும் தாவரம்
i) அறுகம்புல் ii) சணல் iii) பெருந்தகரை iv) தொட்டாற்சுருங்கி

(40) ஒட்டுண்ணித் தாவர வகையைச் சார்ந்தது
i) புலிநகம் ii) குருவிச்சை iii) தொம்ப iv) பாவட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(41) துர் சத்தத்தை எழுப்பும் பட்சி,
i) குயில் ii) கோழி iii) ஆந்தை iv) மைனா

(42) பலகை சீவுளி உபகரணம் பயன்படும் சந்தர்ப்பம்
i) விறகு கொத்த ii) பலகை வெட்ட
iii) பனை மரம் சிலாகை போட iv) பலகை பதமாக்க

(43) வானவில்லில் காணத்தக்க வர்ணங்களின் எண்ணிக்கை
i) 6 ii) 7 iii) 8 iv) 10

(44) காற்றின் வேகத்தை அளப்பதற்கு உபயோகிக்கப்படும் உபகரணம்
i) காற்றுத்திசைகாட்டி ii) காற்றுவேகமானி iii) பாரமானி iv) அமுக்கமானி

(45) கொப்பு நுனியில் பூ பூத்து காய்க்கும் தாவரம்
i) ஈரப்பலா ii) பலா iii) விலிம்பிலி iv) மா

(46) நாருரு வேர்த் தாவரம்
i) பப்பாசி ii) கித்துல் iii) ஈரப்பலா iv) நாகமரம்

(47) வீட்டின் பிரதான மின்னிணைப்பிலிருந்து பூமிக்கு கொண்டுசெல்லும் வயரின் நிறம் என்ன?
i) நீலம் ii) சிவப்பு iii) மண்ணிறம் iv) பச்சை

(48) சூழல்நேயத்தன்மை வாய்ந்த போக்குவரத்துச் சாதனம்
1. ஆகாய விமானம் 2. பேருந்து
3. கப்பல் 4. துவிச்சக்கரவண்டி

(49) காற்றின் பலத்தை உபயோகப்படுத்தி செய்யும் தொழில்
i) மட்பாண்ட தொழில் ii) தேயிலை உற்பத்தி
iii) மாணிக்கக் கைத்தொழில் iv) பித்தளை கைத்தொழில்

(50) நீண்ட செவிகள் மூலம் சிறிய சத்தத்தைக்கேட்டு தப்பியோடும் பிராணி
i) நாய் ii) பூனை iii) முயல் iv) மாடு

(51) சப்ரகமுவ நடனத்தில் பாவிக்கப்படும் பிரதான வாத்தியமானது
i) மிருதங்கம் ii) பறை iii) முரசு iv) தவில்

(52) பரவுகின்ற நோய்களுள் ஒன்று
i) ஏற்புநோய் ii) நீரிழிவு iii) ஆஸ்மா iv) வயிற்றோட்டம்

(53) பனை, தென்னை, கமுகு போன்றன பாம்(palm) மரங்கள் எனப்படும். இக் கூட்டத்தில் சேர்க்கவேண்டிய இன்னொரு தாவரம் எது?
i) பப்பாசி ii) சவுக்கு iii) சைப்பிரஸ் iv) கித்துள்

(54) திசாவாவியை கட்டியவன்
i) சதாதிஸ்ஸ மன்னன் ii) பராக்கிரமபாகு மன்னன்
iii) தேவநம்பியதீச மன்னன் iv) தாதுசேன மன்னன்

(55) நோயாளிக்கு வழங்கப்படத்தக்க சிறந்த உணவு
i) தொதல் ii) கேக் iii) ரொட்டி iv) சூப்

(56) சூரிய ஒளியிலிருந்து கிடைக்கத்தக்க விற்றமின்
i) விற்றமின் A ii) விற்றமின் B iii) விற்றமின் C iv) விற்றமின் D

(57) நீண்டகாலம் வாடாது இருக்கும் மலர்
i) குடுவைத் தாவரம் ii) லில்லி
iii) ஐந்தூரியம் iv) நாலு மணி பூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனைத்து இடங்களிலும் வாழ்ந்து வந்தோம்

அப்போது எனது அம்மா பலகாத தூரம் நடந்து வியாபாரம் செய்து எம்மைப் படிப்பித்தார். தனக்கு சோகம், கவலை வரும்போது பழைய தத்துவப்பாடல்களை பாடுவார், அருகில் இருக்கும் புத்தகங்களை சத்தமாக வாசிப்பார், தான் சாப்பிடாமல் எனக்காக சாப்பாட்டை பாத்திரப்படுத்துவார். மறுநாள் அதிகாலையில் எல்லா வேலையையும் செய்து திமிராக உழைப்பதற்கு நடக்கத் தொடங்குவா அம்மா. நமது வீட்டு ஒழுங்கையில் மறையும் வரை அவரையே விழித்துப் பார்ப்பேன். அப்போது அம்மாவுக்குள் அப்பாவையும் பார்த்தேன். ஒரு முடிசூடா குட்டி இராணியாகவும் எனக்கு தைரியம் தரும் சக்தியாகவும் அம்மாவை நினைப்பேன்.

எனக்கு சிறுவயதில் டியூசன் காசு கட்ட காசு இல்லாத போது அம்மா அயல் வீடுகளில் சென்று கொஞ்சம் கொஞ்சமாக கடன் கேட்கும்போது நானும் பின்னாலே செல்வேன், அப்போது அழுகை அழுகையாய் வரும் அதை நினைத்து டியூசன் முடிந்து வரும்போதும் வீதியில் நடந்து நடந்து புத்தகத்தை வாசித்துக் கொண்டு வருவேன்.

அலுப்பில் படுத்திருக்கும் போது அம்மா நித்திரையிலிருந்து எழுப்பி தேநீரில் பாணைத் தோய்த்து வாய்க்குள் வைப்பா. தூக்கத்தில் அம்மா சாப்பாடு ஊட்டும் அந்தப் பொழுது பிரார்த்தனைக் குரிய பொழுது. அதை நினைத்து அம்மாவைப் பிரிந்து வன்னிக்காடுகளுக்குள் நான் விலங்காக சாப்பாடு இல்லாமல் அலைந்த போது கண்ணீரில் கரையும் எனது கண்கள்.

மேலும் வார்த்தையால் எழுத முடியாத வறுமை வலிகளில் என்னைப் படிப்பித்து பட்டதாரி ஆக்கினார் அம்மா. அந்த நினைவுளின் நன்றியாகவே நான் இன்று பல பிள்ளைகளுக்கு இலவசமாகவும் கற்பித்து வருகிறேன். எந்த நிகழ்விலும் அம்மாவுக்கே முதல் வணக்கம் சொல்வேன், எனது அம்மாவை யாரும் பழித்தால் அதிக கோபம் வரும். ஒரு முறை வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் உள்ள ஒரு பாடசாலையில் என்னைச் சேர்ப்பதற்காக அம்மா செல்கையில் அங்குள்ள அதிபர் (பெயர்குறிப்பிட விரும்பவில்லை) நீங்கள் நிவாரணத்துக்கு அலைய அ வ ங் க ள ட் ட போவீங்க பிறகு இவங்களேதும் குடுக்கிறாங்களெண்டால் இங்க வந்து சேர்ப்பீங்க எனக் கூறி அம்மாவை அவமானப் படுத்தினார். அப்போது எனது நெஞ்சு வெடி குண்டாய் மாறியது. கோபம் வீறிட்டு எழுந்தது ஆனால், அம்மா பயந்த சுபாபம் நானோ சிறியவன் இப்படி சொல்லிக் கொண்டே போகலாம் இன்பமானதை விட துன்பமான பொழுதுகளே அதிகம்.

**அம்மாபோல் யாருமுண்டா யார்க்கும் தெய்வம் யகத்தினில்**

அம்மாவை நினைத்தே இந்தக் கவிதையை எழுதினேன். வெளியாக இருக்கும் எனது கவிதைப் புத்தகத்தின் முதல் கவிதையும் இதுவே,

**எத்தனை இரவினை விழுங்கி இருப்பாள் என் அம்மா.**

**அன்பென்ற கால நதியில் அழகான தன் பிள்ளைக்காக.**

**தினம் ஆராதனைகளைச் சுமந்திடுவாள்.**

**ஏழைத்தாயின் எண்ணம் முழுதும் முழுமதியாய் அழகுதரும்.**

**நாளை அன்பினில் மலரும் பிள்ளை இந்த அகிலத்தை ஆளும் என்ற தவிப்பில்.**

**அவள் அவலத்தை ருசிப்பாள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வி பா. பாலாஜினி, பளை**

அம்மா என்பவர் நாம் கண்களால் காணக்கூடிய ஓர் தெய்வம். நமக்கு மட்டுமல்ல உலகின் அனைத்து உயிர்களுக்கும் அம்மா என்ற ஜீவன் அவசியம் தேவையான ஒன்றுதான். எனக்கும் என் அம்மாவுடனான மறக்க முடியாத சில ஞாபகங்கள் உண்டு.

என் அம்மா வைத்திய தாதியாக பணிபுரிகின்றார். வீட்டில் இருந்து வைத்தியசாலைக்கு செல்வதற்கு இரண்டு பேருந்துகள் ஏற வேண்டும். என் அம்மா அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து சமையல் வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு வேலைக்கு செல்வதற்குள் நேரம் வந்துவிடும். பாவம் அம்மா எங்களுக்கு சமைத்து தந்துவிட்டுத் தான், சாப்பாடு கொண்டு செல்ல மறந்து போய் அவசரத்தில் ஓடுவார். வேலை முடிந்து வர மாலை ஆகிவிடும். அதிக நேரம் நிற்பதனால் இரவு நேரங்களில் கால் வலிக்க தொடங்கிவிடும். தூக்கத்தில் அடிக்கடி எழும்பி வலி பொறுக்க முடியாது கத்துவார். அந்த நேரத்தில் எனக்கு பிடித்தமான விடயம் அவரின் கால்களை வாஞ்சையுடன் உருவி விட்டு அவரை தூங்க வைப்பதுதான்.



என் அம்மாவிற்கு சில வேளைகளில் அதிகமாக கோபம் வரும். வந்தால் எங்கள் எல்லோரையும் ஏசிவிட்டு பின்னர் இருந்து அழுவார். கொஞ்சம் பதற்றமான குணமுடையவர். அதனால் பதறிக்கொண்டு இருப்பார். வேலைச்சுமை கூடினாலும் அழுவது அவர் இயல்பு. ஆனாலும் குழந்தை மனம். நாங்கள் அவருக்கு இரு பெண்கள். எங்களையும் தந்தையையும் ஒருபோதும் கவனிக்காது விட்டதில்லை. தான் எதுவுமே இல்லாதது போல்இருந்து கொண்டு எங்களை உயர்த்தி வைத்திருக்கின்றார். என் ஆசை எல்லாம் ஒன்று தான் நான் படித்து முடித்ததும் என் அம்மாவை பதற்றப்பட்டு வேலைக்கு ஓடவிடாது என் சம்பாத்தியத்தில் நல்லபடியாக ஓர் குழந்தையைப் போல் வைத்து பார்க்க வேண்டும் என்பதுதான்.


**தேவிகா கொழும்பு.**

எனது அம்மா வங்கியில் பணிபுரிகின்றார். அப்பாவும் வேலைக்குச் செல்வதால் நாங்கள் அம்மா அப்பாவுடன் கழித்த நேரங்கள் மிகக்குறைவே. அதிலும் அப்பா எங்களிடம் அன்பு காட்டும் அளவிற்கு அம்மா அன்பு காட்டியதில்லை. எப்போதும் கண்டிப்பாகவே இருப்பார். நாங்கள் மூன்று பிள்ளைகள். நான் ஒரே பெண்பிள்ளை. மூத்த பிள்ளையும் நானே. அம்மா என்னை விடுதியில் விட்டு படிக்கவைக்க நினைத்தார். நான் வேண்டாம் என எவ்வளவோ கெஞ்சினேன். ஆனால் அம்மா அதற்குச் சம்மதிக்கவில்லை. அப்பா சொல்லியும் கேட்காது என்னை விடுதியில் சேர்த்துவிட்டார். நான் எண்ணியது போல விடுதிவாழ்வு கசக்கவில்லை. நண்பிகளுடன் பொழுது இனிமையாகவே கழிந்தது. ஆனால் அப்போதுதான் அம்மாவின் கண்டிப்பை நான் புரிந்துகொண்டேன். அம்மா சொல்லித்தந்ததன்படியே அங்கே இருந்ததனால் மிகுந்த கெட்டிக்காரியாக விளங்கினேன். வாரம் தவறாமல் அம்மா என்னைப் பார்க்க வந்துவிடுவார். அந்த நாட்களில் தான் அம்மாவின் கண்டிப்பின் பின்னால் இருந்த பாசத்தை என்னால் உணரமுடிந்தது. இன்று அமெரிக்காவில் நல்ல பதவியில் எனது கணவரோடு வாழ்கின்றேன். தற்போது விடுமுறைக்காக கொழும்பு வந்துள்ளவேளை இதனை எழுதும் வாய்ப்பு கிடைத்துள்ளது மிக்க மகிழ்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகம் ஓர் அறிவியல் ஆயுதம்



ஓட்டமாவடி எம்.எஸ்.எம்.ஹில்மி (ஸலாமி),
DIP.IN.LIBRARY & INFORMATION SCIENCE–SLLA
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

கல்வி அல்லது அறிவு என்றவுடன் அனைவருக்கும் நினைவில் வருவது புத்தகங்களே. புத்தகங்கள்தான் மனித அறிவை வளப்படுத்தும், பலப்படுத்தும் ஆயுதமாகும். புத்தகங்களை வாசித்ததனால் தான் மனித அறிவு விருத்தியடைந்தது. மனித சிந்தனை ஊற்றெடுக்க ஆம்பித்தது அதன் விளைவாக மனிதன் பல்வேறு கண்டு பிடிப்புக்களை கண்டுபிடித்தான். அறிவு, அறிவியல் என்பவைகளில் பாரிய வளர்ச்சியை அடைந்துள்ளான், அடைந்து கொண்டிருக்கிறான். அவை அனைத்திற்கும் அஸ்திவாரமாய் அமைந்தது புத்தகங்களே. இப்படி மனித அறிவின் , அறிவியலின் அஸ்திவாரமாகிய புத்தகம் பற்றி அறிந்து வைத்திருப்பது அவசியமாகும்.

புத்தகம் உருவாகுவதற்கு பிரதான காரணமாய் அமைந்தது மொழித்திறன்களில் மூன்றாவது திறனான எழுதுதல் திறனாகும். மனிதன் தன்சமூகத்தில் கேட்டு, பேசப்பட்டு வந்த விடயங்களுக்கு குறியீட்டு உருவம் கொடுத்துப் பாதுகாக்கவும் அதன் மூலம் எதிர்கால சந்ததியினர் பயனடையவேண்டும் என்றும் தனித்தனியான குறியீடுகளையும், எழுத்து வடிவங்களையும் தோற்றுவித்தான். இதனை பல்வேறு நாகரீகங்களிலும் நாம் அதானிக்கலாம். அக்குறியீட்டு வடிவங்கள் மூலம் முக்கிய குறிப்புகளையும், நிகழ்வுகளையும் ஆவணப்படுத்தி பாதுகாக்கும் முயற்சியினை மேற்கொண்டான். மண்டை ஓடுகள், களிமண், செப்புத் தகடுகள், இரும்புத்தகடுகள் மரங்கள், பலகைகள், விலங்குகளின் எலும்புகள், தோல்கள் மற்றும் கற்கள், கற்குன்றுகள் போன்றவைகளில் எழுதிவந்தான். அதேபோன்று பழங்கால எகிப்திய மக்கள் நைல் நதிக்கரையில் வளரக்கூடிய பைப்பிரஸ் எனும் மரங்களில் எழுதிவந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். பின்னர் பனையோலைகளில் எழுதி துளையிட்டு (பொத்து) நூற்கயிற்றால்கோர்த்து வைத்திருந்த சுவடிகளை பொத்தகம் என அழைத்தனர். காலப்போக்கில் பொத்தகம் எனும் சொல் மருவி புத்தகம் என அழைக்கப்பட்டது. “Book” எனும் சொல்லானது ஜெர்மனிய மொழிச்சொல்லான “Bok”எனும் சொல்லில் இருந்து தோன்றியதாகும்.

காலப்போக்கில் எழுதப்பட்ட விடயங்கள் தொகுத்துப் பாதுகாக்கப்பட்டன. தொகுப்புக்களின் பிரதிகள் அரிதாகவே காணப்பட்டதுடன் வசதி படைத்தவர்களுக்கும், அதிகாரத்திலுள்ளவர்களுக்கும் மாத்திரமே கிடைத்தது. காலங்கள் பல கடந்து கடதாசி கண்டுபிடிக்கப்பட்டமை , 1436 ஆம் ஆண்டு அச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திரம் ஜோஹனஸ் கூட்டன்பெர்க் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டமை போன்றவைகளால் எழுத்துத்துறை அபாரவளர்ச்சியை நோக்கிய பாதையில் சென்றது. இது அறிவியல் வளர்ச்சிக்கு புரட்சி செய்த கண்டுபிடிப்பு எனவும் வர்ணிக்கப்டுகின்றது. நூல்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன் அனைவரும் பயன்படுத்தும் வகையில் நூல்களின் பயன்பாடு அதிகரிக்கத் தொடங்கியது. ஆரம்பத்தில் புத்தகத்தில் எழுத்து வடிவங்களுடன் படங்களும் சேர்க்கப்பட்டிருந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அச்சகங்களின் அறிமுகமானது நூல்களை பல்வேறு பிரதிகளாக எடுப்பதற்கு காரணமாய் அமைந்தது. மணிக்கு 1100 பிரதிகள் எடுக்கப்பட்டது. 2000 வார்த்தைகளையே தட்டச்சு செய்யமுடிந்தது பின்பு வரி அச்சு இயந்திரங்கள் மூலம் 6000 வார்த்தைகள் தட்டச்சுசெய்ய முடிந்தது. இருபதாம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியில் வருடத்திற்கு 200000 புத்தகங்கள் பல்வேறு துறைகளிலும் வெளிவந்தன. அதேபோன்று தொழில்நுட்ப வளர்ச்சியினால் ஏற்பட்ட இணையப் புரட்சியும் மின்னூல் அறிமுகத்திற்கு வித்திட்டது. P.O.D. முறையே வழக்கத்தில் காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அதாவது கழுனு- "POD- Print On Demand" என்பது புத்தகம் தேவையென வாடிக்கையாளர்களிடம் கேள்வி நிலையுள்ள போது அச்சிடுவதனைக் குறிக்கும். கேள்வி குறைவாக உள்ள நூல்களுக்கு இம்முறை கையாளப்படுகிறது.

15 ஆம் நூற்றாண்டிலேயே புத்தகங்கள் தயாரிக்கும் முறைகள் தோன்றியதாகவும் அம்முறையே தற்போதுவரை பயன்பாட்டில் உள்ளதாகவும் அறிய முடிகின்றது. ஆனபோதிலும் தொழில்நுட்ப வளர்ச்சிகள் காரணமாக இலத்திரனியல் சாதனங்களின் வருகையானது மின்னூல் எனும் ஒரு புதிய அமைப்பொன்றினைத் தோற்றுவித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இதனை கணிப்பொறியிலோ அல்லது ஏனைய வாசிக்கும் இலத்திரனியல் உபகரணங்களிலோ வாசிக்க முடியும். இதனால் மின்னூல்களை வாசிப்பதற்காக தனியான வாசிக்கும் திறன்கொண்ட திரைகளையுடைய கணிப்பொறிகள் வடிவமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். 2012 ஆண்டு காலப்பகுதி முதல் அமெரிக்காவில் தட்டச்சு புத்தகங்களைவிட மின்னூல்களே அதிகம் காணப்படுகின்றதாக அறியமுடிகின்றது. மின்னூல் நவீன புத்தகம் என்றும் அழைக்கப்படுகின்றது.

இவ்வாறு பல்வேறு கட்டங்களைத் தாண்டி புத்தகம் என்பது இன்று ஓர் அழகிய வடிவமாக எமது கரங்களில் தவழ்கிறது. புத்தகம் என்பது பல அங்கங்களின் ஒன்றிணைந்த அமைப்பாகும். மனித உடல் என்பது எப்படி பல அங்கங்களின் ஒன்றிணைந்த வடிவமோ அதேபோன்று புத்தகமும் பல பகுதிகளைக் கொண்டுள்ளது. எத்தனையோ நூல்களை படித்திருப்போம், பயன்படுத்தியிருப்போம் அதிலிருந்து பல்துறை அறிவுகளைப் பெற்றிருப்போம். பன்னூல்களைப் படித்த நாம் நூல்களைப் பற்றி படிப்பதோ அதனை அறிந்து வைத்திருப்பதோ கிடையாது.

புத்தகங்கள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்த உலக புத்தக மற்றும் பதிப்



புரிமை தினமாக ஏப்ரல் 23 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அதாவது வாசித்தல், பதிப்பித்தல் மற்றும் பதிப்புரிமை போன்றவைகளின் ஊடாக அறிவுசார் சொத்துக்களை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாதுகாத்தல் போன்றவற்றை வளர்க்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம் (யுனெஸ்கோ) ஆண்டு தோறும் ஏப்ரல் 23 ஆம் திகதியினை உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினமாக (World Book and Copyright Day) 1995 ஆம் ஆண்டு பிரகடனம் செய்தது. இது ஐக்கிய இராச்சியத்தில் மார்ச் மாதத்தின் முதலாவது வியாழக்கிழமை கொண்டாடப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதாவது யுனெஸ்கோவின் 28 ஆவது மாநாடு பாரிஸ் நகரில் 1995 ஆகஸ்ட் 25 தொடக்கம் நவம்பர் 16 வரை நடைபெற்றது. அங்கு இப்பிரகடனம் நிறைவேற்றப்பட்டது.

அறிவைப் பரப்புவதற்கும், உலகெங்கிலும் உள்ள பல்வேறு கலாசாரங்கள் பற்றிய விழிப்புணர்வினைப் பெறுவதற்கும், புரிதல், சகிப்புத்தன்மை போன்றவற்றின் மூலம் மனிதர்களின் ஒழுக்கத்தினை மேம்படுத்தவும், புத்தகம் ஒரு சிறந்த கருவியாக உள்ளதால் **ஏப்ரல் 23 உலக புத்தக தினமாக கொண்டாடப்படும்''**

நூலகச் சங்கங்கள் மற்றும் நிறுவனங்களின் அனைத்துலகக் கூட்டமைப்பு (IFLA), சர்வதேச பதிப்பாளர் சங்கம் (International Publishers Association), சர்வதேச புத்தக விற்பனையாளர் சங்கம் போன்ற அமைப்புக்கள் யுனெஸ்கோவுடன் இணைந்து இத்தினத்தினை அனுடிப்பதனை அறியமுடிகிறது.

உலக புத்தக மற்றும் பதிப்புரிமை குறித்த தினத்தை பிரகடனம் செய்தமைக்கு பல்வேறு காரணிகளை முன்வைக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக இத் தினத்தில் சிலமுக்கிய இலக்கியவாதிகள் பிறந்துள்ளமையும் மரணித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும் அவர்களை நினைவு கூறும்விதமாகவும் சிறப்பிக்கும் விதமாகவும் இத்தினத்தினை யுனெஸ்கோ தெரிவு செய்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

ஒரு புத்தகம் கடந்தகாலத்திற்கும், எதிர் காலத்திற்குமான இணைப்பு , தலைமுறைகள் மற்றும் கலாசாரங்களுக்கு இடையிலான பாலம் என யுனெஸ்கோ புத்தகத்தின் சிறப்பினைப் பற்றியும் அதன் அவசியத்தினைப் பற்றியும் உலகிற்கு வலியுறுத்துகின்றது.

புத்தகத்தினை கடத்தகாலத்திற்கும் எதிர்காலத்திற்குமிடையிலான பாலமாக யுனெஸ்கோ அடையளப்படுத்துகிறது. கடந்தகாலத்தை எதிர்கால சந்ததியினருக்கு வழங்கும், கடந்தகாலத்தினை படித்து எதிர்காலத்தினை வடிவமைக்க, திட்டமிட நூல்கள் வழி காட்டுகின்றன.

இதுதவிர அறிஞர்களும் புத்தகத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கியுள்ளதனையும் அவதானிக்க முடிகின்றது. ஒரு சில அறிஞர்களது கூற்றுக்களை இங்கு முன்வைப்பது சிறப்பாய் அமையும்.

**ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், அவர்களிடம் மனிதனின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு எது என்று வினவப்பட்டபோது சற்றும் யோசிக்காமல் புத்தகம் எனப் பதிலளித்தார்**

**நெல்சன் மண்டேலா, வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம் சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்கிறார்.**

**லெனின், புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளைவிட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே என்கிறார்.**

உலகில் சிறந்த புத்தகங்களே சிறந்த கண்டுபிடிப்பு, சிறந்த ஆயுதம், சிறந்த வழிகாட்டி, சிறந்த நண்பன் அவ்வாறான புத்தகங்களையும், புத்தகங்களைப் பற்றியும் அறிந்துகொள்வது அறிவை உண்மையாகவே அறிய வேண்டும் என பிரயத்தனப்படும் அனைவரும் நூல்களை வாசிப்பதை மாத்திரம் இலக்காகக் கொள்ளாமல் நூல்களைப் பற்றியும் அறிந்து வைத்திருப்பது அவசியமாகும். குறைந்தபட்சம் அணிந்துரை, ஆசியுரை, முகவுரை, ISBN என்றால் என்ன? உசாத்துணை என்றால் என்ன?, நூல்களின் பகுப்பாக்கம் , நூல்களின் அளவு போன்ற குறைந்தபட்டச அறிவையாவது அறிந்து வைத்திருப்பது அவசியமானது.

**நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு** என்ற ஔவையின் வாக்குண்டாம் வரிகளும் **அறிவை அறிவால் அறியும் அறிவே அறிவு** என்ற பத்திரகிரியாரின் மெய்ஞ்ஞானப் புலம்பலும் அறிவு வளர்ச்சியோடு அறிவை அறிவால் அறிய வேண்டும் என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. ஆக அறிவை அதிகம் சுமந்த அறிவியல் ஆயுதத்தின் மூலம் அறிவை வளர்ப்பதுடன் நூல்கள் பற்றிய அறிவும் அவசியமானதே.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி (14)

# அரசியின் 'உதவும் கரம்'



ஒளிஅரசியின் உதவும் கரங்கள் செயற்பாட்டின் மற்றொரு உதவியானது ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலய மாணவியான சுகுமார் டிலானி என்பவருக்குகாரைநகரைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்ட திரு. தர்மலிங்கம் விக்னேஸ்வரன் என்பவரால் வழங்கப்பட்டது.


புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இம்மாணவியின் கல்விச்செலவிற்காக முதற்தொகையாக **ரூ. 30 000.00** உம் மாதாந்தம் ரூ. 5000.00 உம் வழங்குவதன் மூலம் இம்மாணவியின் கல்விப்பாதைக்கு இவர் பெரும் பங்காற்றுகின்றார். இவ் உதவியானது எமது ஒளிஅரசியின் துணைஆசிரியரும் வட்டுக்கோட்டை(ஒளிஅரசி, புலமைச்சுடர்) இணைப்பாளருமான திருமதி. சூர்யா சிவரூபனின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது. உதவியினை வழங்கிய, ஏற்பாடு செய்த இருவருக்கும் ஒளிஅரசியின் நன்றியையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பிக்கின்றோம். உதவித்தொகையானது 16. 02.2018 அன்று பாடசாலை அதிபரால் மாணவியிடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஒளிஅரசியின் ஆசிரியர் திரு. இ. ஜனதன், துணை ஆசிரியரும் இணைப்பாளருமான திருமதி. சூர்யா சிவரூபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

---



யாழ்/உரும்பிராயைச் சேர்ந்தவரும் தற்போது சுவிற்சர்லாந்தில் வசித்து வருபவருமான திரு.வல்லிபுரம்இராசகுமார் குடும்பத்தினர் தமது மகனான இராசகுமார் சுகிந்தன் அவர்களின் 17 வது அகவை நாளை முன்னிட்டு முல்லைத்தீவில் வசிக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பமான திருமதி பா. ரதிதேவி என்பவரின் மகனும் மு/ சுப்பிரமணிய வித்தியாசாலை மாணவனுமான பார்த்தீபன் அஜிதன் என்பரின் கல்வி ஊக்குவிப்புக்காக ரூ. **36 000.00** நிதியை (மாதாந்தம் ரூ. 3000.00 வீதம் ஆண்டு ஒன்றிற்கு) வங்கியில் வைப்பிலிட்டுள்ளனர். இம்மாணவன் புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மரத்தில் உள்ள
சொற்களை ஒழுங்குபடுத்தி
அதற்குள் ஒளிந்திருக்கும்
தத்துவத்தை தமிழ், ஆங்கிலம்
இரு மொழிகளிலும்
கண்டுபிடிக்கவும்.

## கண்டுபிடியுங்கள்...

விடைகள் கையேட்டில்



இரண்டு படத்திற்கும் இடையே
உள்ள 6 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்...



noolaham.org | aavanaham.org

## அன்பு மகள் அனித்ராவுக்கு! அம்மா எழுதும் அன்பு மடல்.

உன் கடிதம் கண்டேன், மகிழ்ச்சி. ஆனால் நீ எழுதியிருந்த விடயங்கள் கவலையைத்தான் கொடுத்தன. உன் கணவர் உன்னை சந்தேகப்பட்டு திட்டிவிட்டார் என்றும் அதனால் சகல விதத்திலும் அவரை விட்டு விலகி வாழ்வதாகவும் இங்கு இது ஒரு பெரிய விடயம் அல்ல என்றும் எழுதியிருந்தாய், அத்துடன், அன்பை கேட்டோ கெஞ்சியோ பெறுவதில் உடன்பாடில்லை எனவும் எழுதியிருந்தாய். உன் கருத்து உண்மைதான், அன்பை கேட்டு கெஞ்சி பெறுவதில் அர்த்தமில்லை தான், ஆனால் நீ அவசரமாய் அதை செயற்படுத்திய விதம் தான் தவறு.


உங்களுக்குள் இது முதல் பிரச்சினைதானே, உன் கணவர் ஒன்றும் படுமோசமானவர் அல்லவே. அதனைத் திருத்திக்கொள்ள ஒரு சந்தர்ப்பத்தை வழங்கவேண்டியது உன் கடமையல்லவா. தொடர்ந்து தவறு செய்யும் ஒருவர் என்றால் நீ கொடுத்திருக்கும் தண்டனை நியாயமானது தான். ஆனால் மாப்பிள்ளை அப்படிப்பட்டவர் இல்லை என்றே நான் நினைக்கின்றேன். சந்தேகப்படாத ஆண்கள் உலகில் மிகச்சொற்பமானோரே. ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஆண்களுக்கு அந்த எண்ணம் வந்தே விடுகிறது. அதில் உன் அப்பா கூட விதிவிலக்கல்ல.

அடுத்து, ஒரு தவறுக்கு பலதவறு ஒருபோதும் தண்டனை ஆகாது. அவர் செய்தது தவறுதான், ஆனால் திருந்தும் சந்தர்ப்பத்தை கொடாமல் திருத்தும் பணியிலிருந்து நீ பின்வாங்கிவிட்டாய். அது மாபெரும் தவறு. அதனை நீ செய்து பார்த்திருக்கவேண்டும். அதன் பின்னரும் இதே நிலைப்பாடு தொடர்ந்தால் உனது முடிவு சரியானதே. எல்லா மனிதர்களும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தவறுசெய்யவே செய்கின்றனர். எல்லா தவறுகளும் திட்டமிடப்பட்டவை அல்ல. சந்தர்ப்பம், சூழ்நிலை போன்றவையும் காரணமாகிவிடுகின்றது. என் மகளான நீ இதனைப் புரிந்துகொள்வாய் என நினைக்கின்றேன்.

உன் மகளின் எதிர்காலம் என்பதை நீ கேள்விக்குறியாக்கிவிடாதே, உன் அவசரம் அவளது வாழ்வையும் பாதித்துவிடும். உன் அப்பாவின் அவசரக்குணம் உனக்கும் உள்ளதென்பது எனக்குத்தெரியும், நீ எனது மகள் தானே, எனது பொறுமையும் நிதானமும் உனக்கும் இருக்கத்தானே வேண்டும். அப்பாவின் குணம் மட்டும்தான் இருக்கவேண்டுமா? அம்மாவின் குணம் இருக்கக்கூடாதா?

என் அன்பு மகளே! உன் வாதங்கள் சரியானவையே, ஆனால் உன் வாழ்வில் இப்போது அவை சரியல்ல. புரிந்துகொள்வாய் என நினைக்கின்றேன். உன் பதில் மடலை ஆவலுடன் எதிர்பார்த்தபடி.

அன்புடன்
உன் அம்மா.



தமிழரசி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நளபாகம்



### அப்பிள் ஜாம்

அப்பிள் 2, சீனி 1கப், தேசிக்காய் 1/2 பழம், தண்ணீர் 1/2 கப் அப்பிளை நன்றாக கழுவி அதன் தோலை நீக்கி சிறிய துண்டுகளாக நறுக்கிக்கொள்ளவும். அடுப்பில் சட்டியை வைத்து 12 நிமிடங்கள் வரை சூடுபடுத்தவும். நறுக்கிய அப்பிள் துண்டுகளை அதில் சேர்த்து தண்ணீர் சேர்க்கவும் 510 நிமிடங்கள் வரை வேகவைத்து நன்றாக மசித்து விடுங்கள். பிறகு சீனியைச் சேர்த்து நன்றாக கிளறவும். நன்றாக வெந்ததும் கொஞ்சம் ஜாம் எடுத்து ஒரு தட்டில் வைத்து வழுக்கும் தன்மையுடன் இருக்கிறதா என்று பதம் பார்க்கவும். ஜாம் அப்படி இல்லையென்றால் லெமன் ஜூஸ் சேர்த்து நன்றாக கிளறி அடுப்பை அணைத்து விடவும். பின்னர் நன்றாக கிளறி ஆற விடவும். ஒரு டப்பாவில் அடைத்து தேவைப்படும் போது எடுத்து உபயோகித்து கொள்ளலாம்.

### மாங்காய் சாதம்

சோறு 1 கப், துருவிய தேங்காய் 3/4 கப், எண்ணெய் தாளிப்பதற்கு, கொத்தமல்லி இலை 1/2 கப், கச்சான் 1/2 கப் பச்சை மிளகாய் 810, மாங்காய் 1, கறிவேப்பிலை சில கொத்து, பெருங்காயம் கொஞ்சம், கடுகு 1/2 டேபிள் ஸ்பூன், கடலைப்பருப்பு 1/2 டேபிள் ஸ்பூன், உளுந்தம் பருப்பு 1/2 டேபிள் ஸ்பூன், வெந்தயம் 1/2 டேபிள் ஸ்பூன், மஞ்சள் 1/2 டேபிள் ஸ்பூன், உப்பு 12 டேபிள் ஸ்பூன் (சுவைக்கேற்ப) ஒரு பாத்திரத்தை எடுத்து கொள்ளுங்கள். அதில் அரிசியை அளந்து எடுத்துக் கொண்டு நன்றாகக் கழுவுங்கள். கழுவிய அரிசியை சேர்த்து 1 கப் அரிசிக்கு 2 கப் தண்ணீர் என்னும் அளவில் ஊற்றி, மூன்று விசில் வரும்வரை வேகவிடுங்கள். பிறகு மூடியை திறந்து 1015 நிமிடங்கள் வரை ஆற விடவும். சாதம் ஒன்றுடன் ஒன்று ஒட்டாமல் வர வேண்டுமென்றால் அரிசி வேகவைக்கும்போது ஒரு ஸ்பூன் எண்ணெய் விட்டுக்கொள்ளலாம்.

ஒரு மாங்காயை எடுத்து நன்றாக துருவிக் கொள்ளுங்கள் வெந்தயத்தை வறுத்து கரகரப்பாக நுணுக்கி வைத்துக் கொள்ளுங்கள் ஒரு சட்டியை அடுப்பில் வைத்து அதில் 2 டேபிள் ஸ்பூன் எண்ணெய் ஊற்றி சூடுபடுத்த வேண்டும். எண்ணெய் சூடானதும் அதில் கடுகு, கடலைப்பருப்பு, உளுந்தம் பருப்பு, பெருங்காயம், கறிவேப்பிலை போன்றவற்றை சேர்த்து வதக்கவும். இப்பொழுது வேர்க்கடலையை சேர்த்து லேசாகப் பொன்னிறமாக வறுக்கவும். அதில் பச்சை மிளகாய், மஞ்சள் மற்றும் துருவிய தேங்காய் இவைகளை சேர்த்து 12 நிமிடங்கள் வரை நன்றாக வதக்கவும். வேகவைத்த அரிசியைச் சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலக்கவும். துருவிய தேங்காய், கொத்தமல்லி இலைகள் மற்றும் உப்பு இவற்றை மேலே தூவி நன்றாக கலக்கவும். கடைசியாக வெந்தயப் பொடி சேர்த்து நன்றாக கிளறவும். இதை சூடாக ஒரு பாத்திரத்திற்கு மாற்றி தேங்காய் அல்லது கொத்தமல்லி சட்னியுடன் பரிமாறவும். நாவிற்கு விருந்தளிக்கும் சுவையான மாங்காய் சாதம் ரெடி.




**குறிப்பு:**

கொஞ்சம் நேரம் முன்னதாக சமைத்து சாதத்தை பயன்படுத்தினால் கட்டிகள் இல்லாமல் உதிரியாக இருக்கும். வெந்தயம் மற்றும் கடுகின் சுவை மாங்காயின் புளிப்பு சுவையை நல்ல தூக்கலாக காட்டும். உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப நீங்கள் பயன்படுத்தி கொள்ளலாம். கறிவேப்பிலை சேர்ப்பது நமக்கு நிறைய ஆரோக்கிய நன்மைகளை அளிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரோசி கஜன்

# மெல்லிசையாய் வசமானாய்

முன்கதைச்சுருக்கம்: சில வருடங்களாக லண்டனில் வசித்துவரும் துர்கா, திருமண வரவேற்பொன்றில் சயந்தன் என்பவனைச் சந்திக்கிறாள். அவனிடமிருந்து தன்னை மறைத்துக்கொள்ளவும் நினைக்கிறாள். அவனோ, அவளின் அன்னை அம்மம்மாவோடு கதைத்துவிட்டு, அவளை எதிர்கொள்கிறான், என்னைத்தெரியுமா? என்ற கேள்வியோடு!

நேரம் இரவு பதினொன்றை நெருங்கிக் கொண்டிருந்தது. கவிந்துவிட்ட இருளைப் போக்கிட முனைந்த வீதியோர மின்விளக்குகள் தம் முயற்சியில் ஓரளவேனும் வெற்றிபெற்றிருந்த களிப்பில் நின்றன. வெகு தூரத்துக்கு நீண்டு வளைந்து நெளிந்து சென்ற அப்பாதையில், எதிர்ப்புறமிருந்து வரும் வாகனங்களின் வெள்ளொளியும் இப்புறமிருந்து செல்லும் வாகனங்களின் சிவப்பொளியும் சேர்ந்து அழகிய ஆரத்தை நினைவுபடுத்தி நின்றன. அவ் ஆரத்தில், தன் பங்கிற்கு இரு சிவப்புக்கற்களை பதித்துவிட்ட பெருமையோடு விரைந்து கொண்டிருந்தது துர்காவின் கார். அவளருகில் அமர்ந்திருந்த தந்தையும் பின்புறத்திலமர்ந்திருந்த தாய், அம்மம்மாவும் அளவளாவிக் கொண்டிருந்தவை எதுவுமே அவள் கருத்தில் பதியவில்லை. அவள் முகமோ, வழமையை விட வெகு அமைதியாக இருந்தது. விழிகளோ, கரங்களோடு இணைந்து காரைச்செலுத்துவதில் முனைந்திருந்தாலும், மனம் மட்டும் தன்னிஸ்டத்துக்கு தறிகெட்டு ஓடிக்கொண்டிருந்தது. அங்கே இங்கே என்று இல்லை, கண்டம்விட்டுக் கண்டம் பாய்ந்து, சொந்தமண்ணைத் தொட்டிருந்தது!

பள்ளிக் காலத்தின் நினைவுகள்... பெரும்பாலோனோர் வாழ்வில் அழகிய வர்ணங்கள் சேர்ப்பதாகவே அமைந்து விடுமல்லவா? இவள் வாழ்விலும் அது அத்தனை வஞ்சம் செய்யவில்லை. பள்ளிக்கூடம் என்ற எண்ணமே அவளுள் மலர்வைக் கொண்டு வந்துவிடும். படிப்பில் வெகுசுட்டி வேறு! எந்நேரமும் தோழிகள் சூழ படபடத்து, கலகலத்துத் திரிந்த பட்டாம்பூச்சியிவள்! உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவைத் தேர்ந்தெடுத்திருந்தவளுக்கும், அஞ்சனாவுக்குமான அறிமுகமும் நட்பும் அங்கிருந்துதான் ஆரம்பித்தது. முதல் வகுப்பிலிருந்து ஒரே பள்ளியில் படித்திருந்தாலும் அவ்வளவாக நெருங்கிப் பழகாதவர்கள், உயர்தர வகுப்பில் காலடி எடுத்துவைத்த குறுகியகாலத்தில் நெருங்கிய நண்பிகளாகியிருந்தனர்.

அடடா... இத்தனை நாட்களும் பழகாது விட்டுவிட்டோமே! இருவருமே அடிக்கடி ஆதங்கப்பட்டுக் கொண்டார்கள். ஒருநாள்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவர்கள் இந்த ரீதியில் கதைத்துக்கொண்டிருக்கையில், அவசரமாக இடையிட்டாள், அஞ்சனாவின் நெருங்கிய தோழிகளில் ஒருத்தியான துஷி.

ஹப்பா! நல்ல காலம்டி துர்கா, நீ மட்டும் முதலே ஃப்ரெண்டாகி இருந்தால் என்பாடு அதோ கதிதான்! இவள்களோடு சேர்ந்துகொண்டு நீயும் எல்லோ போட்டிக்கு வந்திருப்பாய்! அருகில் நின்ற மற்ற இரு தோழிகளையும் சுட்டிக்காட்டி, ஹப்பாடா தப்பித்தேன்! என்ற பாவனையில் ஆசுவாச மூச்சு விட்டாள் அவள். திடீரென்று அவள் இப்படிச் சொன்னதும் என்னவிஷயம் என்று விளங்கவில்லை என்றாலும், பார்ரா! இந்த துர்காவின் மீதுள்ள பயத்தை! என்றவாறே, பக்கென்று சிரித்து விட்டாள் துர்கா.

ஆனாலும், ஒன்றுமட்டும் விளங்க இல்லை துஷி. நாங்க இரண்டு பேரும் முதலே ஃப்ரெண்ட்ஸ் ஆகியிருந்தால் உமக்கு என்ன கஷ்டம்வந்திருக்கும்? அப்படி என்ன விஷயத்தில போட்டிக்கு வந்திருப்பேன் என்கிறீர்? முறுவலோடு கேட்கவும் செய்தாள்.

அவளுக்கு லூசுடி அலட்டுறாள், அஞ்சனா சொல்ல, அப்போ உன் அண்ணியையே ஒரு லூசு என்கிறாய்! துஷியின் பொய்க்கோபம் அஞ்சனா பக்கம்.

ஹே..ஹே..அப்போ அந்த அண்ணி பிளேஸ்வேகன்ட் ஆகுது என்று சொல்லுடி அஞ்சனா. ஆரவாரித்த இன்னொரு தோழி, துர்கா நீயும் வா. ஒரு ட்ரைபோட்டுப் பார்ப்போம்! இடைபுகுந்து ஆரவாரித்தவள், அஞ்சனாவிடம் ஒரு தொம் வாங்கி, எரும ஏன்டி இப்படிக்குத்துறாய்? தோள்புறமாகத் தேய்த்துக்கொண்டே சீறினாள்.

பச்! கொஞ்ச நேரத்துக்குச் சும்மா இருங்கப்பா! அரையும் குறையுமா சொல்லீட்டு உங்களுக்குள்ள கதைத்தால் எப்படி? இடையிட்ட துர்கா, துஷியிடம் திரும்பினாள். ஹ்ம்... இப்போசொல்லும். எதுக்குப் போட்டியாக வந்திருப்பேன்? நீர் சொல்வதைப் பார்த்தால் என்னவோ குடிமுழுகிப் போயிடும் என்ற லெவலில் இருக்கே!? ஆவலோடு தொடர, சுற்றிநின்ற தோழிகள் வாய்விட்டே நகைத்தார்கள்.

ஹையோ துர்கா! உமக்கு ஒன்றும் தெரியாதா? ஹா...ஹா...சொல்லமுடியாதுப்பா, சிலவேளை இவளின் குடிதான் முழுகிப்போயிருக்கும். ஹீரோ சேர் உன்னைப் பார்த்து விழுந்திருப்பார்! ஒருத்தி சொல்ல, எடியேய், சும்மா இருங்க பார்ப்போம். மீண்டும் கடிந்துகொண்டாள் அஞ்சனா.

அதெப்படி சும்மா இருப்பது? ஹ்ம்...நீ சும்மாயிரு சும்மாயிரு என்று சொல்வதைக் கேட்டுச்சும்மா இருந்திருந்தால் இன்றைக்கு நம்ம துஷி உன் மச்சாளாகி இருக்கமுடியுமா சொல்லு பார்ப்போம்? அதுக்காக அவள் என்னென்ன பாடுகள் பட்டாள் என்று எங்களுக்கல்லவா தெரியும்? இல்லையா துஷிக்குட்டி? கலாட்டாக்காரத் தோழியின் விஷமச் சீண்டலுக்குத் தன்னையும் மீறி வெட்கப்பட்டாள் துஷி.

அதைப் பார்த்துத் தலையில் அடித்துக்கொண்ட அஞ்சனா. லூசுகளாடி நீங்க? சைக்கிள் செயின் கழன்று நடுரோட்டில நின்றவளுக்கு என் ஃப்ரெண்ட் என்ற ஒன்றுக்காக உதவிசெய்தார் அண்ணா. அதைப்போய்ப் பெரிது பண்ணிக்கொண்டு... அவளும் தீவிரமாகச்சொல்ல, பகிடிபகிடியாகக் கதைத்த தோழிகளுக்கோ, இன்னுமின்னும் கலாட்டா செய்யும் எண்ணமே வந்தது.

அதெப்படி நீ இப்படிச்சொல்லலாம் அஞ்சனா, பெண்பாவம் பொல்லாததுடி. உன் அண்ணாவுக்கு தனக்கு ஒரு தங்கச்சி இருக்கிறாள் என்ற நினைப்பு வேணும் என்று சொல்லிவை! இப்படித் தொடர்ந்த இவர்களின் கலாட்டாவுக்குள், அஞ்சனாவின் அண்ணா பற்றி அத்தனையும் கேட்டறிந்து கொண்டாள் துர்கா.

ஓ! மாவட்டதில முதலிடம். ஹ்ம்...பிளஸ் ஹான்ட்ஸம். நம்ம அஞ்சனாவே தேவதை போல இருக்கிறாள் என்றால், அவள் அண்ணா தேவன் போல இருப்பதில் ஆச்சரியம் என்ன? கேலியோடு கண்ணடித்துத் தோழியை வம்பிழுத்தாள்.

நீயுமாடி? இவளவைகளுக்குத்தான் பைத்தியம் என்றால் உனக்குமா? அஞ்சனாவின் கெஞ்சல் குரல்! ம்ம்...நானும் பைத்தியகாரக் ரூப்பில ஐக்கியமாகிட்டேன். அதுவும், துஷியின் நிலை அப்படியும் இப்படியும் என்று தெரிந்தபிறகும் நாங்க சும்மா இருப்போமா? கலகலத்த துர்கா, இப்படி ஒரு துரோகியாகிப் போனாயே துர்கா! என்று, வராத கண்ணீரை வழித்தெறிந்த துஷியை கட்டிக்கொண்டே, எது எப்படியோ அஞ்சனா, உன் அண்ணி ஒரு பைத்தியமாக இருக்கப்போறா! ஹா..ஹா..

அஞ்சனாவின் கன்னத்தைக் கிள்ளியபடி சொல்லி, அவள் முறைப்பையும் சலிப்பையும் கணக்கில் எடுக்காது மற்றைய தோழிகளோடு சேர்ந்து இவள் அண்ணா பற்றியே கதைத்துக் கொண்டிருந்தாள்.

ஓ.கே செல்லங்களா... இப்போ நம்ம ஆள் மொறட்டுவவில்... ஹ்ம்ம்... என்ற வேகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரங்களைத் தலைமேல் குவித்தவள், தெய்வங்களே! இங்க இந்த துர்காவைப் பாருங்கோ. ப்ளீஸ் ப்ளீஸ்...அங்க எவளாவது எங்களுக்கு... என்று விட்டு தோழிகளைப் பார்த்துக் கண்சிமிட்டி விட்டு, எங்களுக்கு இல்லை எனக்குவில்லியாக வந்திரக்கூடாது. அதுமட்டும் உங்கபொறுப்பு! மிச்சம் நான் பார்த்துக்கொள்கிறேன்! மனமார வேண்டுவது போல பாவனை செய்தாள்.

எல்லாரும் ஒரு நாளைக்கு அண்ணாவிடம் வாங்கிக்கட்டிக் கொண்டால் என்னிடம் வரவேண்டாம். சொல்லிப் போட்டன்! கறாராகச் சொல்வது போல சொன்னாலும் துர்காவின் செய்கைகளில் சிரிப்பெழுந்தது அஞ்சனாவுக்கு!

அதெல்லாம் வரமாட்டோம், நீ கவலைப்படாதே! என்றாள் துஷி. நீ ஒன்று மட்டும் செய்டி அஞ்சனா. உன் அண்ணா இங்க வந்ததும் தகவல் சொல்லு, மிச்சம் நாங்க பார்த்துக் கொள்கிறோம். என்று தொடர்ந்து அவர்கள் அடித்த லூட்டிகள்தான் எத்தனை எத்தனை! அதுவும், முகம்தெரியாத அஞ்சனாவின் அண்ணா துர்காவின் வாயில் அகப்பட்டு, பட்டபாடுகள்!

நேரில் சந்திக்க முதலே இப்படியென்றால், என்றாவது சந்தித்தால். என்று எண்ணிய அஞ்சனாவுக்கு சிரிப்பே வந்தது. காரணம், தமையனின் ஒத்த முறைப்புப் பார்வையில் விலகிச் செல்பவர்கள்தானே எல்லோரும். அப்படித்தான், துர்காவும் செல்லப்போகிறாள் என்று தப்பாக மதிப்பிட்டுவிட்டாள்.

அன்றொரு நாள் கொழும்பிலிருது வந்து நின்ற சயந்தன், அஞ்சனாவை பள்ளியில் கொண்டுவந்துவிடும்படியாக இருந்தது. ஸ்கூல்விட்டதும் கேற்றடியில் வந்துநில்லு. நான் வருவேன், என்றுவிட்டு சென்றவனை, அப்போதுதான் வந்த துஷி கண்டுவிட்டாள்.

உன் அண்ணா வந்து நிக்கிறாரா அஞ்சு? சொல்லவே இல்லையே! கள்ளி! என்றவள், சென்றவேகத்தில், துர்கா! உனக்கு விஷயம் தெரியுமா? நம்ம ஆள் வந்து நிக்கிறார். என்றதும்தான் தாமதம் பதற்றமடைந்துவிட்டாள் அஞ்சனா. மற்றத் தோழிகள் என்றால்கூட அந்தளவு யோசிக்கமாட்டாள். இவளிடம் கேலி பேசுவதோடு விட்டு விடுவார்கள் ஆனால், துர்காவின் சேட்டைகள் அதோடு நின்றுவிடும் என்று அவளால் உறுதியாக எண்ண முடியவில்லை. வீட்டுக்கே வந்து அத்தை அத்தை என்று தாயைச் சுற்றிவருகிறாளே! தாய் என்ன என்று காரணம் கேட்கமுதலே, என் அத்தை லண்டனில் இருக்கிறார். அப்படியே உங்களைப்போலவே இருப்பார். அந்த நினைவில்...அத்தை என்று கூப்பிடலாம் தானே? என்று அவள் கேட்டவிதத்தில் அவள் வலையில் சிக்கியிருந்தாரே இவள் அன்னை.

முக்கிய விக்கெட் அவுட் செல்லக்குட்டி! சந்துதான் அடுத்த டார்கெட்! என்றும் சொல்லிக் கொண்டிருந்தவளாச்சே!

இங்க பார் துர்கா...இந்தசேட்டை பகிடிகள் வேண்டாம்டி. அண்ணாவுக்குப் பிடிக்காது.

ஹலோ! நான் ஒன்றும் சேட்டை விடவில்லையே! பார்பார்... ஃப்ரெண்டென்று சொல்லுற நீயே வில்லியாக நிற்பாய் போலுள்ளதே! அழகாகச் சிரித்தபடி, தோழியின் முகத்தின் முன்னே நான்காக மடித்த ஒரு வெள்ளைத் தாளை அப்படியும் இப்படியும் ஆட்டினாள் துர்கா.

என்னடி இது? விழிகளை விரித்தாள் அஞ்சனா.

உண்மையாகவே தெரியவில்லையா? வியப்போடு கேட்டவள், சயந்து டியருக்கு கடிதம் என்றதும், அஞ்சனாவின் முகத்தில் இலேசான பதற்றம் தொற்றிக்கொண்டது. அதைக்கண்ட தோழிகளுக்குச் சந்தோசத்தைக் கேட்கவா வேண்டும்?

இன்றைக்கு இவளை கூட்டிக்கொண்டு போக வரும்பொழுதே குடுக்கலாம் துர்கா! என்றவர்கள், அன்று முழுதும் பள்ளியில் ரகசியம் ரகசியமாகக் கலகலத்தபடி திரிந்தார்கள்.

வருடங்கள் கடந்து விட்டபோதும் அன்றைய நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் கண் முன்னே நடப்பது போலவே உணர்ந்த துர்காவின் அழகிய இதழ்களில் முறுவல் ந்து ஒட்டிக்கொண்டது. அதே சிந்தனையோடு, வலது புறமாகக் காரைத் திருப்ப, துர்காம்மா! இதேன் இங்க திருப்புகிறாய். நாம அடுத்த எக்ஸ்சிட் அல்லவா எடுக்கவேணும்? அவசரமாகக் குறுக்கிட்டார் அவள்தந்தை.

ஹையோ! பச்! ஏதோ ஒரு யோசனையில் திருப்பிட்டேன்பா! பரவாயில்லை. இந்த வழியாலும் போகலாம். அழகாகச் சமாளித்துவிட்டாள்.

குழந்தையோடு இருந்தவன் பற்றி நினைப்பு எதுக்காம்? கண்டித்தது அவள் மனம். அந்தப்பிள்ளை அவருடையதா? என்ற சந்தேகம் வந்தாலும், அதை யாரிடம் கேட்பது? பாட்டிதான் நிறையக் கதைத்தார் போல கிடக்கு. அவருக்குத் தெரிந்திருக்கும். ஆனால், எப்படி கேட்பது? தவித்தும் போனது, அவளுள்ளம்!

**(தொடரும்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி (14)

## அரசியின் 'உதவும் கரம்'

புலம்பெயர்ந்து சுவிஸ் செங்காளன் மாநிலத்தில் வசிக்கும் செல்வன் நீதன்- ரத்தீஸ் அவர்கள் தனது பிறந்த நாளினை முன்னிட்டு தாயக உறவுகளுக்கு உதவும் நோக்கில் நெல்லியடி மத்திய கல்லூரி மாணவியான பா. பண்ணிலா என்பவருக்கு கல்வி உபகரண கொள்வனவிற்காக ரூபா. 7500.00 இனை வழங்கியுள்ளார். தாயக உறவுகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள நீதன் - ரத்தீஸிற்கு ஒளிஅரசியின் வாழ்த்துக்களும் நன்றியும் உரித்தாகட்டும்.

# கதை மூலம் ஆங்கிலம் கற்போம்

# SHEBA AND THE MONKEY



Sheba the queen of jungle was very fond of babies. Ones she announced " I order all animal who has the most beautiful baby will be awarded a prize.

All animals came to sheba's palace with there babies. Sheba was inspecting . she came to a monkey and said "what an ugly baby! You will not get the prize.

The baby monkey started to cry. The monkey said "what a foolish queen she is! Who wants her prize! You are my jewel my dear child. You are more precious than anything under the sky".

**MOTHER'S LOVE HAS NO EQUALS.**

மொழிபெயர்ப்பு மறு இதழில்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவம்

உலகில் அனைவர் மத்தியிலும் அனைத்து நேரங்களிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு போட்டியென்றால் அது தலைமைத்துவத்திற்கான போட்டி என்றே கூறவேண்டும். மற்றொரு விதமாக கூறுவதென்றால் உலகம் தலைமைத்துவத்தை மையமாக கொண்டே சுழன்று கொண்டிருக்கின்றது. வளரும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும் என்று கூறுவர். அது ஒரு பிள்ளை தன்னை ஒத்த சிறுவர்களுடன் விளையாடும் போது வெளிப்படுத்தும் தலைமைத்துவ பண்பை அடிப்படையாக கொண்டே தீர்மானிக்கப்படுவதாகும். மிருகங்கள் மத்தியில் கூட தலைமைத்துவ பண்புகள் விருத்தி பெற்றுள்ளன. தாவர பட்சணிகள் அனைத்துமே தத்தமக்குள் ஒரு தலைமைத்துவத்தை ஏற்று கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன. அனிமல் பிளனெட் (Animal Planet) தொலைக்காட்சி சேவையை பார்ப்பவர்கள் அம் மிருகங்களின் வழிநடாத்தல் திறனை பார்த்து வியந்திருப்பார்கள். இரையை வேட்டையாடி சீவிக்கும் மிருகங்களிடம் குடும்பங்களாக வாழும் தலைமைத்துவ பண்பு அதிகம் காணப்படுகின்றது.

அதே நேரத்தில் திட்டமிட்டு ஒன்று சேர்ந்து. வேட்டையாடுதலில் கடைப்பிடிக் கப்படும் தந்திரம் (Strategy) வியக்கவைப் பதாகும். சிங்கம் காட்டு மிருகம் அனைத்திற்குமே ராஜா என்று கூறப்படுவதன் காரணம் அதன் தலைமைத்துவ பண்புகள் தான்!






திருமலை. வீ.என்.சந்திரகாந்தி

இனி அடுத்தகட்டமாக தலைமைத்துவ பண்புகள் என்றால் அவை யாவை என்று பார்ப்போம். பிரதானமாக சிறந்த தலைவன் ஒருவனுக்கு ஐந்து அடிப்படை தகைமைகள் அத்தியாவசியமாகின்றன. அவையாவன, திட்டமிடல், செயற்படுத்தல், ஒன்றிணைத்தல், கட்டளையிடல், கட்டுப்படுத்தல் என்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடல் என்பது எதிர்காலத்தில்
சம்பவிக்ககூடிய அரசியல் சமூக பொருளா
தார மாற்றங்களை முற்கூட்டியே கணித்து
எய்தப்படக்கூடிய இலக்கை எப்படி வெற்றி
கொள்ளலாம் என தீர்மானித்தலும் அதன்
பிரகாரம் வழிமுறைகளை தெரிவுசெய்தலு
மாகும். முகாமைத்துவத்தில் தந்திரம் உபா
யம் என்ற சொற்கள் இப்போ அதிகம் பேசு
பொருளாக உள்ளன. ஒரு இலக்கை அடை
வதற்கான உபாயத்தை முற்கூட்டியே ஊகிக்க
கூடிய ஒருவனே சிறந்த தலைவன் ஆகின்
றான். திருவள்ளுவர் ஒரு தலைவன் கடைப்
பிடிக்கவேண்டிய உபாயங்களை தெரிந்து
செயல்வகை, வலியறிதல், காலமறிதல், இட
னறிதல், தெரிந்து தெளிதல், தெரிந்து வினை
யாடல் ஆகிய ஆறு அதிகாரங்கள் மூலம்
எடுத்துரைக்கின்றார்.

ஒரு இலக்கை எய்த முடிவெடுக்க முன்
னர் அது பற்றி எண்ணித்தீர்மானிக்க வேண்
டும். தீர்மானித்து விட்டு பிறகு யோசிப்
போம் என்பது தவறான வழிமுறையாகும்.
ஒரு செயலின் வலிமை தனது வலிமை,
எதிரியின் வலிமை, இரு சாராருக்குமான
துணையின் வலிமை , ஆகிய நான்கினையும்
அளந்தறிந்த பின்பே செயலில் இறங்க
வேண்டும். இந்த உலகை ஆள்வதை இலக்
காக கொண்டாலும் அது கைகூடும் சரியான
காலம் மற்றும் இடமறிந்து முயற்சித்தால்
அதே சமயம் துணை என ஒருவனை ஆராய
மால் தெரிவதும் தெரிவு செய்த பின் ஐயுறு
வதும் தவறு. அதே போன்று இவ்வினையை
இக் கருவியால் இவன் முடிக்க வல்லான் என்
பதை தீர்மானிக்க வல்லவனே சிறந்த தலை
வன் ஆவான். செயற்படுத்தல் எனப்படுவது
வகுக்கப்பட்ட இலக்கை நோக்கி எடுக்கப்
படும் நடவடிக்கைகளாகும். இந்நாட்களில்
இதற்கு உறுதுணையாக கணிக்கப்படக்கூ
டியவை மனித வலுவும் இயந்திரவலுவும்
ஆகும். தொண்டர்களாக தெரிவு செய்யப்
படக்கூடியவர்கள் தலைவன் மேல் அன்பு
டையவனாக தலைவனுக்கு வேண்டியதை
அறியும் அறிவும் கருமத்தை செய்கையில்
கலங்காமையும் பேரவா இன்மையும் உடை
யவனாகவும் இருத்தல் அவசியம். அதே
போன்று பயன்படுத்தப்படும் இயந்திரங்கள்
குறைந்த நேரத்தில் அதிக பயனை விளைவிப்
பனவாக இருத்தல் வேண்டும். ஒன்றிணைத்
தல் என்பது தாபனத்தின் இலக்கை அடை
யக்கூடிய வகையில் மனித,
இயந்திர வலுக்களை சரியான
முறையில் நிர்வகித்தல் ஆகும்.
கட்டளையை மேற்கொள்ளல்
என்பது. பொதுவாகவே தொண்டர்கள் சரி
யான முறையில் தாபனத்தின் இலக்கை
தெரிந்து கொண்டோ புரிந்துகொண்டோ
இருக்க மாட்டார்கள். ஒவ்வொரு சமயமும்
அவர்கள் ஆற்ற வேண்டிய கருமங்கள் பற்றி
நியாயப்படுத்தவும் இயலாது. அச்சமயங்க
ளில் அவர்கள் ஆற்ற வேண்டிய செயற்பாடு
களை கட்டளை வடிவத்தில் வழங்க வேண்
டும்.

கட்டுப்படுத்தல் என்பது ஒரு தாபனத்தின்
இலக்கை நோக்கிய செயற்பாடுகள் சரியான
திசையில் செல்கின்றனவா என்பதை அவதா
னித்தலும் தவறும் சந்தர்ப்பங்களில் நெறிப்ப
டுத்தலுமாகும்.

மேற்கூறிய ஐந்து தகைமைகளும் தலை
மைத்துவத்திற்கான அடிப்படை தகைமை
களாகும். அதே சமயம் ஒரு தலைவனுக்கு
தனிநபர் தகைமைகளும் அதிகம் வேண்டப்
படுகின்றன. துணிச்சல் ஒரு பிரதானமான
அம்சமாகும். எதற்கும் கலங்காத அஞ்சாத
தலைவனுக்கு கீழ் தொண்டர்கள் பணி
வுடன் பணியாற்றுவர். நல்லொழுக்கம்
உடைமை, அறத்தின் மேல் பற்று, பணிவு
ஆகியவை மற்றவர்களை நன்கு கவரும்.
நீதி நியாயம், ஆகியவற்றின் வழி நடத்
தல் வேண்டும். தாபனத்தின் இலக்கு பற்றி
நல்ல தெளிவு இருத்தல் வேண்டும். உறு
தியான திட்டத்துடன் துணிவுடன் மற்ற
வர்களை வழிநடத்தினால் தான் தாபனம்
முன்னேற்றப் பாதையில் நகர்ந்துகொண்
டிருக்கும். தொண்டர்கள் தான் வேலை
செய்ய அமர்த்தப்பட்டுள்ளார்களே நான்
சுழல் நாற்காலியில் சுற்றிக்கொண்டிருந்தால்
எல்லாமே நல்ல முறையில் நடைபெறும்
என்று எதிர்பார்க்க கூடாது. தொண்டர்கள்
வேலைசெய்யும் நேரத்தை காட்டிலும் அதிக
நேரம் வேலைசெய்தால் தான் சரியான கண்
காணிப்பை ஏற்படுத்த முடியும்.

ஒவ்வொரு விடயத்தையும் அக்கறை
யுடன் நோக்க வேண்டும். மற்றவர்களை
அன்புடன் அரவணைத்து வேலைவாங்க
தெரிந்திருக்க வேண்டும். இனிய
சுபாவமும் இன்சொல்லும் மற்றவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பட்ட பிரச்சனைகளில் பரிவும் புரிந்துகொள்ளும் மனப்பாங்கும் இருக்க வேண்டும். அவர்களுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கு சித்தமாக இருக்க வேண்டும். மனக் கவலைகள் இன்றி உற்சாகமாக இருக்க வேண்டும். வீட்டுப்பிரச்சினைகளை தலை மேல் போட்டுக்கொள்பவராக இருக்கக் கூடாது. தாபனத்தின் இலக்கை நோக்கிய செயற்பாடுகள் சார்ந்த தரவுகள் மனப்பாடமாக இருக்க வேண்டும். ஒரு சந்தர்ப்பம் ஏற்படுமாயின் விலாவாரியாக தகவல்களை உடன் வழங்க ஆயத்தமாக இருக்க வேண்டும். அதற்கான நினைவாற்றலை வளாத்துக்கொள்ள வேண்டும். பொறுப்புக்கள் என்று வரும் போது அவற்றை தட்டிக் கழிக்க கூடாது. பிறர் மேல் தவறுகளை போடுதலும் ஆகாது. ஒரு தொண்டர் ஆற்றும் எந்த கருமமும் தலைமைத்துவத்தின் மேற்பார்வையிலேயே நடைபெறுமாதலால் எந்த தவறுக்குமே தலைமைத்துவமே பொறுப்பு வகிக்கவேண்டும். மேலும் கடினமான பொறுப்புக்களை தொண்டர்கள் மீது சுமத்தாமல் தானே ஏற்று செய்தல் வேண்டும். இந் நாட்களில் அனைத்து முயற்சிகளும் நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கான தலைமை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியே மேலே ஆராயப்பட்டது. ஆனால் பலதுறைகள் சரியான தலைமைத்துவத்தினை எதிர்நோக்கியுள்ளன. முக்கியமாக அரசியலில் பெரும் போட்டாபோட்டி நிலைமை அவதானிக்கப்படக் கூடியதாக உள்ளது. இன்று நேற்று அல்ல அன்றுதொட்டே பல நாடுகள் தலைமைத்துவத்திற்கான போட்டியில் ஈடுபட்டிருப்பதை எவரும் மறுக்க முடியாது. அதனால் தான் இரு பெரும் உலக மகா யுத்தங்கள் நடந்து முடிந்துள்ளது. ஐம்பெரும் வல்லரசுகள் மற்றொரு உலக யுத்தத்திற்கு முகம் கொடுக்க கூடிய ஆயுத தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ளன. இந்தியா, பாக்கிஸ்தான், கொரியா , உள்ளிட்ட பல நாடுகள் அணு பரிசோதனைகளில் வெற்றி பெற்றுள்ளன. இந்நாடுகளில் எல்லாம் அரசியல் நடவடிக்கைகள் சீராக இருக்க வேண்டுமாயின் நல்ல தலைமைத்துவத்தின் வழிகாட்டல் அவசியத்தின் மேல் அவசியமாகும். அல்லாத பட்சத்தில் இலட்சக்கணக்கான உயர் அழிவுகளை உலகம் மீண்டும் எதிர்நோக்க வேண்டியதாகிவிடும்.

அடுத்து பட்டினிச்சாவு பல நாடுகளை ஆக்கிரமித்துள்ளது. விவசாயம் மருத்துவம் இரண்டு துறைகளுமே சரியான தலைமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் சனத்தொகை அதிகரிப்பிற்கு ஈடுகொடுக்க




கூடிய வகையில் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டுமாயின் புதிய திட்டங்கள் அமுலாக்கப்படவேண்டும். சோமாலியா உட்பட பல கறுப்பு இன மக்கள் வாழும் நாடுகள் உணவுப்பஞ்சத்தை எதிர்நோக்கியுள்ளன, சத்துணவு பற்றாக்குறை காரணமாக பல கறுப்பின மக்கள் நோய்வாய்பட்டு சாகும் நிலைக்கு ஆளாகியுள்ளனர். அவர்களுக்கு வேண்டிய சத்துணவு கிடைக்கும் வண்ணம். செயலாற்றுவதுடன் அத்தியாவசிய மருத்துவ உதவிகளையும் வழங்க கூடிய தலைமைத்துவம் உருவாக வேண்டும்.

உலக பொருளாதாரம் வீழ்சியடைந்துள்ளமை பல பிரச்சனைகளுக்கும் அடிப்படையாக உள்ளது.

வங்கித்துறை சீரமைக்கப்பட வேண்டும் ஏழை மக்களும் பண உதவி பெற்று முயற்சிகளில் ஈடுபடக்கூடியதாக புதிய தலைமைத்துவம் உருவாக வேண்டும்; வேறுபாடு இன்றி அனைத்து மனிதர்களுக்குமே அடிப்படை வசதிகளான் உணவு, உடை , இருப்பிடம் ஆகியன கிட்டவெண்டும். இவ்வுலகில் ஒரு சாரார் ஆடம்பரத்தின் உச்சியில் இருக்க மறுசாரார் ஏழ்மையில் துவழ்வதானது என்ன நியாயம்.?

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் 24 அஜித் ஷாலினியின் 18 வது திருமண நாள். இருவரும் வெற்றிகரமாக 18வது ஆண்டில் காலடி எடுத்து வைத்துவிட்டனர். திரையில் இருந்து ரியல் லைப்க்கு காதல் ஜோடியாக மாறியவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அனைவரும் அஜித் ஷாலினி ஜோடி போல வருவமா என்பது பெரிய கேள்வி.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிஷமும்... ஏன் ஒவ்வொரு நொடியும் நானா செதுக்குனதுடா...'' என்று கர்ஜித்திருப்பார் அஜித். அது அவரது ரியல் லைப்க்கும் பொருந்தும். அஜித் போல அத்தனை நேர்மறை எண்ணங்கள், தைரியம், தன்னம்பிக்கை கொண்ட ஒரு நபரை காண்பது மிகவும் அரிது.

# அஜித் ஷாலினி நிஜ வாழ்க்கையில்



தான் திரைப்படங்களில் ஏதேனும் வித்தியாசமான கெட்டப் போட்டால், அதனுடனே வீட்டிற்கு சென்று ஷாலினி முன்பு தோன்றி அவரை ஆச்சரியப்படுத்த அஜித் தவறியதே இல்லை. சிட்டிசன் படப்பிடிப்பின் போது தான் போட்ட ஒவ்வொரு கெட்டப்புடன் ஷாலினியை வீட்டில் சந்தித்து இன்ப அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளார் அஜித்.

ஒவ்வொரு உறவில் காதல், நெருக்கம் குறையாமல் இருக்க தேவையே இப்படியான எதிர்பாராத இன்ப அதிர்ச்சி தான்.

அமர்களம் படத்தில் ஒரு காட்சியில் கோபத்தில் கத்தியை தூக்கி எறியும் காட்சி... அஜித் எறிந்த கத்தி ஷாலினியை லேசாக பதம் பார்த்துவிட்டது. உடனே... கட் கட் கட்... என அலறியடித்து ஷூட்டிங்கை பாதியில் நிறுத்தி மருத்துவ உதவிகளை உடனடியாக வரவழைத்துள்ளார் அஜித். வேறொரு நபருக்கு அடிப்பட்டதற்கு இப்படி துடித்துப் போகிறாரே என்று அப்போதே அஜித்தை கண்டு வியந்திருக்கிறார் ஷாலினி.

அமர்களம் படப்பிடிப்பு தளத்தில் தான் இவர்களுக்கு காதல் மலர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஷாலினி மீது தனக்குள்ள

மனைவியின் கனவுகளுக்காக உழைக்கும், உறுதுணையாக நிற்கும் கணவன் அஜித். கணவனின் பெரும் துயர் காலத்தில் பக்கபலமாக இருந்து மரணத்தின் பிடியில் இருந்து மீட்டெடுத்து வந்த மனைவி ஷாலினி.

பில்லா 2 படத்தில் ''என் வாழ்க்கையில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பத்தை சுற்றி வளைக்காமல் நேராக அவரிடமே கூறிவிட்டார் அஜித். ஏற்கனவே அவர் மீது பிரியம் கொண்டிருந்த ஷாலினி, வீட்டில் அப்பாவிடம் பேசுமாறு கூறியுள்ளார். அஜித் ஷாலினி இருவருக்குள்ளும் காதல் பூத்துவிட்டது என்று அமர்களம் படப்பிடிப்பின் போதே செய்திகள் வந்தவண்ணம் இருந்தன. மேட் ஃபார் ஈச் அதர் என அனைவரும் புகழ்ந்து பேசும் வகையில் இருந்த ஜோடி அஜித் ஷாலினி. ரசிகர்கள், திரையுலக பிரபலங்கள் என பலரும் இந்த ஜோடியின் திருமண நாளுக்காக காத்திருந்தனர்.

அஜித்தின் பாசிட்டிவ் திங்கிங் போலவே, அவர் வாழ்வில் அப்போது எல்லாமே பாசிட்டிவாக நடந்தது. தனது காதல் துணையை ஏப்ரல் 24, 2000 அன்று கரம் பிடித்தார் அஜித்.

அஜித்தையும் ரேஸிங்கையும் பிரிக்க முடியாது என்பது அனைவரும் அறிந்தது தான். சோழவரத்தில் நடந்த ஒரு ரேஸில் அஜித் பங்கெடுத்துக் கொண்டார். திடீரென எதிர்பாராத தருணத்தில் அஜித் விபத்தில் சிக்கினார்.

ஏற்கனவே பல முறை அவர் இப்படியான விபத்தில் சிக்கியதுண்டு. ஆனால், இந்த முறை விபத்து மிக அபாயமானதாக இருந்தது. அஜித்தின் முதுகு எலும்புகள் உடைந்து சிதறின. அவர் மீண்டு வருவாரா என்று அச்சப்படும் அளவிற்கு அந்த விபத்தும், அதனால் அஜித்திற்கு உண்டான எலும்பு முறிவுகளும் மிகவும் அபாயமனதாக இருந்தது.

அந்த விபத்தில் இருந்து அஜித் மீண்டு வர இரண்டே விஷயங்கள் தான் காரணம். ஒன்று அஜித்தின் தைரியம் இரண்டாவது ஷாலினியின் ஊக்கமும் காதலும். அதன் பிறகு உடல் ரீதியாக அஜித் பல ஆரோக்கிய சிக்கல்களை எதிர்கொண்டார். அவரது உடல் எடை கூட துவங்கியது. நிறைய மருத்துவம், மருந்துகள் என எடை போட துவங்கினார். இதை அறியாமல் சிலர் அஜித்தை குண்டாகி விட்டார் என்று கூறி கேலியும் செய்தனர்.

அஜித் திருமணத்திற்கு முன்னர் புகைக்கும் பழக்கம் கொண்டிருந்தாராம். ஷாலினிக்கு புகைப்பது பிடிக்காது என்று அறிந்ததில் இருந்து இன்று வரை அஜித் புகைப்பிடிப்பதே இல்லை. சினிமாவில் மட்டும் காட்சிகளுக்காக புகைக்கும் அஜித் ரியல் லைப்பில் புகையை விட்டு 17 ஆண்டுகள் ஆகின்றன. ஷாலினிக்காக எதையும் செய்ய தயங்கமாட்டார் அஜித். அந்த அளவிற்கு ஷாலினி மீது காதல் வைத்துள்ளார் தல.

இன்றும் தமிழக திரையுலகில் நிறைய நடிகர்களை சிறந்த நடிகர், மாஸ் ஹீரோ, கிளாஸ் ஹீரோ என்று புகழ்வார்களே தவிர, ஜென்டில்மேன் என்று புகழப்படும் ஒரே நடிகர் அஜித் தான்.

இவருடன் நடித்த பல நடிகைகள் கூறும் ஒரு வார்த்தை அவரை போல ஜென்டில்மேன் வேறு யாரையும் திரை உலகில் காண இயலாது என்பது தான். அனைத்து பெண்களும் தனக்கான வருங்கால கணவன் இப்படியாக தான் இருக்க வேண்டும் என்றே விரும்புகிறார்கள்.

பல பெண்கள் 90களில், 2000களில் அஜித்தை போன்ற ஜோடி வேண்டும் என்று விரும்பியுள்ளனர். பல இளைஞர்கள் அஜித் போல ஆகவேண்டும் என்று விரும்பி இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு எல்லாம் அஜித் கூறுவது...'' நீங்கள் காணும் அஜித் வேறு, உண்மையான அஜித் வேறு. என் வாழ்வில் நான் கடந்து வந்த வலிகள் அதிகம். எனவே, ஒரே ஒரு அஜித் போதும். நீங்கள் அவ்வளவு வலிகளை கடந்து வர வேண்டாம்'',

இவர் இயல்பானவர்! நல்ல நடிகனாக மட்டுமின்றி, நல்ல கணவனாக, நல்ல தகப்பனாக, நடிகன் என்ற கெத்து காண்பிக்காமல், ஷூட்டிங் முடிந்த பிறகு தனது இயல்பு வாழ்க்கையில் அதிக கவனம் செலுத்தும் நடிகர் அஜித் பிரோமஷனுக்கு வருவதில்லை என்று சிலர் புகார் கூறினாலும் அதை எல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை அஜித். பிரமோஷனை காட்டிலும் தயாரிப்பாளருக்கு வேறு வகையில் நிறைய உதவிகள் செய்பவர் அஜித். ரீல் லைப், ரியல் லைப் இரண்டிலுமே அஜித் ஒரு சிறந்த ஜென்டில்மேன்.

★★★



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**வணக்கம் அன்பான ஒளிஅரசியே!**

நான் மாதம் தோறும் ஒளிஅரசியை தவறாமல் வாசித்து வருகின்றேன். அதிலும் சமூகப்பிரச்சினைகளை விதவிதமாய் எடுத்துரைக்கும் கழுகுப்பார்வை பகுதி எனக்கு மிகவும் பிடித்த பகுதியாகும். அதனால், அண்மையில் நான் அறிந்த ஒரு விடயத்தையும் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.



# பார்ப்பவைதான் பாடமாகிறது

காலம் எத்தனை எத்தனை கடினங்களைப் பரிசளிக்கின்றது என்பது ஒவ்வொரு நாளைய பத்திரிகைச் செய்தியிலும் தெளிவாகப் புரிகின்றது. நாளாந்தம் நாம் பார்க்கும் ஒவ்வொரு பத்திரிகையிலும் ஏதாவது ஒரு கொடூரம் இடம்பெறாமல் இல்லை. அண்மையில் நான் வாசித்த ஒரு விடயத்தினைப்பற்றி இங்கே பகிரவிரும்புகின்றேன்.

தந்தை கொடூரமாகத் தாக்கியதில் எட்டு வயதுச் சிறுவன் இரண்டு கால்களும் முறிந்தநிலையில் வைத்தியசாலையில் அனுமதி எனக்கூறியது அச்செய்தி. தன்னை பிம்பமாகக்கொண்ட தனது மகனை இவ்வாறு யாரோ ஒரு எதிராளியை அடிப்பது போல அடித்து துன்புறுத்த மனிதஉணர்வுள்ள ஒருவனால் எப்படிமுடியும்? அவர் ஏற்கனவே மகளைத்தாக்கிய குற்றச்சாட்டில் சிறை சென்றவர் எனத் தொடர்ந்தது செய்தி.

நிச்சயமாக சாதாரண நிலையில் இவ்வாறு ஒருவனால் நடந்துகொள்ளவே முடியாது. தன்னிலை மறந்த நிலையிலேயே இவ்வாறு நடந்து கொள்ளமுடியும். அதாவது போதைப் பாவனை உள்ளவராக இருக்கலாம் என எண்ணத்தோன்றுகின்றது.

தந்தையே மகனின் முதல் ரோல்மொடல் எனக்கூறுகின்ற வேளையில் இவ்வாறான தந்தையர்கள் மோசமான வன்முறைச் சிந்தனை உள்ள சிறார்களையே உருவாக்குவார்கள். அதனைப் பெற்றவர்கள் உணர வேண்டும். அந்தக்கணத்தில் பத்து மாதம் அவனைத் தன் வயிற்றில் சுமந்து இந்த உலகிற்கு அளித்த தாயின் நிலையை எண்ணிப்பாருங்கள். அச்சிறுவனை தாய்தான் வைத்தியசாலைக்கு தூக்கிச்சென்றிருக்கின்றார்.

இவ்வாறான ஒருவனோடு வாழ்க்கை நடத்தும் அந்தப்பெண்ணில் நிலையை எண்ணிப் பார்த்தால் முழு உடலுமே நடுக்கம் காணுகிறது. பெண்பிள்ளை, ஆண்பிள்ளை என வேறுபாடு இல்லாது தனது இரணியத்தை வெளிப்படுத்தும் இவ்வாறான ஆண்களை சட்டம் கடுமையாக தண்டிக்க வேண்டும்.

இவ்விடயத்தில் பெண்கள் மீதும் தவறிருக்கிறது, ஆரம்பத்தில் கணவன் தானே என எண்ணி கணவனின் கொடுமைகளை வெளிப்படுத்தாது விடுவதனால் தான் மேலும் மேலும் அவ்வெண்ணம் தலைக்கேறி பிள்ளைகளையும் கொடூரமாகத் தண்டிக்குமளவிற்குச் செல்கிறது.

பிள்ளைகளின் தவறுகள் கண்டிக்கப்படவேண்டியவையே தவிர தண்டிக்கப்படவேண்டியவை அல்ல. அதற்கான அணுகுமுறைகள் உள்ளன. அவை அன்போடு கலந்ததாக இருக்க வேண்டுமேயொழிய மிருகத்தனமானதாக அல்ல, இதுபோன்ற செய்திகள் உலகில் மனிதம் செத்துவிட்டது என்பதையே பறைசாற்றுகின்றது.

நாம் ஒரு விடயத்தைக் கவனிக்கவேண்டும். பிள்ளை கெட்ட வார்த்தையைப் பேசுகிறது என்றால் அதை எங்கோ கேட்டிருக்கிறது என்றுதானே அர்த்தம். பிள்ளைகள் எதைப்பார்த்து வளர்கின்றார்களோ அதையே பின்பற்றுவார்கள். அதுவே அவர்களின் பாதையாக மாறிவிடும். பெற்றவர்கள் புரிந்து நடந்தால் பிள்ளைகள் உணர்ந்து நடப்பார்கள்.

சுபாசினி, கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் எடை அதிகரிப்பு என்பது இன்று அனைவருக்கும் இருந்து வரும் ஒரு முக்கிய பிரச்சனையாகும். உயரத்திற்கு தகுந்த உடல் எடை இருக்க வேண்டியது மிகவும் அவசியம். உடல் எடை அதிகமாக இருந்தால் பல நோய்கள் நம்மை வந்து தாக்கும். தினமும் உடற்பயிற்சி, நடைப் பயிற்சி செய்வது உடல் எடையை குறைக்க உதவுகிறது. அதனுடன் சேர்ந்து உணவு விஷயத்தில் டயட் என்பது மிகவும் அவசியம். உடல் எடையை குறைப்பதற்காக சாப்பிடாமல் உண்ணாவிரதம் இருப்பது என்பது முற்றிலும் முட்டாள் தனமான முடிவாகும். சாப்பிடாமல் இருந்தால் உடலில் ஆரோக்கியம் குறைந்து விடும். இது ஆபத்தான நிலைக்கு கொண்டு சேர்த்து விடும். இந்த பகுதியில் சில ஜூஸ் வகைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பருகி உங்களது உடல் எடையை குறைத்துக் கொள்ளலாம்.



# உடல் எடையை எளிமையாக குறைக்க




**க்ரீன் டீ**

க்ரீன் டீ உடலின் கலோரிகளை வேகமாக கரைக்கும். அதிலும் இரவில் படுக்கும் முன் ஒரு டம்ளர் க்ரீன் டீ பருகினால், இரவு முழுவதும் உடலின் மெட்டபாலிசம் அதிகமாக இருந்து, கலோரிகளை இரவு முழுவதும் எரிக்கும். இப்படி தினமும் இரவில் செய்தால், உடல் எடை வேகமாக குறையும்.

**மிளகு**

மிளகு ஆய்வுகளிலும் உடலில் உள்ள கொழுப்புக்களை மிளகு வேகமாக கரைக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது. அதிலும் இரவு உணவில் மிளகை அதிகம் சேர்த்து உட்கொள்ள, இரவு முழுவதும் உடலில் உள்ள கொழுப்புக்கள் கரைந்து, உடல் எடை வேகமாக குறையும்.



**உடல் எடையைக்குறைக்கும் ஜூஸ்**

**தேவையான பொருட்கள்**

*1 வெள்ளரிக்காய், 5 எலுமிச்சை, 15 புதினா இலைகள், 2 டேபிள் ஸ்பூன் துருவிய இஞ்சி, 2.5 லிட்டர் தண்ணீர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்முறை**

ஒரு வெள்ளரிக்காய்,2 எலுமிச்சையை வட்ட வட்டமாக வெட்டி தனியாக வைத்துக் கொள்ளவும். பின்னர் மீதமுள்ள 3 எலுமிச்சையை ஒரு பாத்திரத்தில் பிழிந்து, அதில் புதினாவை நறுக்கி போட்டு, அதில் 1.5 லிட்டர் நீர் ஊற்றி நன்கு கிளறி விட வேண்டும். பின்பு அதில் இஞ்சி மற்றும் மீதமுள்ள தண்ணீரை ஊற்றி, அத்துடன் வெள்ளரிக்காய், எலுமிச்சங்காய் மற்றும் எலுமிச்சையை போட்டு நன்கு கிளறி, 24 மணிநேரம் ஊற வைத்து, பின் குடிக்க வேண்டும். இப்படி 3 நாட்கள் தொடர்ந்து செய்து குடித்து வந்தால், தொப்பை குறைவதைக் காணலாம். வேண்டுமெனில் ஒரு வாரம் கழித்து மீண்டும் 3 நாட்கள் தொடரலாம்.

**★ வெள்ளரிக்காய்**

வெள்ளரிக்காயில் நீர்ச்சத்து அதிகம், கலோரிகள் குறைவு, நார்ச்சத்துக்கள் அதிகம் மற்றும் உடலின் அல்கலைன் அளவை சீராக பராமரிக்க உதவும். மேலும் இது வயிற்றில் சேரும் கொழுப்புக்களை கரைக்க மிகவும் சிறப்பான உணவுப் பொருளும் கூட.

**★ எலுமிச்சை**

எலுமிச்சையில் பெக்டின் என்னும் நார்ச்சத்து அதிகம் உள்ளது. இது பசியைக் கட்டுப்படுத்த பெரிதும் உதவும். மேலும் இவை உடலில் சேரும் நச்சுக்களை மட்டுமின்றி, தேவையில்லாத கொழுப்புக்களையும் கரைத்து வெளியேற்றும்.

**★ புதினா**

புதினா உணவின் வாசனை மற்றும் சுவையை அதிகரிக்க உதவுவதோடு, புத்துணர்ச்சி அளித்து, பசியைக் கட்டுப்படுத்துவதிலும் மிகவும் சிறந்தது. மேலும் புதினா வாய் துர்நாற்றத்தையும் தடுக்கும்.

**★ இஞ்சி**


கொலம்பியா பல்கலைக்கழகத்தில் உள்ள மனித ஊட்டச்சத்து நிறுவனம் நடத்திய ஆய்வு ஒன்றில் கலந்து கொண்டவர்கள், குடிக்கும் பானங்களில் இஞ்சியை சேர்த்துக் கொண்டு வந்தனர். அப்படி இஞ்சியை சேர்த்ததால், அவர்கள் வயிறு நிறைந்தது போன்று உணர்ந்ததோடு, குறைவான அளவிலேயே உணவை உட்கொண்டனர். இதனால் இஞ்சியானது அதிகப்படியான கலோரிகளை எரித்து, அதிகப்படியான கொழுப்புக்களை கரையச் செய்ததாம்.

**★ தண்ணீர்**

தண்ணீர் உடலின் நீர்ச்சத்தை அதிகரிப்பதோடு, உடற்பயிற்சியின் போது தசை மற்றும் மூட்டுகளில் தோய்வு ஏற்படாமல் தடுக்கும். மேலும் நீரை அதிக அளவில் தொடர்ந்து குடித்து வந்தால், அது உணவின் மீதுள்ள நாட்டத்தைக் குறைக்கும்.

**★ கரட் ஜூஸ்**

கரட் ஜூஸ் உடல் எடையை குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. கரட் குறைந்த கலோரிகளை கொண்டது ஆகும். இதில் அதிகளவு நார்ச்சத்துக்கள் உள்ளன. ஒரு பெரிய கப் கரட் ஜூஸ் குடிப்பதால் உங்களது வயிறு மதிய உணவு நேரம் வரை நிறைந்தே இருக்கும். இதினால் நீங்கள் தேவையில்லாத ஸ்நேக்ஸ் வகைகளை சாப்பிட வேண்டிய தேவை இருக்காது. இது உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை குறைத்து உங்களது உடலுக்கு ஆரோக்கியத்தை தருகிறது. அப்பிள், அரை ஆரஞ்சு, சிறிதளவு இஞ்சி ஆகியவற்றின் கலவையானது



உங்களது உடலில் உள்ள தேவையற்ற நச்சுக்களை வெளியேற்ற உதவுகிறது.

**★ பாகற்காய் ஜூஸ்**

பாகற்காய் ஜூஸ் என்றால் நீங்கள் அலறுவது தெரிகிறது. ஆனால் உண்மையில் பாகற்காய் உடல் எடையை குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இது உடலுக்கு தேவையான அளவு மெட்டபாலிசத்தை உருவாக்குகிறது. மேலும் இதில் மிகக் குறைந்த அளவு கலோரிகளே உள்ளன. 100 கிராம் பாகற்காயில் வெறும் 17 கலோரிகள் மட்டுமே உள்ளன.

குறிப்பு மேற்கூறிய பொருட்களைக் கொண்டு ஜூஸ் தயாரித்து, தினமும் குடித்து வந்தால், 3 நாட்களில் தொப்பை குறைவதை நன்கு காணலாம். அதற்காக மூன்றே நாட்களில் தொப்பை முற்றிலும் குறையாது. தினமும் குடித்து வந்தால், தொப்பை குறைந்து கொண்டே வருவதை காண முடியும்.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை எனும் தெய்வீகம்








து.திலக் (கிரி)
சுவிஸ்

இசை இயற்கையின் வடிவம். இயற்கையின் அதிர்வலைகளும் இசையின் அலைகளும் ஒன்று போலவே அமைந்துள்ளதில் இருந்தே இதனை நாம் அறியலாம். இயற்கையாக வளர்ந்துள்ள மூங்கிலில் காற்று மோதும் போது இசை பிறக்கிறது. இயற்கையின் பிரதிபலிப்பான இசையில் ஏற்படும் லயம், தாளம், காலப்பிரமாணம், ஆழம் யாவும் இயற்கையில் இருந்தே துவங்குகிறது.

கடலின் அலை ஓசை, காற்றின் ஓசை, காற்றில் இலைகள் ஆடும் ஓசை, மழைத்துளியின் ஓசை, மரத்தில் துளை போடும் மரங்கொத்தியின் அலகின் ஓசை யாவுமே இசையாகத் தான் துவங்குகின்றன. இந்த இசைக்கு மனிதன் தன்னுடைய புத்திக்கூர்மையால் ஒரு கலையாக உருவம் கொடுத்திருக்கிறான்

மனிதர்களிடம் இருந்து இசையை பிரிக்கவே முடியாது, அனைத்து உணர்ச்சிகளிலும் இசையை மனிதன் பயன்படுத்தி வருகிறான், தனது பிறப்பில் இருந்து இறப்பு வரை இசையை தன்னோடு சுமந்தே செல்கிறான் காரணம் இசை மேல் அவன் வைத்து உள்ள அளவற்ற காதல். காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப இசையும் மாறிக்கொண்டு வருகிறது.

இசை என்பது பெருங்கடல். அது தெய்வீகம். அந்தக்கடலில் மூழ்கி இசையால் உலகை வசப்படுத்தும் கலைஞர்கள் பலருள்ளனர். அத்தகைய இசைச்சொத்துக்களை வெளிப்படுத்தும் நோக்கிலேயே கலைவளர்ப்போம் என்னும் இப்பகுதியை பிரசுரித்துவருகின்றோம். **ஈழதேசத்தின் இசைஞானியும் மூத்த இசையமைப்பாளருமான கண்ணன் மாஸ்ரர் அவர்களின் இசைவாரிசான சாய் தர்சனே இம்மாத ஒளிஅரசியின் கலைவளர்ப்போம் பகுதியை அலங்கரிக்கவுள்ள இசைச்சொத்தாகும்.**

**வணக்கம் கூறி பண்பாட்டு மரபோடு ஆரம்பமானது எமது உரையாடல். எமக்கு மட்டுமல்லாது ஒளிஅரசியின் அனைத்து வாசகர்களுக்கும் தனது வணக்கத்தினைத் தெரிவித்து எம்மோடான உரையாடலை ஆரம்பித்தார்.** சாய்தர்சன் தனது ஆரம்பக்கல்வியை இளையதம்பி மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்துள்ளார். தந்தையைப்போல இசையமைப்பாளராக வரவேண்டும் எனும் எண்ணம் சிறுவயதிலேயே தனது ஆழ்மனதில் உதித்துவிட்டதாகவும் வினோதினி ஆசிரியரிடமே தனது ஆரம்ப வாய்ப்பாட்டை கற்றுக்கொண்டதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து குலசிங்கம் மாஸ்ரர், ஜெயச்சந்திரன் மாஸ்ரர், ஆகியோரிடமும் கற்கும் போது தந்தையின் யோசனைக்கேற்ப பக்கவாத்தியம் கற்க வேண்டியதன் அவசியத்தின் நிமித்தம் மிருதங் கவாத்தியத்தினை துர்ராஜா மாஸ்ரர் மகேந்திரன் மாஸ்ரர், கண்ணதாசன் மாஸ்ரர், ஆகியோரிடம் கற்றதாகவும் இசையமைப்பாளராகவேண்டும் எனும் ஆசைக்கேற்ப கீபோட் கற்க ஆசைப்பட்டேன். எனவும் அதன் பின்னர் அப்பாவிடமும் அண்ணாவிடமும் அதற்கான ஆரம்ப நுட்பங்களைக் கற்றுக்கொண்டேன் எனவும் கூறினார்.

**உங்கள் இசைத்துறை பயணம் பற்றி குறிப்பிடுங்கள் எனக் கேட்டபோது,** நான் சிறுவனாக இருந்த காலத்தில் அப்பாவுடன் கலையகத்திற்குச் சென்றுவருவேன், அது எனக்கு மிகவும் பிடித்த விடயம். ஆரம்பத்தில் நல்லைக்கந்தன் பாடல் பதிவின் போது கண்ணதாசன் மாஸ்ரரின் அருகில் இருந்து மறக்காஸ் போடவிட்டனர், அதுவே எனது முதலாவது இசைப்பதிவாகும். பின்னர் அப்பாவுக்கு, ஶ்ரீகுகன் அண்ணாவிற்கு தபேலா, பாட் போன்றவற்றை வாசித்தேன்.

எனது முதல் பாடல் என்பது என்றுமே என்னால் மறக்கமுடியாதது. தர்மேந்திரா கலையகத்தின் பொறுப்பு பதவியில் இருந்த ஒரு சகோதரனுக்கும் எனது வளர்ச்சியில் முக்கிய பங்குண்டு. மின்சாரம் இல்லாத அக்காலத்தில் அவர் பல வழிகளில் எனக்கு துணையாக நின்று வழிநடத்தியிருக்கின்றார்.

கலைப்பரிதி அவர்களின் வரிகளில் திருமலைச்சந்திரன் அவர்கள் பாடிய பாடல். நவம்பர் மாதத்தில் ஒரு நாளில் மட்டுமே ஒலிக்கும் பாடல். எனது தந்தையாரின் இசையில் எனது இசையமைப்பில் முதல் முதல் வெளிவந்த பாடல். அப்பாடலின் தாக்கம் என்னை மட்டுமல்ல, அனைவரையுமே கலங்கவைத்துவிடும் என்றார் மிக உருக்கமாக.

**தாயகதேசத்தில் இசைத்துறையில் உங்களைக்கவர்ந்த பாடகர் யாரெனக் கூறமுடியுமா என்றபோது,** இசைத்துறையில் அவ்வாறான பல பாடகர்கள் உள்ளனரெனினும் மேஜர் சிட்டு அண்ணா அவர்களை எனக்குமிகவும் பிடிக்கும், அவரது பாடல்களில் தனியான ஒரு உணர்வு இருப்பதாக நினைக்கின்றேன்.

உங்கள் இசைத்துறையில் உங்கள் குடும்பத்தின் அதாவது முக்கியமாக துணைவி பற்றி, என்றதும் உண்மையில் இது ஒரு மிக அருமையான கேள்வி. ஒவ்வொரு இசைக்கலைஞனுக்கும் அவனது குடும்பமே மிகப்பெரிய துணை, கலைஞர்களின் மனநிலையின் தாக்கமே இசையாக வெளிப்படும். எனக்கு திருமணமாகி ஐந்து மாதங்கள்தான், இருப்பினும் என் மனைவியுடன் சில நாட்களே இருந்திருக்கின்றேன், எனது வேலைப் பழுபோன்ற காரணிகளால் அத்தகையதொரு நிலை. இருப்பினும் என்னை எந்த விதத்திலும் சோர்வடைய வைக்காது எனக்கு துணையாக உள்ளவர் என் மனைவி, இத்தருணத்தில் எனது நன்றிகளை அவருக்கு கூறிக்கொள்கிறேன், என்றார். சொல்லும்போதே அவரது குரலும் இனிமையானது போலத்தோன்றியது.

**இசைக்காக அண்மையில் கூட ஒரு விருது கிடைத்துள்ளது, உங்களுக்கு கிடைத்துள்ள விருதுகள் பற்றி கூறுங்கள் என்றதும்,** கலைஞர்களுக்கு பாராட்டுகளே மிகப்பெரிய பலம். ஈழத்தமிழர்கள் எனக்கு கொடுக்கும் உற்சாகம், என்பது மிகப்பெரிய விருது. 2017 இல் தமிழ் பிசியின் சிறந்த இசையமைப்பாளர் விருது கிடைத்தது, அது எனக்கு மிகப்பெரிய சந்தோசம். எனக்கு அவ்விருது கிடைக்க உதவிய தமிழ்மக்களுக்கும் அதன் நிர்வாகி லங்கேஸ் அண்ணாவிற்கும் எனது நன்றிகள். இவ்வருடம் குளோபல் ரெலிவிஷனின் மிகச்சிறந்த இசையமைப்பாளர் விருது கிடைத்தது. அதன் நிர்வாகி செந்தூரன் அண்ணாவிற்கும் ஏனைய அனைவருக்கும் எனது நன்றிகள்.

**இலத்திரனியல் வாத்தியக் கருவிகளின் வருகையினால் எமது பண்டைய தவில் போன்ற தோல் வாத்தியக்கருவிகளின் பாவனை அதிகளவில் குறைத்துள்ளது, இது பற்றிய உங்கள் கருத்து என்றதும்** உண்மை இது பாதகமான ஒரு விடயமே. இதனால் தோல்வாத்தியக்கலைஞர்கள் பாதிக்கப்படுவது உண்மைதான், ஆனால் அதற்காக குறைகூறவும் முடியாது. ஏனெனில் பாடலுக்கான பணஒதுக்கீடு என்பது குறைவாக உள்ளதனால் அவ்வாறு செய்யவேண்டியுள்ளது, ஆனால் இவ்விடயத்தில் சென்னையில் சட்ட திட்டங்கள் உள்ளது, அது எமது நாட்டிலும் வரவேண்டும் என்பதை அன்புடனும் உரிமையுடனும் கூறிக்கொள்கின்றேன்.


**இசைத்துறையில் வளரத்துடிக்கும் கலைஞர்களுக்கு நீங்கள் கூறுவது என்றபோது,** பல இசைக் கலைஞர்கள் ஏமாற்றங்களிலும் தோல்விகளிலும் இருக்கலாம், ஆனால் இசையை நேசித்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் இசை எம்மை உயர்த்தும், அதற்கான நேரத்தினை காலம் தான் முடிவு செய்யும். சோர்ந்துபோகாது இசையுடன் பயணியுங்கள் என்றவர் **ஊடகங்களே கலைஞர்களை வெளிக்கொணரும் மிகப்பெரிய சக்தி என்பதையும் கூறி ஒளி அரசியின் சமூகப்பணிகளையும் அதன் வளர்ச்சிக்காக தனது வாழ்த்துக்களையும் மனம் நிறைந்த நன்றியையும் கூறினார்.**

**இசைக்காக வாழ்வோம், இசை எம்மை வாழ வைக்கும்** என்ற தாரக மந்திரத்துடன் தனது பகிர்வை நிறைவுசெய்துகொண்டார். நாமும் நன்றிகூறி விடைபெற்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வா**ழ்க்கை என்பது பல்வேறுபட்ட பிரச்சினைகளைக் கொண்டதாகவே உள்ளது. சில தீர்வுகள் எம்மால் கண்டு கொள்ளக் கூடியதாகவும் சிலவற்றிற்கான தீர்வுகள் எம் சிந்தைக்கு எட்டாததாகவும் உள்ளது. அவ்வாறான சில பிரச்சினைகளை அறிவும் அனுபவமும் கொண்டவர்களிடம் பெற்றுக்கொள்வதே சாலச்சிறப்பு. அந்த வகையில் சத்குரு அவர்கள் வழங்கும் பதில்கள் வாழ்க்கைக்கு துணையாகும் என்பதால் வாசகர்களின் நலன் கருதி இங்கே பிரசுரிக்கின்றோம்.



# சத்குரு பதில்கள்

**மாமியார்மருமகள் சண்டைக்கு முடிவே இல்லையா?**

மாமியார் மருமகள் பிரச்சினை இங்கு மட்டுமல்ல உலகமுழுக்க உண்டு என்பதற்கு ஒரு வேடிக்கையான குட்டிக் கதை சொல்லும் சத்குரு, இந்த பிரச்சினைக்கு பின்னாலுள்ள பெண்களின் உளவியல் பற்றி பேசுகிறார்! சரி இதற்குத் தீர்வு என்ன? தொடர்ந்து படித்தறியுங்கள்!

**என் அம்மாவை ஒரு மாமியாராக பாட்டி நடத்திய விதத்தைக் கண்டு வேதனைப் பட்டவன் நான். ஆனால், இன்று என் அம்மா தான் மருமகளாக இருந்து அனுபவித்ததையெல்லாம் மறந்துவிட்டவள் போல, என் மனைவியிடம் வெறுப்பைப் பொழிவது கண்டு அதிர்கிறேன். தலைமுறை தலைமுறையாக மாமியார்மருமகள் உறவு மட்டும் ஏன் இப்படி மோசமாகவே தொடர்கிறது?**

ஓர் இளைஞன் தான் விரும்பும் பெண்ணைத் தன் அம்மாவிடம் அறிமுகம் செய்வதற்காக, வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தான். அவள் தன்னுடன் நான்கு தோழிகளையும் அழைத்து வந்தாள். அந்த இளைஞன் தன் அம்மாவிடம், வீட்டுக்கு வந்திருக்கும் இந்த ஐந்து பெண்களில் யாரை நான் மணக்க விரும்புகிறேன் என்று கண்டுபிடி, பார்க்கலாம்! என்று வேடிக்கையாகப் புதிர் போட்டான். அம்மாவைக் குழப்புவதற்காக அத்தனை பெண்களிடமும் ஒரே மாதிரியாகச் சிரித்துப் பேசினான். விருந்து முடிந்து பெண்கள் விடைபெற்றுச் சென்றதும், அம்மா அவனிடம், சிவப்பு ரொப்ஸ் அணிந்திருந்த பெண்ணைத்தானே நீ விரும்புகிறாய்? என்றாள். இந்த உடைமை உணர்வு மட்டும் பெண்களிடத்தில் இல்லாதிருந்தால், எந்த மனிதக் குழந்தையும் எதிரிகளிடமிருந்து தப்பி உயிர் பிழைத்திருக்காது. தாய் தன் உடைமை என்று நினைத்துப் பார்த்துக் கொள்ளாவிட்டால், சிசுவுக்கு அதன் குழந்தைப் பருவம் இனிமையற்றுப் போய் விடும். மகன் திகைத்துப் போய், அவளிடம் நான் அதிகம் பேசக்கூட இல்லையே, எப்படி அம்மா கண்டுபிடித்தாய்? என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டான். சுலபம்! அவளைப் பார்த்த கணத்திலேயே ஏனோ அவளை எனக்குப் பிடிக்கவே இல்லை என்றாள் அம்மா. இது இங்கல்ல அமெரிக்காவில் புழங்கும் நகைச்சுவை! மாமியாரும், மருமகளும் சேர்ந்து வாழாத மேலை நாடுகளிலும் கூட, மாமியார் மருமகளுக்கு இடையில் இனிமையான உறவு இருப்பதில்லை என்று புரிகிறதா? இதற்கு அடிப்படைக் காரணம், பெண்களிடத்தில் இயல்பாகவே இருக்கும் உடைமை உணர்வுதான். இந்த உணர்வு இல்லையென்றால், குழந்தையை ஈன்றவுடன் அதை பாதுகாக்கும் உணர்வு தாயிடம் இல்லாமல் போயிருக்கும். உயிரினத்தில் அடுத்த தலைமுறை என்று ஒன்று பாதுகாக்கப்படாமலே போயிருக்கும். இந்த உணர்வை மிருகங்களிடம் கூட நீங்கள் காணலாம்.

உடல்ரீதியான இந்தப் பாதுகாப்பு உணர்வு, மனிதர்கள் காடுகளில் வாழ்ந்த காலத்தில் பெண்களுக்கு இயற்கை கொடுத்த வரம். இந்த உடைமை உணர்வு மட்டும் பெண்களிடத்தில் இல்லாதிருந்தால், எந்த மனிதக் குழந்தையும் எதிரிகளிடமிருந்து தப்பி உயிர் பிழைத்திருக்காது. தாய் தன் உடைமை என்று நினைத்துப் பார்த்துக் கொள்ளாவிட்டால், சிசுவுக்கு அதன் குழந்தைப் பருவம் இனிமையற்றுப் போய் விடும். ஆனால், பெண்கள் ஒரு கட்டத்தில் இந்த உடைமை உணர்வைத் தாண்டி வரவேண்டும். அப்படி அவர்கள் கவனத்துடன் முழு விழிப்புணர்வுடன் அந்த நிலையைக் கடந்து வந்துவிட்டால், மாமியார் மருமகள் இடையில் பக்குவமான உறவுகள் பூத்துவிடும். இப்படி மிக நேர்த்தியாக வாழ்க்கையை நடத்தும் பெண்களும் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் குறைந்த எண்ணிக்கையிலேயே இருக்கிறார்கள்.

**மாமியார் மருமகள் அளவுக்கு மாமனார்மருமகன்களிடம் போராட்டம் இல்லையே எனில், ஆண்கள் பக்குவமானவர்களா?**

அப்படி இல்லை. ஆணிடமும் போராட்டம் இருக்கிறது. ஆனால், அது வேறு அளவில் வேறுவிதமாக இருக்கிறது. பொதுவாக, தன் மகளின் வாழ்க்கை சீராக, இனிமையாக அமைய வேண்டுமே என்ற கவலை தகப்பனிடம் இருக்கும். அப்படி அமைந்து அவள் சந்தோஷமாக இருந்துவிட்டால், போதும்! அவருக்குப் பூரண திருப்திதான். வேறு எது பற்றியும் யோசிப்பது இல்லை. தங்கள் மாப்பிள்ளைகளுடன் வித்தியாசமில்லாமல் மிக நட்பாகப் பழகும் மாமனார்கள் பலரை நீங்கள் சந்திக்கலாம். செஸ், கோல்ஃப், கேரம் என்று அவர்கள் இணைந்து விளையாடுவார்கள். சேர்ந்து பார்ட்டிகளுக்குப் போவார்கள். மாமியாரும், மருமகளும் முட்டி மோதும் அளவுக்கு மாமனாரும், மருமகனும் போராடுவதில்லை. காரணம், ஆண்களிடம் உடைமை உணர்வு குறைவு என்பதுதான்! உங்களுக்குள் இருக்கும் படைப்பின் மூலம் பொருள்தன்மையைக் கடந்தது. அதை உணர்த்தி உங்களை மெய்மறக்கச் செய்யும் எந்தவொரு வழிமுறையும் யோகாதான்.

**பெண்கள்தானே புதிய சூழ்நிலையில் அடியெடுத்து வைக்கிறார்கள்? ஆண்களுக்கு அந்தப் பிரச்சனை இல்லை என்பது ஒரு காரணமாக இருக்குமோ?**

பழைய காலமாக இருந்தால் நீங்கள் சொல்வது ஒருவேளை சரியாக இருக்கலாம். ஆனால், இன்றைக்குக் கூட்டுக் குடும்பங்களை எங்கே காணமுடிகிறது? திருமணமானதும், தனிக்குடித்தனம் போய்விடும் இளைஞர்கள்தானே அதிகம்! மாமியாரும், மருமகளும் வெவ்வேறு வீடுகளில் வாழ்ந்தாலும், அவர்களுக்குள் இருக்கும் கசப்பு உணர்வுகள் குறைந்ததாகத் தெரியவில்லையே! இது பெண்களின் கையில்தான் இருக்கிறது. மாமியாரும், மருமகளும் கவனமாகச் செயல்பட்டு, ஒரு கட்டத்துக்கு மேல் தங்கள் உடைமை உணர்விலிருந்து வெளியே வந்துவிட்டால், இருவர் உறவிலும் அமுதம் இனிக்கும்!

நன்றி இணையம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அருள்தாஸ் கிளைம்சன் (நிது) எழுதிய 'உணர்வுகளின் பாதை' கவிதை நூலின் வெளியீட்டு விழாவானது அண்மையில் மந்துவில் பாரதிதாசன் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. ஆசியுரையினை அருட்தந்தை செ.சுதர்ஷனும் தலைமையுரையினை நிகழ்விற்கு தலைமை வகித்த கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவனத்தின் உதவி விரிவுரையாளர் எஸ்.துஜான் அவர்களும் நிகழ்த்தினர். அரசியல் பிரமுகர்கள், படைப்பாளர்கள், கல்வியாளர்கள், பொதுமக்கள் எனப்பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மழலை ஹரிஷ்ணவி, மாணவிகள் தனுசியா, வினுசியா மற்றும் அர்ச்சனா, ஜெபன்சி, அபர்னா ஆகியோரின் நடனக் காட்சிகளும் திறனோடு அரங்கேறியமை சிறப்பாக அமைந்தது. கவி உலகின் புதுவரவாய் இணைந் துள்ள உணர்வுகளின் பாதை நூலாசிரியர் கிளைம்சனின் இலக்கியப்பயணம் இனிதாக ஒளிஅரசியும் வாழ்த்தி மகிழ்கின்றாள். தகவல் : ஒலுவில் ஆதிக்






ஒளிஅரசியின் ஆலோசகர்களில் ஒருவரான நூருல்அஜின் அவர்களின் கணவரும் வகவத்தின் தலைவருமான நஜ்முல் ஹீசைன் அவர்கள் எழுதிய இனிவரும் நாட்க ளெல்லாம், நஜ்முல் ஹீசைனின் நட்சத்திரக்கவிதைகள் ஆகிய இரண்டு நூல்களின் வெளியீடு கடந்த 08.04.2018 அன்று கொழும்பு ஆமர் வீதி பிரைட்டன் றெஸ்ற் ஹோட்டலில் இடம்பெற்றது. அந்நிகழ்வின் பதிவுகள் சில. நிகழ்விற்கு ஒளிஅரசி ஊடக அனுசரணை வழங்கியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் விருப்ப உணவுகளை
ரம்மியமான சூழலில் உண்டு மகிழ
யாழ். சுன்னாகத்தில்



# யாழ். Star Restaurant



சுத்தம் - சுகாதாரம் - சுவை - இதுவே எமது தனித்துவம்

- Hot Drinks
- Starters
- soup
- Devilled Dishes
- Fried Special
- Tandoori
- Lunch
- Fried Rice Dishes
- Noodils
- Briyani
- Kottu Rotti Special
- Srilankan Curry Dishes
- Breakfast
- Drinks
- Fresh Juice
- Ice Cream

Sri Lankan & South Indian Special

அனைத்து வகையான சைவ, அசைவ உணவு வகைகளும்


குறிப்பு : தொலைபேசி ஊடாக முற்பதிவுசெய்து உரியநேரத்தில் உணவுகளைப் பெறமுடியும்

- நிகழ்வுகளுக்கான ஓடர்களும் ஏற்கப்படும்

0212214115
0776220943

Jet motors Junction,
Chunnakam


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org